






74th Session
United Nations
General Assembly

முக்கிய தினங்கள்
செப்டம்பர் – 2019

## செப்டம்பர்
## 2019

# நடப்பு நிகழ்வுகள்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1. கார்பெட் புலிகள் காப்பகத்திற்கென சிறப்பு புலிகள் படையை அமைக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

**A) உத்தரகண்ட் ☑**

B) ஜார்க்கண்ட்

C) பீகார்

D) உத்தரபிரதேசம்



✓ கார்பெட் புலிகள் காப்பகத்திற்கென சிறப்பு புலிகள் படையை அமைக்க உத்தரகண்ட் அரசு முடிவு செய்துள்ளது. இப்படையில் 85 அதிகாரிகள் இருப்பார்கள். அவர்கள், கார்பெட் புலிகள் காப்பகப் பகுதியில் இருக்கும் புலிகளுக்கு ஈரடுக்கு பாதுகாப்பை வழங்குவார்கள். புலிகள் காப்பகத்தின் எல்லைகளில் அமைந்துள்ள கிராமங்கள் வழியாக சட்டவிரோதமாக வேட்டைக்காரர்கள் ஊடுருவுகிறார்களா என்பதை கண்காணிக்க இந்தச் சிறப்பு புலிகள் படை உதவும்.

✓ மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி சிறப்பு புலிகள் படையினர் நியமிக்கப்படுவர். மொத்தம் மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். முதலாவதாக, புலிகளுக்கு நெருக்கமான பகுதிகளில் வனத் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவார்கள். இரண்டாவது அடுக்கில் சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்பு செய்வார்கள். 3ஆவது அடுக்கில் உளவுத்துறையினர் தகவலளித்து அதன்மூலம் புலிகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் நீக்கப்படும்.

**2. Walk to Work on Wednesdays (WWW) என்னும் பரப்புரையைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

A) ஒடிசா

**B) மேகாலயா ☑**

C) திரிபுரா

D) நாகாலாந்து




✓ மேகாலயா முதலமைச்சர் கான்ராட் K சங்மா, 'Walk to Work on Wednesdays' என்னும் பரப்புரையை அம்மாநிலத்தில் தொடங்கியுள்ளார். இப்பரப்புரை, தேசிய அளவில் பிரதமரால் தொடங்கப்பட்ட 'Fit India' இயக்கத்தின் ஒருபகுதியாக உள்ளது. 'நடந்தே பணியிடத்துக்குச் செல்லுதல்' என்ற யோசனையானது கரியமிலவாயு உமிழ்வைக் குறைத்தல், நகரத்தில் நெரிசலைக் குறைத்தல் மற்றும் பொதுமக்களுக்கு "உடல்நலத்துடன் கூடிய உடற்பயிற்சி"யை அளித்தல் போன்ற பல்வேறு நன்மைகளை அளிக்கின்றது.

**3.பொருளாதாரப் புலனாய்வு அலகின் (EIU) பாதுகாப்பான நகரங்கள் குறியீட்டில் (SCI–2019) முதலிடம் பிடித்துள்ள நகரம் எது?**

A) ஒசாகா

B) பாரிஸ்

**C) டோக்கியோ ☑**

D) சிங்கப்பூர்



✓ 2019ஆம் ஆண்டிற்கான உலகின் பாதுகாப்பான நகரங்களின் பட்டியலை பொருளாதாரப் புலனாய்வு அலகு வெளியிட்டுள்ளது. டிஜிட்டல் பாதுகாப்பு, தனிநபர் பாதுகாப்பு, நலவாழ்வுப்பாதுகாப்பு உள்ளிட்ட 57 அம்சங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பட்டியலில், ஐந்து கண்டங்களைச் சேர்ந்த 60 நாடுகள் இடம்பெற்றுள்ளன. பாதுகாப்பான நகரங்களின் பட்டியலில், டோக்கியோ முதலிடத்தைப் பிடித்துள்ளது. சிங்கப்பூர் இரண்டாமிடத்தையும் ஒசாகா மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளது. இந்திய நகரங்களில் மும்பையும் (45ஆவது) தில்லியும் (52ஆவது) மட்டுமே இந்தப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

**4.நகரப்பேருந்துகள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பெண்களுக்கு இலவசப் பயணம் வழங்க முடிவு செய்துள்ள மாநில / யூனியன் பிரதேச அரசு எது?**

A) இலடாக்

B) பஞ்சாப்

C) சத்தீஸ்கர்

**D) தில்லி ☑**



✓ நகரப்பேருந்துகள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பெண்களுக்கு இலவசப்பயணம் வழங்கும் திட்டத்திற்கு தில்லி அமைச்சரவை 'கொள்கை அளவில்' ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்திற்காக, தில்லி சட்டமன்றம் ரூ.290 கோடி நிதியை ஒதுக்கீடுசெய்துள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள ரூ.290 கோடியில், ரூ.140 கோடி நிதி, பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப்பயணத்தையும் ரூ.150 கோடி நிதி, மெட்ரோ இரயில்களில் இலவசப்பயணத்தையும் வழங்க பயன்படுத்தப்படும். இந்தத்திட்டம், வரும் அக்.29 அன்று தொடங்கவுள்ளது.

✓ தில்லி அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்கள், தில்லி போக்குவரத்துக்கழகம் மற்றும் கிளஸ்டர் பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய விரும்பினால் அவர்கள் பயணப்படி என எதுவும் தரப்படமாட்டாது.

**5. 2018 டென்சிங் நோர்கே தேசிய சாகச விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட முதல் IPS அதிகாரி யார்?**



A) சோனியா நரங்

B) சஞ்சுக்தா பராஷர்

C) மீரா போர்வாங்கர்

**D) அபர்ணா குமார் ☑**

✓ 2018ஆம் ஆண்டுக்கான டென்சிங் நோர்கே தேசிய சாகச விருது வழங்கி, அபர்ணா குமார் இ.கா.ப (உத்தரபிரதேசம்: 2002) கௌரவிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம், இந்த மதிப்புமிக்க விருதைப் பெற்ற முதல் IPS அதிகாரியாக அவர் மாறியுள்ளார். தற்போது, அவர் டேராடூனில் இந்திய–திபெத்திய காவல் படையில் DIGஆக பணிபுரிந்து வருகிறார்.

✓ இந்த விருது நிலம், நீர் மற்றும் காற்று சாகச விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகளை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படும் தேசிய அளவிலான உயரிய விருதாகும். நிலம் சாகசம், நீர் சாகசம், காற்று சாகசம், வாழ்நாள்சாதனை ஆகிய நான்கு பிரிவுகளில் இவ்விருது வழங்கப்படுகிறது.

✓ இளம் தலைமுறையினரிடம் பொறுமை, துணிந்து முடிவெடுப்பது, கூட்டுறவுக் குழு பணி, சவாலான தருணங்களில் உடனடியாகச் செயல்படுவது ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையிலும், சாகச நடவடிக்கைகளில் ஈடுபடும் இளந்தலைமுறையினரை ஊக்கப்படுத்துவதற்காகவும் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

✓ இந்த விருதுக்கு 6 பேரை மத்திய அரசு தேர்வுசெய்துள்ளது. அதன்படி, நிலம் சாகசப்பிரிவில் அபர்ணா குமார், மறைந்த தீபங்கர் கோஷ், K மணிகண்டன் ஆகியோரும், நீர் சாகசப்பிரிவில் பிரபாத் ராஜு கோலி, காற்று சாகசப்பிரிவில் இராமேஸ்வர ஜாங்ரா, வாழ்நாள் சாதனை பிரிவில் வாங்சுக் ஷெர்பா ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். விருதுபெறுவோருக்கு தலா ரூ.5 இலட்சம் ரொக்கப்பரிசு, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் சிறிய சிலை வழங்கப்படும்.

**6. நடப்பாண்டின் இராஷ்டிரிய கேல் புரோத்சகான் புரஸ்கரை வென்ற விளையாட்டு வீரர் யார்?**



A) அபிநவ் பிந்த்ரா

B) ஜீவ் மில்கா சிங்

C) மேரி கோம்

**D) ககன் நரங் ☑**

✓ நடப்பாண்டு தேசிய விளையாட்டு நாளன்று புது தில்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற 'அர்ஜுனா விருது' வழங்கும் விழாவில், ககன் நரங் மற்றும் பவன் சிங் ஆகியோருக்கு அவர்களது 'ககன் நரங் விளையாட்டு ஊக்குவிப்பு அறக்கட்டளை'க்காக "இராஷ்டிரிய கேல் புரோத்சகான் புரஸ்கர் விருது" வழங்கப்பட்டது.

✓ 2011இல், நரங் மற்றும் இணை நிறுவனர் பவன் சிங் ஆகியோரால், வளர்ந்துவரும் திறமைகளை ஊக்குவிப்பதற்காக 'ககன் நரங் விளையாட்டு ஊக்குவிப்பு அறக்கட்டளை' தொடங்கப்பட்டது. Gun for Glory Shooting Academy, இந்த அறக்கட்டளையின் உதவியுடன் உருவாக்கப்பட்டதாகும். இந்தியா முழுவதும் 16 மையங்களை இது கொண்டுள்ளது.

**7. சர்வதேச சுப்ரோட்டோ கோப்பைக்கான கால்பந்து போட்டியில், சப்–ஜூனியர் சிறுவர்கள் (14 வயதுக்குட்பட்ட) பிரிவில் வென்ற அணி எது?**

**A) மிசோரம் ☑**

B) திரிபுரா

C) கோவா

D) மணிப்பூர்




✓ நடந்து முடிந்த இறுதிப்போட்டியில், மணிப்பூரின் யுனிக் மாடல் அகாடமியை 2–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, மிசோரத்தின் சைதன் மேல்நிலைப்பள்ளி, 2019 சப்–ஜூனியர் சிறுவர்கள் (14 வயதுக்குட்பட்ட) பிரிவில், சர்வதேச சுப்ரோட்டோ கோப்பை கால்பந்து போட்டியை வென்றது. இது மிசோரம் பள்ளி வெல்லும் முதல் பட்டமாகும். 'சிறந்த அணி'க்கான விருதையும் (ரூ.3 இலட்சம்) சைதன் வென்றது. அவ்வணியின் வீரர் B ரோமால்சாவ்மா போட்டியின் சிறந்த வீரராக தேர்வுசெய்யப்பட்டார்.

✓ 'சிறந்த கோல்கீப்பர்' விருது மணிப்பூரின் பிஜாண்டோவிற்கும், 'சிறந்த பயிற்சியாளர்' விருது சைதன் பள்ளியின் லல்புல்லியானாவுக்கும் அறிவிக்கப்பட்டது. 'நேர்மையாக விளையாடிய அணி'க்கான விருது கோவாவின் ஆர் லேடி மவுண்ட் கார்மல் உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றது. சிறந்த கோல்கீப்பர், சிறந்த வீரர் மற்றும் 'fairplay' விருது வென்றவர்களுக்கு தலா ரூ.50,000 ரொக்கப்பணம் வழங்கப்படும்.

**8. 'ஐந்தாவது அக்வா அக்வாரியா இந்தியா 2019' நடைபெற்ற நகரம் எது?**

A) இராஞ்சி

**B) ஹைதராபாத் ☑**

C) டேராடூன்

D) மணாலி

Aqua Aquaria India

✓ மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின்கீழ், கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA) ஏற்பாடு செய்துள்ள 'அக்வா அக்வாரியா இந்தியா 2019'இன் ஐந்தாவது பதிப்பை குடியரசு துணைத்தலைவர் M வெங்கையா திறந்துவைத்தார். இந்நிகழ்வு, ஆக.30 முதல் செப்.1 வரை ஹைதராபாத்தில் உள்ள HITEX கண்காட்சி மையத்தில் நடைபெற்றது. "To take Blue Revolution to India's hinterland" என்பது இதன் கருப்பொருளாகும்.

✓ பல்வகை மீனினங்கள் வளர்த்தலை ஊக்குவிப்பதற்காக மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு தொழில்நுட்பத்தின் அண்மைய முன்னேற்றங்களை இந்நிகழ்வு காட்சிப்படுத்தியது. இது ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கண்காட்சியாகும். இது ஏற்றுமதிசார்ந்த மீன்வளர்ப்பை அதிகரிக்கும்.

**9.தேசிய ஆய்வக அடைவை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) வேளாண்மை மற்றும் உழவர்நல அமைச்சகம்

**B) நுகர்வோர் நலன், உணவு & பொது விநியோக அமைச்சகம் ☑**

C) வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்

D) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

✓ தேசிய ஆய்வக அடைவை (**N**ational **L**ab **D**irectory – **NLD**), மத்திய நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் அறிமுகப்படுத்தியுள்ளார். NLD என்பது தொழில்கள், கல்வியாளர்கள் & ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களின் அனைத்து சோதனைத் தேவைகளுக்குமான (அங்கீகாரம் பெற / சான்றிதழ் பெற / அங்கீகாரம் பெற) ஒரு மையமாகும்.

✓ தற்போது, National Accreditation Board for Testing and Calibration Laboratories (NABL), Bureau of Indian Standards (BIS) & Hallmarking ஆய்வகங்களை NLD உள்ளடக்கியுள்ளது. தற்போது, FASAI, APEDA, EICஆல் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட ஆய்வகங்களும் அதற்கேற்ப சுட்டிக்காட்டப்படலாம். தயாரிப்புகளின் இணக்கத்தை மதிப்பிடுவதற்கு அல்லது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நோக்கத்திற்காக பரிசோதனை செய்வதில் தேவைப்படும் சோதனை வசதிகளை அடையாளங்காண்பதில் உற்பத்தியாளர்கள், நுகர்வோர், ஒழுங்குமுறை முகவர், அரசு மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற அனைவருக்கும் NDL பயனளிக்கும்.

**10.எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் 'Sky Cycling' பூங்கா திறக்கப்படுகிறது?**

**A) மணாலி ☑**

B) முசோரி

C) நைனிடால்

D) சிம்லா



✓ சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கும் பார்வையாளர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை அளிப்பதற்குமாக இந்தியாவின் முதல் 'Sky Cycling' பூங்காவானது விரைவில் ஹிமாச்சலபிரதேசத்தின் மணாலிக்கு அருகிலுள்ள குலாபா பகுதியில் திறக்கப்படவுள்ளது. இது 350 மீட்டர் நீளத்துடன் கடல் மட்டத்திலிருந்து 9000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. வனத்துறையும் அடல் பிஹாரி வாஜ்பாய் மலையேற்ற நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த விளையாட்டுகளும் கூட்டாக இணைந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த இப்பூங்காவை உருவாக்கியுள்ளன. இது உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புக்கும் உதவும்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சூழலுக்கு உகந்த வகையில், செடிகளாக வளரும் பிள்ளையார் சிலைகளை தமிழ்நாடு அரசு அறிமுகம் செய்துள்ளது. தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத்துறை சார்பில் இச்சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சூழல் மாசுபாட்டைத் தடுக்கும் நோக்கில் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் நடந்து வரும் ஐந்தாம் கட்ட அகழாய்வில் சூது பவளம், வெள்ளிக்காசு மற்றும் செப்புப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- ✓ நான்காவது சர்வதேச பல் மருத்துவ மாநாடு சென்னையில் நடந்தது. இதில், தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இலண்டனுக்கு வெளியே சர்வதேச பல் மருத்துவ மாநாடு முதல்முறையாக சென்னையில் நடைபெறுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.யஷஸ்வினி சிங் தேஸ்வால், எந்த நகரத்துடன் தொடர்புடையவர்?**

A) போபால்

B) இராஞ்சி

C) மும்பை

**D) தில்லி ☑**



✓ பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோவில் நடந்த ISSF உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், 10 மீட்டர் 'ஏர் பிஸ்டல்' மகளிர் பிரிவில் இந்திய வீராங்கனை யஷஸ்வினி சிங் தேஸ்வால் 236.7 புள்ளிகள் பெற்று தங்கம் வென்றார். இதே பிரிவில் உக்ரைன் வீராங்கனை ஒலேனா கோஸ்டெவிச் வெள்ளியும், செர்பிய வீராங்கனை ஜாஸ்மினா மிலாவோனோவிக் வெண்கலமும் வென்றனர். இந்தப் போட்டியில் தங்கம் வென்றதை அடுத்து யஷஸ்வினி, 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

**2. 'நமஸ்தே பசிபிக்' என்ற கலாசார நிகழ்வு நடைபெற்ற நகரம் எது?**

A) சென்னை

B) இலக்னோ

**C) தில்லி ☑**

D) கொல்கத்தா



✓ தில்லியில், பசிபிக் நாடுகளின் கலாசாரத்தை இந்தியாவில் காண்பிக்கும் நோக்கோடு ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவா நியூ கினியா மற்றும் பிஜி உயராணையர்கள் இணைந்து, 'நமஸ்தே பசிபிக்' என்ற கலாசார நிகழ்வை சமீபத்தில் நடத்தின. நியூசிலாந்தைச் சேர்ந்த ஆராதனா தனது இசைக்குழுவுடன் இதில் பங்கேற்றார். பப்புவா நியூ கினியா மற்றும் பசிபிக்கில் தயாரிக்கப்பட்ட பசுமை மரச்சாமான்கள் & பிஜியில் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய முகமூடிகள் மற்றும் கலைப்பொருட்கள் இதன்போது காட்சிக்கு வைக்கப்பட்டன.

**3. தேசிய செயற்கை நுண்ணறிவு வள வலைத்தளத்தை தொடங்க அமேசான் வலைத்தள சேவைகளுடன் கூட்டிணைந்துள்ள IIT எது?**

**A) ஐஐடி கரக்பூர் ☑**

B) ஐஐடி கான்பூர்

C) ஐஐடி பாம்பே

D) ஐஐடி மெட்ராஸ்

- ✓ செயற்கை நுண்ணறிவில் (AI) கற்றல் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக தேசிய செயற்கை நுண்ணறிவு வள வலைத்தளத்தை (NAIRP) உருவாக்கும் நோக்கில் கரக்பூர் IIT நிறுவனமானது அமேசான் வலைத்தள சேவைகளுடன் கூட்டிணைந்துள்ளது.

- ✓ இந்தியாவில், செயற்கை நுண்ணறிவு கற்றல் வளங்களுக்கான தேடலை கற்போர், பயிற்சியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு எளிமையாகவும் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதே இந்த வலைத் தளத்தின் நோக்கமாகும். இந்த முயற்சிக்கு இந்திய தேசிய டிஜிட்டல் நூலக திட்டத்தின் ஒருபகுதியாக, மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நிதியுதவி கிடைத்துள்ளது.

**4.மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், எந்த நிறுவனத்துடன் இணைந்து 'Build for Digital India' என்ற ஒன்றை அறிமுகம் செய்துள்ளது?**




A) மைக்ரோசாப்ட்

**B) கூகிள் ☑**

C) இன்ஃபோசிஸ்

D) விப்ரோ

- ✓ மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், இந்திய மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதற்காக கூகிள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்படி, கூகிள் நிறுவனம் இந்திய மாணவர்களின் தொழில்நுட்பத்திறனை சமூக முன்னேற்றத்துக்காக பயன்படுத்தும் வழிமுறைகளை கற்றுக்கொடுக்க உள்ளது. இதற்கென்று 'டிஜிட்டல் இந்தியாவை உருவாக்குங்கள்' என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகளை கூகிள் நிறுவனம் ஒருங்கிணைக்கவுள்ளது.

- ✓ நலவாழ்வு, வேளாண்மை, கல்வி, பெண்கள் பாதுகாப்பு, சுற்றுச்சூழல், பொலிவுறு நகரம், நாட்டின் உட்கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூகிள் நிறுவனம் அந்த நிகழ்ச்சிகளில் கற்றுத்தரப்படும். விண்ணப்பிக்கும் மாணவர்கள் இந்த நிகழ்ச்சிகளில் நேரடியாகவும், இணையத்தின் மூலமாகவும் கலந்துகொள்ள முடியும். எந்திர கற்றல், மேகக்கணிமை, ஆண்ட்ராய்ட் போன்ற நவீன தொழில்நுட்பங்களும் கற்றுக்கொடுக்கப்படும்.

**5. நடப்பாண்டு நேரு கோப்பை படகுப் பந்தயத்தில் வென்ற அணி எது?**




**A) நடுபாகம் சுந்தன் ☑**

B) சம்பக்குளம் சுந்தன்

C) கரிச்சல் சுந்தன்

D) தேவஸ் சுந்தன்

- ✓ ஆலப்புழையில் அமைந்துள்ள புன்னமட ஏரியில் நடந்த 67ஆவது நேரு கோப்பை படகுப் பந்தயத்தில், பல்லதுருத்தி படகுமன்றத்தின் நடுபாகம் சுந்தன் பாம்புப் படகானது போட்டியை வென்றது. சம்பக்குளம்

சுந்தன், கரிச்சல் சுந்தன் மற்றும் தேவஸ் சுந்தன் ஆகியவை முறையே இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடத்தைப் பிடித்தன.

✓ இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் வருகை மற்றும் ஏரியில் அவர் மேற்கொண்ட படகுசவாரி ஆகியவற்றை நினைவுகூரும் வகையில் நேரு கோப்பை படகுப்பந்தயம் தொடங்கப்பட்டது. நேரு கோப்பை என்பது சாம்பியன்ஸ் படகு லீக்கின் தொடக்க பந்தயமாக உள்ளது. கேரள சுற்றுலாத் துறை நடத்தும் சாம்பியன்ஸ் லீக் ஆனது IPL வரிசையில் நடத்தப்படும் இந்தியாவின் முதல் பந்தயம் ஆகும். இதில் 12 பந்தயங்கள் நடத்தப்படும். நவ.23 அன்று கொல்லத்தில், குடியரசுத்தலைவர் கோப்பை படகுப் பந்தயத்துடன் இந்தப் போட்டிகள் நிறைவடையும்.

**6. 2019 SAFF 15 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்து சாம்பியன்ஷிப்பை வென்ற நாடு எது?**

**A) இந்தியா ☑**

B) நேபாளம்

C) இலங்கை

D) வங்கதேசம்




✓ மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள கல்யாணி அரங்கில் நடந்த இறுதிப்போட்டியில் நேபாளத்தை 7–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, இந்தியா நடப்பாண்டு SAFF 15 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்து சாம்பியன்ஷிப்பை வென்றது. இந்த வெற்றியின் மூலம், 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுக்குப்பிறகு தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியா இப்பட்டத்தை வெல்கிறது.

**7. மேக்னாகாட்டில் எரிவாயு அடிப்படையிலான மின்னுற்பத்தி நிலையத்தை அமைக்க, எந்த இந்திய நிறுவனத்துடன் வங்கதேசம் ஒப்பந்தம் செய்துள்ளது?**

**A) ரிலையன்ஸ் பவர் ☑**

B) அதானி பவர்

C) ஹிந்துஸ்தான் பவர்

D) டாட்டா பவர்

RELIANCE Power

✓ டாக்கா அருகே மேக்னகாட்டில் 750 MW திறன்கொண்ட எரிவாயு அடிப்படையிலான மின்னுற்பத்தி நிலையத்தை அமைக்க வங்கதேச அரசு ரிலையன்ஸ் பவர் ஆப் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்நிலையத்தின் கட்டுமானம் 2022ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும், அதன் மதிப்பிடப்பட்ட செலவு ஒரு பில்லியன் டாலர்களாகும். இந்த ஒப்பந்தத்தின் கீழ், இத்திட்டத்திலிருந்து 22 ஆண்டுகாலத்திற்கு, முன்பே தீர்மானிக்கப்பட்ட கட்டண விகிதத்தில், ஓர் அலகு மின்சாரத்தை 5.85 டாக்கா மதிப்புக்கு வங்க தேசம் பெற்றுக்கொள்ளும். இதுதவிர, வங்கதேசத்தின் சிட்டகாங்கிற்கு அருகிலுள்ள குதுப்தியா தீவில் LNG முனையம் அமைப்பதற்காக பெட்ரோ பங்களாவுடனான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

**8.நெகிழி ஏதும் பயன்படுத்தப்படாத முதல் ஹிந்திப்படம் எது?**

A) வார்

B) டிரீம் கேர்ள்

C) மிஷன் மங்கல்

**D) கூலி No.1 ☑**




- வருண் தவானின் அடுத்து வரவிருக்கும் படமான 'கூலி No.1', நெகிழி ஏதும் பயன்படுத்தாத முதல் ஹிந்திப்படமாக மாறியுள்ளது. சூழலுக்குந்த இந்த முயற்சியை திரைப்பட இயக்குநர் டேவிட் தவான் மற்றும் அதன் தயாரிப்பாளர்களான வாசு பகானி, ஜாக்கி பகானி மற்றும் தீப்சிகா தேஷ்முக் ஆகியோர் எடுத்துள்ளனர். இந்தத் திரைப்படம் 2020 மே.1 அன்று வெளியிடப்படவுள்ளது.
- பிரதமர் மோடி தனது சுதந்தர நாள் உரையில், ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழிப் பயன்பாட்டை ஒழிக்குமாறு மக்களை வலியுறுத்தியதோடு, சூழலைப்பாதுகாக்க சணல் மற்றும் துணிப்பைகளைப் பயன்படுத்த ஊக்குவித்தார்.

**9.இந்தியாவின் மிகநீளமான மின்மயமாக்கப்பட்ட இரயில் சுரங்கப்பாதையானது, அண்மையில் எந்த மாநிலத்தில் திறக்கப்பட்டது?**

A) தமிழ்நாடு

B) கேரளம்

C) கர்நாடகம்

**D) ஆந்திரம் ☑**



- ஆந்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் மிகநீளமான சுரங்க மின்வழித் தட இரயில் பாதையை குடியரசு துணைத்தலைவர் வெங்கய்யா திறந்துவைத்தார். ஆந்திரப்பிரதேச மாநிலம், செர்லோபள்ளி – ராபூரு இடையிலான இரயில் வழித்தடத்தில் மிக நீளமான சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதில் முழுவதும் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. 6.7 கி.மீ நீளமுள்ள இதுவே நாட்டின் மிகநீளமான சுரங்க மின்வழித்தட இரயில் பாதையாகும். ரூ.437 கோடி செலவில் இந்தப்பாதை அமைக்கப்பட்டது.
- வெங்கடாச்சலம் – ஓபுலாவாரிபள்ளி இடையே 112 கிலோ மீட்டர் நீள அதிவேக இரயில் போக்குவரத் –தையும் வெங்கய்யா தொடங்கிவைத்தார். புதிதாக கட்டப்பட்ட இச்சுரங்கப்பாதை, கிருஷ்ணாபட்டினம் துறைமுகம் மற்றும் உள்நாட்டுப்பகுதிகளுக்கு இடையே தடையற்ற ரயில் போக்குவரத்து இணைப்பை வழங்கும்.

**10.தஜிந்தர்பால் சிங் தூர், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**



A) மல்யுத்தம்

B) டேபிள் டென்னிஸ்

**C) குண்டெறிதல் ☑**

D) குத்துச்சண்டை

- ✓ செக் குடியரசின் டெசினில் நடந்த ஒரு தடகள சந்திப்பின்போது, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற குண்டெறி வீரர் தஜிந்தர்பால் சிங் தூர், தனது கடைசி முயற்சியில் 20.09 மீ தூரத்துக்கு குண்டெறிந்து வெள்ளி வென்றார். அவருக்கு நடப்பாண்டுக்கான 'அர்ஜுனா விருது' வழங்கப்பட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. LED வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் வரலாற்று நினைவுச் சின்னம் எது?**

**A) குதுப்மினார் ☑**

B) துக்ளக்காபாத் கோட்டை

C) கஜூராஹோ

D) கோனார்க்



- ✓ புதுதில்லியில் உள்ள பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க குதுப்மினார் நினைவுச்சின்னமானது LED வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் வரலாற்று நினைவுச்சின்னமாக மாறியுள்ளது. இதனை கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் திறந்துவைத்தார். இதன்மூலம் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகும் இந்த வரலாற்று நினைவுச்சின்னத்தின் அழகை நாம் காணமுடியும்.

- ✓ தினமும் இரவு 7 – 11 மணி வரை ₹16615 செலவில் இந்த நினைவுச்சின்னம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்படும். இதற்காக, ஓராண்டுக்கு ₹1,99,388 செலவாகிறது. சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு பார்வையாளர்களை ஈர்ப்பதே, வரலாற்று நினைவுச் சின்னங்களை ஒளிரச்செய்வதற்கான நோக்கம் ஆகும். குதுப்மினார், UNESCOஇன் உலக பாரம்பரிய தளங்களுள் ஒன்றாக உள்ளது. இந்திய தேசிய தலைநகரில், அதிகம் பார்வையிடப்பட்ட வரலாற்று நினைவிடங்களுள் இதுவும் ஒன்றாக உள்ளது.

**2. எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் குப்பை உணவகம் (Garbage Cafe) திறக்கப்படவுள்ளது?**

A) இராஞ்சி

B) இலக்னோ

**C) அம்பிகாபூர் ☑**

D) புது தில்லி



- ✓ தனித்துவம்மிக்க ஒருமுயற்சியாக சத்தீஸ்கர் மாநிலத்தின் அம்பிகாபூர் நகராட்சியானது விரைவில் இந்தியாவின் முதல் 'குப்பை உணவகத்தை' அம்பிகாபூர் நகரத்தில் திறக்கவுள்ளது. இந்த முயற்சி, நகரத்தை நெகிழிக்குப்பைகளற்ற நகரமாக அந்நகரத்தை மாற்றுவதற்கான ஒரு படியாக இருக்கும். தனித்துவமிக்க இந்த உணவகத்தில், ஏழை எளிய மக்கள் அல்லது குப்பை சேகரிப்பவர்கள் 1 கிலோ அளவிலான நெகிழியைக் கொண்டுவந்து கொடுத்தால் இலவச உணவு வழங்கப்படும். அதே நேரம், ½ கிலோ அளவிலான நெகிழிக்குப்பையை கொண்டுவந்து கொடுத்தால் காலை உணவு வழங்கப்படும்.

- ✓ சேகரிக்கப்பட்ட இந்தக் குப்பைகள் திட திரவ வள மேலாண்மை மையத்தில் விற்கப்படும். இந்நெகிழிக் கழிவுகள், மேலும் துகள்களாக மாற்றப்பட்டு, நகரத்தில் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படும். அம்பிகாபூர் நகரம், சத்தீஸ்கர் மாநிலத்தின் முதல் 'குப்பைத்தொட்டியற்ற நகரமாகும்'. இந்த நகரத்தில்,

திறமையான திடக்கழிவு மேலாண்மை அமைப்பு உள்ளது. மகளிர் சுய உதவிக்குழுக்கள் வீடுவீடாகச் சென்று குப்பைகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளன. தூய்மையான நகரங்கள் தரவரிசையில் இந்த நகரம் நாட்டின் இரண்டாவது தூய்மையான நகரம் எனப் பாராட்டப்பட்டது.

### 3. கர்வி குஜராத் பவன் அமைந்துள்ள நகரம் எது?

A) சண்டிகர்

**B)** புது தில்லி ☑

C) காந்திநகர்

D) அகமதாபாத்



- ✓ பிரதமர் நரேந்திர மோடி, சமீபத்தில், புது தில்லியில் கர்வி குஜராத் பவனை திறந்துவைத்தார். தேசிய தலைநகரில் அக்பர் சாலையில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய கட்டிடத்தை குஜராத் அரசு சுமார் ₹131 கோடி ரூபாய் செலவில் கட்டியுள்ளது. இதில் 19 சூட் அறைகள், 59 வழக்கமான அறைகள், ஓர் உணவகம், ஒரு பொது உணவரங்கம், ஒரு வணிக மையம், ஒரு நினைவுப்பரிசு அங்காடி, ஒரு பல்நோக்கு மண்டபம், ஒரு மாநாட்டு மண்டபம், 4 ஓய்வறைகள், ஒரு உடற்பயிற்சிக்கூடம், ஒரு யோகா மையம், ஒரு மாடித்தோட்டம் மற்றும் 20,325 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஒரு நூலகம் ஆகியவை உள்ளன.
- ✓ பாரம்பரிய மற்றும் நவீன கலைப்பொருட்கள் மற்றும் தொழினுட்பங்களை இப்பவன் கொண்டுள்ளது. தேசிய தலைநகரில் குஜராத்திகளுக்கான ஓர் இல்லமாகவும் இது செயல்படும். குஜராத்தின் கலாசாரம் கைவினை மற்றும் உணவு வகைகளை இது பிரதிநிதித்துவம் செய்யும். இந்தக் கட்டிடம், ஏற்கனவே சாணக்கியபுரியில் உள்ள குஜராத் பவனுடன் இணைந்து செயல்படும்.

### 4. 'நுகாய்' என்னும் வேளாண் திருவிழாவை சமீபத்தில் கொண்டாடிய மாநிலம் எது?

**A)** ஒடிசா ☑

B) மேற்கு வங்கம்

C) கர்நாடகம்

D) ஜார்கண்ட்



- ✓ வேளாண் திருவிழாவான 'நுகாய் அண்மையில் மேற்கு ஒடிசா மாவட்ட மக்களால் விமரிசையாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாடப்பட்டது. இது, இந்தப் பகுதியில் கொண்டாடப்படும் மிகப்பெரிய விவசாயத் திருவிழாவாகும். 'நுகாய் ஜுகார்' என்பது இந்தத் திருவிழாவின் முக்கிய நிகழ்வாகும்.
- ✓ நண்பர்கள், உறவினர்கள் மற்றும் நலம்விரும்பிகளுடன் வாழ்த்துப்பரிமாற்றம் செய்துகொள்வதே இந்த நிகழ்வின் அம்சமாகும். நீண்ட ஆயுள், மகிழ்ச்சி மற்றும் செல்வச்செழிப்பைப் பெற்று நீடூழி வாழ்வதற்காக பெரியவர்கள், 'நுகாய் ஜுகார்' எனக்கூறி வாழ்த்துவார்கள். கிராமப்புறங்களில் நெல்வயல்களை மக்கள் வணங்குவார்கள். வீட்டிலுள்ள பெண்கள் அதிகாலையில் எழுந்து, வீட்டின்முன் வண்ணமயமான இரங்கோலி கோலங்கள் இடுவார்கள்.

**5.வெளிநாட்டில் பணிசெய்ய விரும்பும் இளைஞர்களுக்கான ஆட்சேர்ப்பு முகமையாக செயல்பட முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) உத்தர பிரதேசம்

**B)** பஞ்சாப் ☑

C) மத்திய பிரதேசம்

D) ஹிமாச்சல பிரதேசம்

- ✓ கல்வி & வேலைக்காக வெளிநாடு செல்ல விரும்பும் இளைஞர்களுக்கான ஆட்சேர்ப்பு முகமையாக செயல்பட பஞ்சாப் வேலைவாய்ப்பு உருவாக்கும் துறை முடிவுசெய்துள்ளது. இளைஞர்களை வெளிநாடுகளுக்கு கல்வி கற்க அனுப்புவதற்கான ஒரு சிறப்புப் பிரிவையும் இது அமைக்கும். பயண முகவர்கள் மோசடி செய்வதாக வந்த புகார்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தச் சிறப்புப் பிரிவானது நியாயமான கட்டணத்தில் கல்வி வழங்கும் அயல்நாட்டு பல்கலைகளுடன் ஒரு கூட்டணியைக் கொண்டிருக்கும். இது மாணவர்களை மோசடிகளிலிருந்து காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல், வெளிநாட்டு நிறுவனங்கள் முகவர்களுக்கு செலுத்தும் கமிஷன் அவர்களுக்குத் திருப்பித்தரப்படும் என்பதால் அவர்களுக்கு நிதிரீதியாகவும் உதவும். இந்த வசதி, ஏற்கனவே ஆந்திரம், கேரளம் மற்றும் தெலுங்கானத்தில் கிடைத்துவருகிறது.

**6.உலக வளங்கள் நிறுவனத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

A) நியூயார்க்

B) பாரிஸ்

C) பெர்லின்

**D)** வாஷிங்டன் ☑

- ✓ ராக்பெல்லர் அறக்கட்டளையின் உதவியுடன் "Reducing Food Loss and Waste" என்ற தலைப்பில் உலக வளங்கள் நிறுவனம் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை உலகளாவிய உணவு விரயத்தை அளவீடு செய்துள்ளது. அதாவது, ஒவ்வோர் ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் உணவில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு உணவு உண்ணாமல் வீணடிக்கப்படுவதாக இவ்வறிக்கை கூறுகிறது. அது, உலக பொருளாதாரத்தில் $940 பில்லியன் டாலருக்கு சமமாக உள்ளது.
- ✓ புவி வெப்பமயமாதல், பைங்குடில் வளிகளில் சுமார் 8% வாயுக்கள் வளிமண்டலத்தில் கலப்பதற்கு இந்த உண்ணப்படாத உணவுகளே காரணமாக உள்ளன. உணவு இழப்பு மற்றும் வீணாக்கப்படுவதை குறைப்பதற்கான தேசிய அளவிலான உத்திகளை உருவாக்குதல், தேசிய அளவில் பொது – தனியார் கூட்டாண்மைகளை உருவாக்குதல், விநியோக சங்கிலி முயற்சிகளைத் தொடங்குதல், சிறு உரிமையாளர்களின் இழப்புகளைக் குறைத்தல் மற்றும் நுகர்வோர் சமூக விதிமுறைகளை மாற்றுவது ஆகியவை இந்த நடவடிக்கைகள் சிலவற்றுள் அடங்கும்.

✓ உலக வளங்கள் நிறுவனம் என்பது ஓர் உலகளாவிய ஆராய்ச்சி நோக்கிலான இலாப நோக்கற்ற அமைப்பாகும்; இது 1982ஆம் ஆண்டில் ஜேம்ஸ் குஸ்டாவ் ஸ்பெத்தின் தலைமையில் மேக்ஆர்தர் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் வாஷிங்டனில் உள்ளது.

**7. 72ஆவது WHO –SEARO அமர்வின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**



A) நிர்மலா சீதாராமன்

B) இராஜ்நாத் சிங்

C) நரேந்திர மோடி

**D) ஹர்ஷ் வர்தன் ☑**

✓ மத்திய நலவாழ்வு அமைச்சர் Dr. ஹர்ஷவர்தன், புது தில்லியில், உலக சுகாதார அமைப்பின் (WHO) தென்கிழக்காசியாவிற்கான மண்டல அலுவலகத்தின் இரண்டாவது அமர்வை தொடங்கிவைத்தார். இந்தக்கூட்டத்தை இந்தியா நடத்துவது இது இரண்டாவது முறையாகும். 72ஆவது WHO –SEARO அமர்வின் தலைவராக Dr. ஹர்ஷ்வர்தன் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். யோகா, விளையாட்டு, மிதிவண்டி ஓட்டுதல் போன்ற உடலியல் செயல்பாடுகளை மேற்கொள்வது குறித்து பிரதமர் மோடி தொடங்கிய "கட்டுடல் இந்தியா" இயக்கத்துடன் இந்த நிகழ்வு ஒத்துப்போகிறது. செப்டம்பர் மாதம் முழுவதையும் "ஊட்டச்சத்து மாதம்" எனக் கடைப்பிடிக்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது.

**8.எந்த நகரத்தில், காதி மற்றும் கிராம தொழிற்துறை ஆணையமானது முழுமுதற் 'டெரகோட்டா கிரைண்டரை' அறிமுகப்படுத்தியுள்ளது?**



A) நாசிக்

B) ஹைதராபாத்

**C) வாரணாசி ☑**

D) திருவனந்தபுரம்

✓ காதி மற்றும் கிராமப்புற தொழிற்துறை ஆணையமானது (KVIC) தனது முழுமுதற் 'டெரகோட்டா கிரைண்டரை' வாரணாசியில் உள்ள சேவாபூரில் அறிமுகம் செய்துள்ளது. மட்பாண்டத் தயாரிப்பில் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வீணான மற்றும் உடைந்த மட்பாண்ட பொருட்களை அரைப்பதற்கு இந்த எந்திரத்தை பயன்படுத்த முடியும். KVICஇன் தலைவரால் வடிவமைக்கப்பட்டுள்ள இதனை ராஜ்கோட்டில் உள்ள பொறியியல் பிரிவு உருவாக்கியுள்ளது.

✓ இது வழக்கமான மட்பாண்ட பொருட்களை அரைக்கும் கிரைண்டரை விடவும் மிக விரைவாக வீணான மட்பாண்ட பொருட்களை அரைக்கும். இதன் உற்பத்தி செலவும் மிகக்குறைவாகும். மேலும், களிமண் பற்றாக்குறையின் சிக்கலைத் தீர்க்கவும் இது உதவும். மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சரான நிதின் கட்கரி, 400 முக்கிய இரயில் நிலையங்களில் டெரகோட்டா தயாரிப்புகளை அறிமுகப்படுத்த முன்மொழிந்துள்ளதால் இந்த எந்திரம் குயவர்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமையும். இந்தத் திட்டம், இரயில்வேயின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**9. 2019 'சர்வதேச இலக்காளர்' விருதுக்கு பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையால் தேர்வு செய்யப்பட்ட இந்தியர் யார்?**

A) அசீம் பிரேம்ஜி

B) மேதா பட்கர்

C) வந்தனா சிவா

**D) நரேந்திர மோடி ☑**



- ✓ 'தூய்மை இந்தியா' திட்டத்தின் மூலம் நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அந்த இலக்கை அடைவதற்கு பிரதமர் மோடி அளித்த சிறப்பான பங்களிப்புக்காக, பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை சார்பில் அவருக்கு '2019 Global Goalkeeper' விருது வழங்கப்படவுள்ளது.
- ✓ ஐ.நா. அவையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளைத் தங்கள் நாட்டிலோ அல்லது பல்வேறு நாடுகளிலோ வெற்றிகரமாகச் செயல்படுத்தும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு 'சர்வதேச இலக்காளர்' விருதை பில் & மெலிண்டா அறக்கட்டளை வழங்கிவருகிறது. செப்டம்பர்.24 அன்று அமெரிக்காவில் நடக்கவுள்ள நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்த விருது வழங்கப்படும். புளூம்பர்க் சர்வதேச வர்த்தக மாநாட்டிலும் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகிறார். இதில், உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் பெருநிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.
- ✓ 2014 அக்.2 அன்று தொடங்கப்பட்ட 'தூய்மை இந்தியா' இயக்கமானது ஒரு நாடு தழுவிய இயக்கமாகும். பொது இடங்களை பொதுமக்கள் தாமாக முன்வந்து தூய்மை செய்ய ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது இந்த இயக்கம். 2019 அக்.2ஆம் தேதிக்குள் 'தூய்மை இந்தியா' இயக்கத்தின் நோக்கம் எட்டப்படும். பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை என்பது கோடீசுவரரும், கொடையாளியுமான மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் நிறுவனர் பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டா கேட்ஸ் ஆகியோருக்குச் சொந்தமான ஒரு தனியார் அறக்கட்டளையாகும்.

**10.சமீபத்தில் எந்த நகரத்தில், 4ஆவது தெற்காசிய அவைத்தலைவர்கள் உச்சிமாநாடு நடந்தது?**

A) பாரிஸ்

B) ஜெனீவா

C) புது தில்லி

**D) மாலே ☑**



- ✓ 4ஆவது தெற்காசிய அவைத்தலைவர்களின் உச்சிமாநாடு, சமீபத்தில் மாலத்தீவின் தலைநகரமான மாலே நகரத்தில் நடைபெற்றது. இந்த மாநாடு நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக நடத்தப்பட்டது. ஆனால் இந்த நிகழ்ச்சி நிரலின் ஒருபகுதியாக இல்லாத, ஜம்மு–காஷ்மீர் தொடர்பான 370ஆவது விதிமுறைகளை இரத்து செய்வதற்கான சிக்கலை பாகிஸ்தான் எழுப்ப முயன்றது. இருப்பினும் ஜம்மு–காஷ்மீர் ஓர் உள்நாட்டுச் சிக்கலென இந்தியா தெரிவித்தது.

- இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்ற இந்தியத் தூதுக்குழுவை மக்களவைத்தலைவர் ஓம்பிரகாஷ் மற்றும் மாநிலங்களவை துணைத்தலைவர் ஹரிவன்சு நாராயன் சிங் ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தினர். இந்த உச்சிமாநாட்டில், மாலே பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு மட்டுமல்லாமல், காஷ்மீர் மீதான பாகிஸ்தானின் அக்கறை புறக்கணிக்கவும் செய்யப்பட்டது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- பன்னாட்டு தமிழர் நடுவர், அங்கோர் தமிழ்ச்சங்கம் ஆகியவை இணைந்து நடத்தும் உலக தமிழ்க் கவிஞர்கள் மாநாடு, கம்போடிய நாட்டில் செப்.21 & 22 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில், தமிழ்க்கவிஞர்களுக்கு கம்போடிய அரசின் சார்பில் திருவள்ளுவர் விருது, தொல்காப்பியர் விருது, இளங்கோவடிகள் விருது, நந்திவர்மன் விருது, இராஜேந்திர சோழன் விருது, கம்பர் விருது, பாரதியார் விருது, கபிலர் விருது, ஔவையார் விருது, சுப்ரசனா விருது, சோதரவர்மன் விருது, சூரியவனா விருது, சர்தரணிந்தரவர்மன் விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்படவுள்ளன.
- தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக தூத்துக்குடி மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில், ஆன்லைன் மூலம் இருசக்கர வாகனங்களைப் பாதுகாக்க ரசீது வழங்கும் வசதி தொடங்கப்பட்டுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. பாலைநிலமாதலுக்கு எதிரான ஐ.நா (UNCCD) தீர்மான உறுப்பினர்களின் மாநாட்டை (COP 14) நடத்தும் நகரம் எது?**

**A) நொய்டா பெருநகரம் ☑**

B) அமிர்தசரஸ்

C) ஹைதராபாத்

D) புனே

✓ பாலைநிலமாதலுக்கு எதிரான ஐ.நா. தீர்மான உறுப்பினர்களின் 14ஆவது மாநாடு, செப்டம்பர் 2 அன்று நொய்டா பெருநகரத்தில் நடந்தது. பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் சாதகமான நலன்களை ஏற்படுத்தும் செயல்களை விரைவுபடுத்தும் அதேநேரத்தில், நிலச்சீரழிவையும் அதன் விளைவுகளையும் மீட்டமைப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருந்தது.

✓ கடுமையான வறட்சி (அ) பாலைநிலமாதலை அனுபவிக்கும் நாடுகளில் வறட்சியின் விளைவுகளை தணிப்பது மற்றும் பாலைநிலமாதலுக்கு எதிராக செயல்படுவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். 196 நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் இந்த COP 14இல் பங்கேற்றனர்.


**2.உலக தேர்தல் ஆணையங்கள் சங்கத்தின் (A-WEB) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) அசோக் லவாசா

B) N கோபாலசாமி

**C) சுனில் அரோரா ☑**

D) நவீன் சாவ்லா



✓ ருமேனியாவிடமிருந்து தலைவர் பதவி சுழற்சி முறையில் இந்தியாவுக்கு வருவதால் 2019-21ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கு உலக தேர்தல் ஆணையங்கள் சங்கத்தின் (A-WEB) தலைவராக இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா சமீபத்தில் பொறுப்பேற்றார்.

✓ ஏற்கனவே இந்தப் பதவியிலிருந்த லான் மிங்கு ரடுலெஸ்குவுக்குப் பிறகு சுனில் அரோரா இப்பதவிக்கு வந்துள்ளார். A-WEB அமைப்பின் கொடியானது அதன் புதிய தலைவரான சுனில் அரோராவிடம் ஒப்படைக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு முதல் அடுத்துவரும் ஈராண்டு காலத்திற்கு அது இந்திய தேர்தல் ஆணையத்திடம் இருக்கும்.

✓ 45 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். A-WEB என்பது தேர்தல் நிர்வாக அமைப்புகளின் முதல் சர்வதேச அமைப்பாகும். தற்போது, 94 நாடுகளைச் சேர்ந்த 97 அமைப்புகளை இது உறுப்பினராக கொண்டுள்ளது. தேர்தல் ஆணையங்களின் பணிகள்

குறித்தும், அதை வலுப்படுத்துவது குறித்த தகவல்களை அனைத்து நாடுகளும் பகிர்ந்துகொள்ளும் வகையில் இந்தக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

**3.இந்தியாவின் 'சிறந்த தூய்மையான பாரம்பரிய இடம்' எனத் தேர்வு செய்யப்பட்ட இடம் எது?**



A) திருப்பதி கோவில்

**B) அன்னை வைஷ்ணவி தேவி கோவில் ☑**

C) சத்ரபதி சிவாஜி முனையம்

D) அஜ்மீர் ஷெரிப் பள்ளிவாசல்

✓ ஜம்மு–காஷ்மீரில் அமைந்துள்ள புகழ்பெற்ற அன்னை வைஷ்ணவ தேவி கோவில், தூயமைக்கான ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் அடைப்படையில் இந்தியாவின் 'சிறந்த தூய்மையான பாரம்பரியமிக்க இடம் – Best Swachh Iconic Place' தேர்வு செய்யப்பட்டுள்ளது. தூய்மையுடன் கூடிய பாரம்பரியமிக்க இடங்களின் தரவரிசையை அண்மையில் ஜல்சக்தி அமைச்சகம், குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் வெளியிட்டது. 1300 துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு விதமான தூய்மை சார்ந்த முன் முயற்சிகளால் முன்முயற்சிகள் இந்த இடத்தை அந்தக் கோவில் எட்டியுள்ளது.

✓ செப்.6 அன்று குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகத்தினால் நடத்தப்படவுள்ள 'தூய்மை திருவிழா'வின் போது, இந்தக் கோவிலுக்கு, குடியரசுத்தலைவர் மதிப்புமிக்க விருதை வழங்குவார்.

**4.எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஆகிய நோய்களை ஒழிப்பதற்கான சர்வதேச நிதியத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

**A) ஜெனிவா ☑**

The Global Fund
To Fight AIDS, Tuberculosis and Malaria

B) பாரிஸ்

C) நியூயார்க்

D) பெர்லின்

✓ எய்ட்ஸ், காசநோய் (TB), மலேரியா ஆகிய நோய்களை ஒழிப்பதற்கான சர்வதேச நிதியத்துக்கு $22 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வழங்க இந்தியா முடிவுசெய்துள்ளது. 2020–22ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் பங்களிப்பாக இந்த நிதி வழங்கப்படும். இது இதற்குமுன்பு ஐந்தாவது தவணையில் அளிக்கப்பட்ட பங்களிப்பைவிட 10% அதிகமாகும். 2002ஆம் ஆண்டு முதல் இந்நிதியத்துக்கு இந்தியா தனது பங்களிப்பைச் செலுத்தி வருகிறது. மேலும், இந்த நோய்களை ஒழிப்பதற்காக நிதியை பெற்றும் வருகிறது.

✓ இந்தச் சர்வதேச நிதியம் என்பது எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஆகிய நோய்களை விரைவாக ஒழிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பாகும். இது ஐ.நா அவையால் நிறுவப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு ஆதரவாக எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஆகிய தொற்று

நோய்களை ஒழித்துக்கட்டுவதற்காக கூடுதல் நிதி ஆதாரங்களை ஈர்ப்பது மற்றும் முதலீடு செய்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இதன் தலைமையகம் சுவிச்சர்லாந்தின் ஜெனிவாவில் அமைந்துள்ளது.

**5.நடப்பாண்டு உலக தேங்காய் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) Coconut for Good Health, Wealth & Wellness

**B) Coconut for Family Wellness ☑**

C) Coconut for Healthy Life

D) Coconut for Family Nutrition, Health, and Wellness



✓ உற்பத்தித்திறன் மற்றும் விளைபொருள் பன்முகப்படுத்துதலுடன் கூடிய தேங்காய் பண்ணை மேம்படுத்தலில் கவனம் செலுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்.2 அன்று உலக தேங்காய் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆசிய பசிபிக் தேங்காய் உற்பத்தியாளர்களின் மாநாடு 1998ஆம் ஆண்டில் வியட்நாமில் நடந்தது. இந்த மாநாட்டில் செப்.2 உலக தேங்காய் நாளாக பிரகடனம் செய்யப்பட்டது.

✓ தென்னையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி அதன் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும் விதத்தில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். இந்தியாவில் இந்நிகழ்வு தென்னை வளர்ச்சி வாரியத்தால் (Coconut Development Board) ஏற்பாடு செய்யப்படுகிறது.

✓ நடப்பாண்டுக்கான உலக தேங்காய் நாளுக்கான கருப்பொருள், "Coconut for Family Wellness – குடும்ப நலனுக்கான தேங்காய்" என்பதாகும். ஆசிய பசிபிக் தேங்காய் உற்பத்தியாளர்கள் சமுதாயம் என்பது 18 உறுப்புநாடுகளைக் கொண்ட நாடுகளுக்கிடையேயான ஒரு பன்னாட்டு நிறுவனமாகும். இது அதிகபட்ச பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காக, ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தேங்காய் வளர்ச்சி மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், ஒருங்கிணைக்கவும், அதிகபட்ச பொருளாதார வளர்ச்சியை அடையவும் நோக்கம் கொண்டுள்ளது.

**6.முதல் அமெரிக்க – Asean கடல்சார் பயிற்சியானது, எந்த நாட்டில் அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது?**

**A) தாய்லாந்து ☑**

B) வியட்நாம்

C) புரூணை

D) சிங்கப்பூர்



✓ தாய்லாந்தில், முதல் அமெரிக்க – Asean கடல்சார் பயிற்சியானது (AUMX) சோன் பூரியின் சத்தாகிப் மாவட்டத்தில் உள்ள இராயல் தாய் கடற்படை தலைமையகத்தில் அதிகாரப்பூர்வமாக தொடங்கியது. மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளை வழங்குவதிலும், பேரிடர்களைத் தணிப்பதிலும் பிராந்திய கடற்படைகளுக்கு பயிற்சியளிப்பதே 5 நாள் நடைபெறும் இந்த AUMXஇன் நோக்கமாகும்.

- ✓ இப்பயிற்சியில் 1,250 இராணுவ வீரர்கள் ஈடுபடுவார்கள். AUMXஐ அமெரிக்காவும், இராயல் தாய் கடற்படையும் இணைந்து வழிநடத்துகின்றன. தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் புரூணை ஆகிய நாடுகளில் பயணம் செய்வதற்கான முன்னேற்பாட்டு பயிற்சிகளும் இதன்சமயம் மேற்கொள்ளப்படும். அதைத் தொடர்ந்து தாய்லாந்து, வளைகுடா மற்றும் தென் சீனக்கடலில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தப் பயிற்சிகள் அனைத்தும் சிங்கப்பூரில் நிறைவடையும்.

**7. சர்வதேச புலிகள் மன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

A) சென்னை

B) இலக்னோ

**C) புது தில்லி ☑**

D) காந்திநகர்

- ✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வில் சிக்கிம், உத்தரகண்ட், மேற்கு வங்கம் மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களின் உயரமான பகுதிகளில் புலிகள் இருப்பதை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் உறுதிப்படுத்தியுள்ளது. அதிக உயரமுள்ள இடங்களில் புலியின் வாழ்விடங்கள் பற்றிய பெருந்திட்டத்தை உருவாக்குவதற்காக, உயரமான சுற்றுச்சூழல் அமைப்புகளில் புலி வாழ்விடங்களின் நிலைகுறித்த இந்த ஆய்வை அமைச்சகம் பயன்படுத்தும்.
- ✓ பூட்டான், இந்தியா மற்றும் நேபாள நாட்டு அரசாங்கங்களுடன் இணைந்து சர்வதேச புலிகள் மன்றம் இந்த ஆய்வுக்கு தலைமைதாங்கியது. IUCN மற்றும் KfW (ஜெர்மன் வளர்ச்சி வங்கி) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த புலிகள் வாழ்விட பாதுகாப்புத் திட்டம் இதனை ஆதரிக்கிறது. சர்வதேச புலிகள் மன்றம் என்பது புலிகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச பரப்புரையை மேற்கொள்ள விரும்பும் நாடுகளின் உறுப்பினர்களின் துணையுடன் நிறுவப்பட்ட ஒரே ஓர் அரசுகளுக்கு இடையேயானதும் பன்னாட்டு அமைப்புமாகும். இதன் தலைமையகம், புது தில்லியில் அமைந்துள்ளது.

**8. கனரக பாரவுந்துகளுக்கு BS–VI சான்றிதழ் பெற்ற இந்தியாவின் முதல் வணிக வாகன உற்பத்தி நிறுவனம் எது?**

A) டாட்டா மோட்டார்ஸ்

**B) அசோக் லேலண்ட் ☑**

C) மகேந்திரா & மகேந்திரா

D) சுவராஜ் மஸ்தா



- ✓ அதன் 16.2 டன் மற்றும் அதற்கு மேற்பட்ட நிகர எடைகொண்ட கனரக பாரவுந்துகளுக்கு பாரத் நிலை – VI உமிழ்வு விதிமுறைகளை பூர்த்தி செய்த முதல் இந்திய மூலக்கருவி உற்பத்தி நிறுவனமாக அசோக் லேலண்ட் மாறியுள்ளது.

✓ BS–VI உமிழ்வு தரத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழை இந்நிறுவனம் இந்திய தானியங்கி ஆராய்ச்சி சங்கத்திடமிருந்து (ARAI) அண்மையில் பெற்றது. ARAI என்பது கனரக தொழில்கள் மற்றும் பொது நிறுவனங்கள் அமைச்சகத்துடன் இணைந்த ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது அனைத்து வகையான வாகனங்களுக்கும் ஒருங்கிணைந்த சான்றிதழையும், ஒத்திசைவு சேவைகளையும் வழங்கி வருகிறது.

✓ உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, வரும் 2020 ஏப்ரல்.1 முதல் பாரத் நிலை – IV தரச்சான்று பெற்ற எந்த ஒரு வாகனமும் நாட்டில் விற்பனை செய்யப்படமாட்டாது. அதற்கு மாற்றாக பாரத் நிலை – VI உமிழ்வு தரத்துடன் கூடிய வாகனங்கள் நாடு முழுவதும் நடைமுறைக்கு வரும். அசோக் லேலண்ட், இந்துஜா குழுமத்தின் ஒரு முன்னணி நிறுவனமாகும். மேலும், இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய வணிக வாகன உற்பத்தியாளராகும்.

**9. லியோ பார்கில் என்பது எந்த மாநிலத்தில் அமைந்துள்ள மலைச்சிகரமாகும்?**



A) சிக்கிம்

B) ஜம்மு மற்றும் காஷ்மீர்

**C) ஹிமாச்சல பிரதேசம் ☑**

D) உத்தரகண்ட்

✓ இந்திய இராணுவ அணியானது ஆக.20 அன்று லியோ பார்கில் (6773 மீ) மலையுச்சியை அடைந்தது. அங்கு இந்திய தேசியக்கொடியை அவர்கள் ஏற்றினர். இந்தப் பயணத்தை லெப்டினன்ட் ஜெனரல் PM பாலி, இராம்பூர் புஷார் அருகே ஜாக்ரியில் கொடியசைத்து தொடங்கிவைத்தார். லியோ பார்கில் என்பது ஹிமாச்சல பிரதேசத்தின் மூன்றாவது மிகவுயர்ந்த சிகரமாகும். இது ஜான்ஸ்கர் வரம்பில் உள்ளது.

**10. இந்தோ–அமெரிக்க இராணுவப் பயிற்சியான 'யுத் அபியாஸ் – 2019' நடத்தப்படுகிற நகரம் எது?**



A) ஜான்சி

B) நியூயார்க்

C) அஜ்மீர்

**D) வாஷிங்டன் ☑**

✓ "யுத் அபியாஸ் – 2019" என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் 15ஆவது பதிப்பு செப்டம்பர் 05–18 வரை அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள லூயிஸ் மெக் சோர்ட் கூட்டுத்தளத்தில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே நடத்தப்படுகிறது. இது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பெரிய கூட்டு இராணுவப் பயிற்சிகளுள் ஒன்றாகும். பல்வேறு விதமான படைகளின் அச்சுறுத்தல்களை ஒழித்துக்கட்டுவதற்காக இருபடைகளும் கூட்டாக இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ளும்.

# நடப்பு நிகழ்வுகள்


**1.கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்க ஓபன் அரையிறுதிக்கு முன்னேறியிருக்கும் முதல் இளம் வீராங்கனையாக உள்ள பியாங்கா ஆண்டரீஸ்கு, எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

**A) கனடா ☑**

B) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

C) ஜெர்மனி

D) ஆஸ்திரியா



- ✓ 2009ஆம் ஆண்டில் US ஓப்பன் அரையிறுதிக்கு முன்னேறிய கரோலின் வோஸ்னியாக்கிக்குப் பின், கடந்த பத்தாண்டுகளில் US ஓப்பன் அரையிறுதிக்கு முன்னேறிய முதல் இளம் வீராங்கனையாக 19 வயதான கனடிய இளம் வீராங்கனை பியாங்கா ஆண்டரீஸ்கு மாறியுள்ளார்.
- ✓ இறுதிப்போட்டியில் இடம்பெறுவதற்காக, பெல்ஜியத்தைச் சேர்ந்த எலிஸ் மெர்டென்சை 3–6, 6–2, 6–3 என்ற செட் கணக்கில் அவர் தோற்கடித்தார். இறுதிப்போட்டியில் வெல்லும் பட்சத்தில், 2006இல் US ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற மரியா ஷரபோவாவுக்குப் பிறகு, அப்பட்டத்தை வெல்லும் முதல் இளம் வீராங்கனையாக பியாங்கா ஆண்டரீஸ்கு மாறுவார். மேலும் 2004ஆம் ஆண்டில் US ஓப்பன் சாம்பியன் பட்டத்தை வென்ற இரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லனா குஸ்நெட்சோவாவுக்குப் பிறகு அப்பட்டத்தை வெல்லும் முதல் மிகவும் இளவயது வீராங்கனையாக அவர் ஆவார்.

**2.வாத்திகனின் 'புனித பிரான்சிஸ் அமைதியின் விளக்கு' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் யார்?**

A) நரேந்திர மோடி

**B) முகமது யூனுஸ் ☑**

C) சச்சின் டெண்டுல்கர்

D) ஏ ஆர் ரகுமான்



- ✓ அமைதியையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதற்கு பங்களித்தமைக்காக வாத்திகனால் வங்கதேசத்தைச்சேர்ந்த நோபல் பரிசுபெற்ற பேராசிரியர் முகமது யூனுஸ் அவர்கட்கு, 'புனித பிரான்சிஸ் அமைதியின் விளக்கு' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த விருது வழங்கும் விழா, அண்மையில், இத்தாலியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அசிசியின் பாப்பல் பேராலயத்தில் நடந்தது.
- ✓ மக்களிடையே அமைதியை ஊக்குவிப்பதற்காக பணியாற்றும் ஒரு தனிநபரின் சிறப்பான பணியை அங்கீகரிக்கும் விதமாக இவ்விருது வழங்கப்படுகிறது. இந்த விருது, முதன்முதலில், போலந்து தொழிற் சங்க தலைவரான லெக் வாலேசாவுக்கு 1981ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. தலாய்லாமா, மிக்கைல் கோர்பச்சோவ் & ஏஞ்சலா மெர்கல் ஆகியோர் இவ்விருதை ஏற்கனவேபெற்ற சில முக்கிய நபர்களாவர்.

**3.எந்த நகரத்திலிருந்து 'நடமாடும் அறிவியல் கண்காட்சி' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?**

A) இராஞ்சி

B) புது தில்லி

C) சிம்லா

**D) லே ☑**




- ✓ மத்திய சுற்றுலா மற்றும் கலாசார அமைச்சர் பிரகலாத் சிங் படேல், அண்மையில், லேவில் உள்ள லே அரண்மனையில், நாட்டின் முதல், 'நடமாடும் அறிவியல் கண்காட்சி'யை கொடியசைத்து தொடங்கி வைத்தார். லேவிலிருந்து ஒரு தேசியத் திட்டம் தொடங்கப்படுவது இதுவே முதல் முறையாகும். மாணவர்கள் மற்றும் மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பிரபலப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- ✓ 'நடமாடும் அறிவியல் கண்காட்சி' என்பது ஒரு பேருந்தினுள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பொதுமக்களை நேரடியாக அணுகி அறிவியல் தொழில்நுட்பத்தை காண்பிக்க முடியும். இந்தப் பேருந்து கிராமப்புறங்களில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் பயணித்து ஆண்டு முழுவதும் கண்காட்சிகளை நடத்தும். இந்தக் கண்காட்சியுடன் தொலைநோக்கி மூலம் வான் கண்காணிப்புத் திட்டம், அறிவியல் திரைப்பட நிகழ்வு, அறிவியல் விளக்க விரிவுரைகள் போன்ற சில நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படும்.
- ✓ இத்திட்டம் அன்றாட அறிவியல் தொடர்பான பல்வேறு ஊடாடும் கண்காட்சிகளையும் கொண்டுள்ளது. இந்தப் பேருந்தில், 20 ஊடாடும் கண்காட்சிகள் உள்ளன. நாடு முழுவதும் 25 'நடமாடும் அறிவியல் கண்காட்சி'ப் பேருந்துகளை கலாசார அமைச்சகம் அறிமுகப்படுத்தவுள்ளது.

**4.சிறார்களுக்கான '2019 UNICEF தெற்காசிய நாடாளுமன்றவாதிகள் மாநாடு' நடந்த நகரம் எது?**

**A) கொழும்பு ☑**

B) பாரிஸ்

C) நியூயார்க்

D) பெர்லின்




- ✓ சிறார்கள் உரிமை தீர்மானம் தொடர்பான UNICEF தெற்காசிய நாடாளுமன்றவாதி மாநாடானது செப்டம்பர் 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில், இலங்கையில் உள்ள கொழும்புவில் நடைபெற்றது. சிறார்கள் உரிமைகளை அடைவதற்கான தேசிய அளவிலான திட்டங்களை முன்னெடுப்பதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்மாநாடு ஒரு வாய்ப்பளித்தது.
- ✓ சிறார்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தமானது பெரும்பாலும் எல்லோரும் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் ஒப்பந்தமாகும். ஆனால், இம்மாநாட்டின்போது பாகிஸ்தானைச் சேர்ந்த பிரதிநிதிகள் காஷ்மீர் பிரச்சனையை எழுப்ப முயன்றனர். இதற்கு இந்தியத் தரப்பிலிருந்து கடுமையான எதிர்ப்பு

கிளம்பியது. இந்திய பங்கேற்பு குழுவிலிருந்த காங்கிரஸ் MP கௌரவ் கோகோய் மற்றும் பா.ஜ.க MP சஞ்சய் ஜெய்ஸ்வால் ஆகியோர் பாகிஸ்தானின் கூற்றுக்கு எதிராக ஒற்றுமையாக குரல் கொடுத்தனர்.

**5. சகோதரி மாநிலத்திற்காக அமெரிக்காவின் டெலவெயர் மாநிலத்துடன் சமீபத்தில் ஒப்பந்தம் செய்துள்ள மாநில அரசு எது?**

A) ஆந்திர பிரதேசம்

**B) குஜராத் ☑**

C) ஜார்க்கண்ட்

D) மகாராஷ்டிரா

✓ குஜராத் மாநில அரசு சமீபத்தில் காந்திநகரில், அமெரிக்காவின் டெலவெயர் மாநிலத்துடன் சகோதரி மாநில புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Sister State MoU) கையெழுத்திட்டது. ஓர் அமெரிக்க மாநிலத்துடன் குஜராத் கையெழுத்திட்ட முதல் சகோதரி மாநில புரிந்துணர்வு ஒப்பந்தம் இதுவாகும். அலுவல்பூர்வ வட்டாரங்களின்படி, சேவைத் துறையில் ஒத்துழைப்பு மற்றும் GIFT IFSCஇல் முதலீட்டு வாய்ப்புகள் பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன. உயிரி தொழில்நுட்ப பல்கலைக்கழகம், உயிரி அறிவியல், நிதியியல் சேவைகள், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணை, துறைமுக சேவைகள் போன்ற துறைகள் எதிர்கால ஒத்துழைப்புக்காக பட்டியலிடப்பட்டுள்ளன.

**6.டிஜிட்டல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்குவதற்காக ICICI வங்கியிடமிருந்து $300 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தை சமீபத்தில் பெற்ற நிறுவனம் எது?**

**A) விப்ரோ ☑**

B) இன்போசிஸ்

C) டாடா

D) ரிலையன்ஸ்

✓ டிஜிட்டல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்குவதற்காக ICICI வங்கியிடமிருந்து $300 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தை சமீபத்தில் WIPRO நிறுவனம் பெற்றது. WIPRO – ICICI வங்கி இடையில் நடந்துள்ள இந்த ஒப்பந்தம் ஏழாண்டு காலத்திற்கானதாகும். இதன் மதிப்பு $300 மில்லியன் டாலர் என WIPRO தெரிவித்துள்ளது. ஏற்கனவே இந்தச் சேவைகளை வாரா இன்போடெக் நிறுவனம் அளித்து வந்தது.

✓ இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாரா இன்போடெக் நிறுவனத்தின் 3800 பணியாளர்கள், இந்நிறுவனத்தின் திட்டங்களையும், அனைத்து சேவைகளையும், ₹321 கோடி ரூபாய்க்கு WIPRO வாங்கியுள்ளது. இதன் மூலம், இனி வாரா இன்போடெக் நிறுவனம் விப்ரோ நிறுவனத்தின் இணைநிறுவனமாக செயல்படும். இந்த இணைப்பு செப்.30ஆம் தேதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.


**7. EIUஇன் உலகளாவிய வாழத்தகுந்த நகரங்கள் குறியீட்டின்படி, உலகின் மிகவும் வாழத்தகுந்த நகரம் எது?**

A) சிட்னி

**B) வியன்னா ☑**

C) மெல்பர்ன்

D) பாரிஸ்



- ✓ நடப்பாண்டுக்கான உலகில் மனிதர்கள் வாழத்தகுந்த நகரங்களின் குறியீட்டை பொருளாதார புலனாய்வு பிரிவு (EIU) வெளியிட்டுள்ளது. எந்தெந்த நகரங்கள் சிறந்த அல்லது மோசமான வாழத்தகுந்த நிலைமைகளை வழங்குகின்றன என்பதை இந்தக் குறியீடு மதிப்பீடு செய்கிறது. ஒரு நகரத்தின் ஒவ்வொரு காரணியும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை, சகித்துக்கொள்ளக்கூடியவை, சங்கடமானவை, விரும்பத்தகாதவை அல்லது சகித்துக்கொள்ள முடியாதவை என மதிப்பிடப்படுகின்றன.
- ✓ நடப்பாண்டு குறியீட்டில் வியன்னா (ஆஸ்திரியா) முதலிடத்திலும், மெல்பர்ன் மற்றும் சிட்னி ஆகிய நகரங்கள் அதைத் தொடர்ந்த இடங்களிலும் உள்ளன. 140 நகரங்களில் இந்தியாவிலிருந்து, புது தில்லி மற்றும் மும்பை ஆகிய நகரங்கள் முறையே 118ஆவது இடத்திலும் 119ஆவது இடத்திலும் உள்ளன. போரினால் பாதிக்கப்பட்ட டமாஸ்கஸ் (சிரியா) பட்டியலின் கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.

**8.எந்தத் தேதியில், சர்வதேச தொண்டு நாள் (International Day of Charity) கடைப்பிடிக்கப்படுகிறது?**

**A) செப்டம்பர் 5 ☑**

B) செப்டம்பர் 4

C) செப்டம்பர் 6

D) செப்டம்பர் 3

International Day of Charity

- ✓ அனைத்து மட்டங்களிலும் தொண்டுசார் நடவடிக்கைகட்கு ஒரு பொதுவான தளத்தை வழங்குவதும், தொண்டு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காகவும் பொருட்டு, ஆண்டுதோறும் செப்டம்பர்.5 அன்று சர்வதேச தொண்டு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

**9. நேரடி பயன்கள் பரிமாற்ற வசதிக்காக தொழிலாளர் அரசு காப்பீட்டுக்கழகமானது (ESIC) எந்த வங்கியுடன் இணைந்துள்ளது?**

A) பஞ்சாப் தேசிய வங்கி

**B) பாரத ஸ்டேட் வங்கி ☑**

C) பரோடா வங்கி

D) ஆக்சிஸ் வங்கி

✓ அனைத்து பயனாளிகளின் வங்கிக்கணக்குகளிலும் மின்னணு முறையில் நேரடி பயன்கள் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்காக தொழிலாளர் அரசு காப்பீட்டுக்கழகமானது (ESIC) பாரத ஸ்டேட் வங்கியுடன் (SBI) கூட்டு சேர்ந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் படி, ஒருங்கிணைந்த மற்றும் தானியங்கி செயல்முறையாக எந்தவொரு மனித தலையீடும் இல்லாமல், அனைத்து ESIC பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கும் SBI நேரடியாக மின்னணு கொடுப்பனவு சேவைகளை வழங்கும்.

✓ வங்கி அதன் மின்னணு கொடுப்பனவு தொழினுட்ப தளத்தின் மூலம் ESICஇன் நிறுவன வள திட்டமிடல் செயல்முறைகளுடன் மின்னணு கொடுப்பனவு (e–payment) ஒருங்கிணைப்பை வழங்கும். அது, ESIC பயனாளிகளுக்கு நிகழ்நேர அடிப்படையில் சட்டரீதியான பயன் கொடுப்பனவுகளை வழங்கும். இது நேர விரயங்கள் மற்றும் தாமதங்களை குறைக்கும் அதேநேரத்தில், மனிதர்களால் தரவு உள்ளீடு செய்யப்படும்போது ஏற்படும் தவறுகளையும் பிழைகளையும் அகற்ற உதவுகிறது.

**10. WEFஇன் நடப்பாண்டு உலக பயணம் & சுற்றுலா போட்டித்திறன் குறியீட்டில், இந்தியாவின் தரநிலை என்ன?**

A) 55ஆவது

**B)** 34ஆவது ☑

C) 67ஆவது

D) 25ஆவது

Incredible !ndia

✓ உலக பொருளாதார மன்றத்தால் (WEF) நடப்பாண்டுக்கான உலக பயணம் & சுற்றுலா போட்டித்திறன் குறியீடு வெளியிடப்பட்டுள்ளது. அதில், இந்தியா அதன் வளமான இயற்கை மற்றும் கலாசார வளங்கள் ஆகியவற்றுக்காக ஆறு இடங்கள் முன்னேற்றி 34ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தக் குறியீட்டில், ஸ்பெயின் முதலிடத்திலும் பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் அதைத் தொடர்ந்த அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

✓ இக்குறியீடானது 140 உலக பொருளாதாரங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் போட்டித்திறனுக்கு பெரிதும் பங்களிக்கும் பயணம் மற்றும் சுற்றுலாத்துறையின் நீடித்த வளர்ச்சிக்கு உதவும் காரணிகள் மற்றும் கொள்கைகளின் தொகுப்பை இது அளவிடுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்


✓ அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் தொழில்முனைவோர்களுக்கான 'யாதும் ஊரே' திட்டத்தை தமிழ்நாட்டு முதலமைச்சர் க.பழனிசாமி தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின்படி, ₹60 லட்சம் செலவில், தனியாக ஒரு வலைத்தளம் உருவாக்கப்படும். இதன்மூலம் உலகெங்கும் உள்ள தொழில்முனைவோ–ர்கள், தங்களின் முதலீடுகளை தமிழ்நாட்டில் ஏற்படுத்த முடியும். அதேபோல 'தொழில்வளர் தமிழகம்' என்ற பெயரில் தொழில் நிகழ்வுகள் நடத்தப்படும்.

# தேசிய நல்லாசிரியர் விருது – 2019

- தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்கள், புதுச்சேரியைச் சேர்ந்த ஒருவர் உட்பட 46 பேருக்கு 'தேசிய நல்லாசிரியர் விருது'களை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கி கௌரவித்தார். முன்னாள் குடியரசுத்தலைவர் Dr. S. இராதாகிருஷ்ணனின் பிறந்தநாளான செப்.5 ஆசிரியர் நாளாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, 'தேசிய நல்லாசிரியர் விருது' குடியரசுத்தலைவரால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.
- 'தேசிய நல்லாசிரியர் விருது'க்கு தேர்வு செய்யப்பட்ட 46 பேரில் தமிழ்நாட்டின் கரூர் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியப்பள்ளியின் தலைமையாசிரியர் R.செல்வக்கண்ணன், கோபிசெட்டிப் பாளையம் வைரவிழா மேல்நிலைப்பள்ளியின் சமூக அறிவியல் ஆசிரியர் M.மன்சூர் அலி, புதுச்சேரி கூனிச்சம்பட்டு பாவேந்தர் பாரதிதாசன் அரசுத் தொடக்கப்பள்ளியின் பொறுப்புத்தலை –மையாசிரியர் S.சசிகுமார் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# நடப்பு நிகழ்வுகள்

1.அண்மையில் காலமான கிரண் நாகர்கர், எந்தத் துறைசார்ந்தவராவார்?



A) அரசியல்

**B)** நாடகம் ☑

C) விளையாட்டு

D) அறிவியல்

✓ புகழ்பெற்ற ஆங்கில–மராத்தி புதின ஆசிரியரும் நாடக ஆசிரியருமான கிரண் நாகர்கர் (77), மும்பையில் செப்.5 அன்று காலமானார். 'ஏழும் ஆறும் நாற்பத்து மூன்று (1974)', 'இராவணனும் எடியும் (1994)' மற்றும் ஆங்கிலப் புதினமான 'கக் ஓல்ட் (1997)' போன்றவை அவரது சில படைப்புகளாகும். அவர் தனது சமீபத்திய புதினமான 'ஜசோதா'வை 2017ஆம் ஆண்டு நவம்பரில் வெளியிட்டார்.

2.ஸ்ரீஹரி நடராஜ், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?



A) குத்துச்சண்டை

**B)** நீச்சல் ☑

C) ஜூடோ

D) சதுரங்கம்

✓ பிரகாஷ் தருண் புஷ்கர் நீச்சல் குளத்தில் நடந்த 73ஆவது கிளென்மர்க் தேசிய மூத்த நீர் சாம்பியன்ஷிப் போட்டியில், பெங்களூருவைச் சேர்ந்த ஸ்ரீஹரி நடராஜ், 'சிறந்த நீச்சல் வீரர்' விருதை வென்றுள்ளார். ஆடவர் 100 மீட்டர் பின்னோக்கிய நீந்தலில் (backstroke) அவர் தேசிய சாதனை படைத்துள்ளார். இதற்கிடையில், ஹரியானாவைச் சேர்ந்த சிவானி கட்டாரியா, 'சிறந்த நீச்சல் வீராங்கனை'யாக தேர்வு செய்யப்பட்டார். ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் மற்றும் ஆண்கள் அணிக்கான பட்டத்தை கர்நாடகா அணியும், பெண்கள் அணிக்கான கோப்பையை மகாராஷ்டிரா அணியும் வென்றது.

3.4ஆவது இந்திய பெருங்கடல் மாநாடு நடைபெற்ற நகரம் எது?




A) புது தில்லி

B) பெய்ஜிங்

C) கொழும்பு

**D)** மாலே ☑

✓ நான்காவது இந்திய பெருங்கடல் மாநாடானது செப்.3 & 4 ஆகிய தேதிகளில் மாலேவில் நடைபெற்றது. இந்திய அறக்கட்டளையானது மாலத்தீவு அரசாங்கம் மற்றும் S. இராஜரத்தினம் சர்வதேச ஆய்வுகள்

பள்ளி ஆகியவற்றுடன் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தது. "Securing the Indian Ocean Region: Traditional and Non–Traditional Challenges" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

**4.** இந்திய உலக விவகாரங்கள் கழகத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A) கொல்கத்தா

B) புனே

**C) புது தில்லி ☑**

D) சென்னை

✓ 'India–Africa Partnership in a Changing Global Order–Priorities, Prospects and Challenges' என்ற தலைப்பில், புது தில்லியில், இந்திய உலக விவகாரங்கள் கழகமானது (Indian Council of World Affairs – ICWA) மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. ICWA என்பது பன்னாட்டு உறவுகள் மற்றும் வெளிநாட்டு விவகாரங்களின் ஆய்வுக்காக மட்டுமே முழுவதும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

✓ இது ஐ.நா கல்வி தாக்கத்தின் உறுப்பினராகவும் உள்ளது. இந்தியாவின் துணை குடியரசுத்தலைவர் இதன் பதவிவழித் தலைவராகவும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் இதன் துணைத்தலைவராகவும் உள்ளனர். இதன் தலைமையகம் தேசிய தலைநகரான புது தில்லியில் அமைந்துள்ளது.

**5.** மின்வெளிக்குற்ற விசாரணை தொடர்பான முதலாவது தேசிய மாநாடு நடைபெற்ற நகரம் எது?

**A) புது தில்லி ☑**

B) இலக்னோ

C) ஜெய்ப்பூர்

D) போபால்

✓ மத்திய புலனாய்வு பிரிவானது (CBI) சமீபத்தில் மின்வெளிக் குற்ற (cyber crime) விசாரணை மற்றும் தடயவியல் தொடர்பான முதலாவது தேசியமாநாட்டை புது தில்லியில் உள்ள அதன் தலைமையகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. புலனாய்வாளர்கள், வழக்குரைஞர்கள், தடயவியல் வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒருங்கிணைத்து மின்வெளிக் குற்றம் தொடர்பான சவால்கள் மற்றும் தீர்வுகள் கண்டறிவதற்கான வழிகள் குறித்து விவாதிப்பதே இந்த 2 நாள் மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

**6.** அதிநவீன பகுப்பாய்வு & தொழில்நுட்ப உதவி நிறுவனமாக (SATHI) தேர்வாகியுள்ள IIT எது?

A) ஐஐடி கான்பூர்

**B) ஐஐடி கரக்பூர் ☑**

C) ஐஐடி மெட்ராஸ்

D) ஐஐடி இந்தூர்

- ✓ தில்லி ITIக்குப்பிறகு, மத்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் "அதிநவீன பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனத்திற்கு (SATHI) கரக்பூர் IIT தேர்வு செய்யப்பட்டுள்ளது. SATHI (Sophisticated Analytical and Technical Help Institute) மையமானது ஆண்டு முழுவதும் (24×7) இயங்கும்.

- ✓ பிற கல்வி நிறுவனங்கள், தேசிய ஆய்வகங்கள், துளிர் நிறுவனங்கள், தொழில்முனைவோர் மற்றும் தொழிற்துறைசார்ந்த வெளி பயனர்களுக்கு குறைந்தபட்சம் 70% கருவிகளைப் பயன்படுத்தும் நேரம் ஒதுக்கப்படும். நாட்டில் அறிவியல் அடிப்படையிலான தொழில்முனைவு மற்றும் துளிர் நிலைகளின் கலாசாரத்தை மேம்படுத்துவதற்கான SATHI மையத்தை அதன் சமூக அறிவியல் பொறுப்புத் திட்டமாக கரக்பூர் IIT நிறுவனம் கருதுகிறது.

7. தகுதிகான் கிரிக்கெட் போட்டி (test match) வரலாற்றில் மிகவும் இளவயது அணித்தலைவராக உள்ளவர் யார்?

A) நயீம் ஹசன்

B) தைசூல் இசுலாம்

C) மோமினுல் ஹக்

**D) இரஷீத் கான் ☑**



- ✓ வங்கதேசத்துக்கு எதிரான ஒருநாள் தகுதிகாண் போட்டியில் தனது அணியை வழி நடத்திய பின்னர், தகுதிகான் கிரிக்கெட் போட்டி வரலாற்றில் மிகவும் இளவயது அணித்தலைவராக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இடச்சுழற்பந்துவீச்சாளர் இரஷீத் கான் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். இதன்மூலம், ஏற்கனவே இந்தச் சாதனையை புரிந்த ஜிம்பாப்வே அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் டாடென்டா தைபுவின் சாதனையை இரஷீத் முறியடித்தார். 19 ஆண்டு & 165 நாட்களில், ஒரு சர்வதேச அணியின் அணித்தலைவராக இருந்த இளம்வீரர் என்ற பெருமையையும் இரஷீத் கான் பெற்றுள்ளார்.

8. ஐந்தாவது கிழக்கத்திய பொருளாதார மன்றத்தில் பங்கேற்ற இந்தியத் தூதுக்குழுவிற்கு தலைமைதாங்கியவர் யார்?

A) விஜய் கேசவ் கோகலே

**B) நரேந்திர மோடி ☑**

C) சுப்பிரமணியம் ஜெய்சங்கர்

D) இராம்நாத் கோவிந்த்



- ✓ இரஷ்யாவின் தூரக்கிழக்கு பிராந்தியத்திற்கு பயணம் மேற்கொள்ளும் முதலாவது இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி மாறியுள்ளார். அதிபர் புதினுடன் 20ஆவது இந்திய–இரஷ்ய ஆண்டு உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட அவர் தூரக்கிழக்குப் பிராந்தியத்தின் வளர்ச்சிக்காக $1 பில்லியன் டாலர் கடனை அறிவித்தார். ஐந்தாவது கிழக்கத்திய பொருளாதார மன்றத்திலும் நரேந்திர மோடி கலந்துகொண்டார்.

- ✓ இரஷ்யாவின் தூரக்கிழக்குப் பிராந்தியத்தின் தொழில் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவது குறித்து இந்த அமைப்பு கவனம் செலுத்தும். இந்தப் பிராந்தியத்தில், இந்தியா – இரஷ்யா இடையே பரஸ்பரம் நலன்சார்ந்த நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான ஆற்றல் வளத்தை இந்த அமைப்பு வழங்கும்.

**9.** உலக தங்க கவுன்சிலின்படி (World Gold Council), மொத்த தங்க இருப்பின் அடிப்படையில் இந்தியாவின் தரநிலை யாது?

A) 7ஆவது

**B) 10ஆவது** ☑

C) 6ஆவது

D) 9ஆவது

- ✓ உலக தங்க கவுன்சிலின் அண்மைய அறிக்கையின்படி, 8133.5 டன்கள் மொத்த தங்க இருப்புடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. ஜெர்மனி (3366.8 டன்), சர்வதேச நாணய நிதியம் (IMF) (2451.8 டன்), இத்தாலி (2451.8 டன்) மற்றும் பிரான்ஸ் (2436.1 டன்) மொத்த தங்க இருப்புடன் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. 618.2 டன் மொத்த தங்க இருப்புடன் இந்தியா பத்தாவது இடத்தில் உள்ளது. இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், அமெரிக்கா மற்றும் ஜெர்மனிக்கு அடுத்தபடியாக IMF மூன்றாவது இடத்தைப் பிடித்திருப்பதால், நாடுகளின் அடிப்படையில் இந்தியா உண்மையில் ஒன்பதாம் இடத்தில் உள்ளது.


**10.** பெருநிறுவன கடன்களுக்கான இரண்டாம் நிலை சந்தையை உருவாக்குவதற்காக, வங்கி சாரா நிறுவனங்களைப் பங்கேற்க அழைக்கும் ரிசர்வ் வங்கிப் பணிக்குழுவின் தலைவர் யார்?

A) B P கனுங்கோ

**B) T N மனோகரன்** ☑

C) M K ஜெயின்

D) N S விஸ்வநாதன்



- ✓ கனரா வங்கித் தலைவர் T N மனோகரன் தலைமையிலான 6 உறுப்பினர்களைக் கொண்ட ரிசர்வ் வங்கிப் பணிக்குழுவானது ஆவணங்கள் தரப்படுத்துதல் உள்ளிட்ட பெருநிறுவன கடன்களுக்கான இரண்டாம் நிலை சந்தைக்கான விவரங்களை இறுதிசெய்வதற்காக, சந்தைப்பங்கேற்பாளர்களின் தன் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்க பரிந்துரைத்துள்ளது.
- ✓ பரஸ்பர நிதியங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் போன்ற வங்கிசாரா நிறுவனங்களின் பங்களிப்பை தொடங்குவதற்காக SEBI, IRDA மற்றும் PFRDA ஆகியவற்றின் விதிமுறைகளை திருத்துவதற்கும் இது அழைப்பு விடுத்துள்ளது. பெருநிறுவன கடன்களை ஏலம் விடுவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஆன்லைன் கடன் விற்பனை தளமாகவும் செயல்படும் ஒரு மத்திய கடன் ஒப்பந்த பதிவேட்டை அமைப்பதற்கும் அக்குழு பரிந்துரைத்துள்ளது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தேசிய அளவில் "பெண் குழந்தைகளைக் காப்போம்; கற்பிப்போம்" எனும் மத்திய அரசின் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திதற்காக தமிழ்நாட்டின் நாமக்கல் (தொடர்ந்து 5 ஆண்டுகளாக பெண் பாலின பிறப்பு விகிதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததற்காக), திருவள்ளூர் (பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை சிறந்த முறையில் உயர்த்தியதற்காகவும், விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காகவும்) முதலிய மாவட்டங்களுக்கு தில்லியில் நடைபெற்ற விழாவில் விருது வழங்கப்பட்டது.
- ✓ சேலம் மாவட்டத்தின் மேட்டூர் அணையானது அது கட்டிமுடிக்கப்பட்டு 86 ஆண்டுகள் ஆன நிலையில், 43ஆவது முறையாக தனது முழு கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளது.
- ✓ தமிழ்நாட்டில் தொழில்முனைவோருக்குத் தேவையான உதவிகளை அளிக்க 'டிஜிட்டல் ஊக்கமூட்டும் திட்டம்' என்றவொரு புதிய திட்டத்தை தமிழ்நாட்டு முதலமைச்சர் க.பழனிசாமி தொடங்கிவைத்தார். அமெரிக்க தொழில்முனைவோர் என்ற அமைப்பின் உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் மூலம் நிதியுதவி பெறவுள்ள தமிழ்நாட்டு தொழில்முனைவோருக்கு அவர்கள் தொடங்கும் புதிய தொழிலுக்குத் தேவையான நிதியில் 10 சதவீதத்தை தமிழ்நாடு அரசு வழங்கும்.

# நடப்பு நிகழ்வுகள்

1.அண்மையில் காலமான விடுதலைப் போராட்ட வீரர் ஹீராலால் சர்மா, இராஜஸ்தானின் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராவார்?

**A) பிகானேர் ☑**

B) உதய்பூர்

C) ஜெய்ப்பூர்

D) கோட்டா



✓ விடுதலைப் போராட்ட வீரரான ஹீராலால் சர்மா தனது 95ஆம் வயதில் இராஜஸ்தானின் பிகானேரில் காலமானார். இந்திய விடுதலைப்போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்ற காரணத்தினால் ஈராண்டுகள் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

2.எந்த நகரத்தில், இந்தோ – தாய் CORPATஇன் 28ஆவது சுற்று தொடங்கியுள்ளது?

A) கொச்சின்

**B) பாங்காக் ☑**

C) சென்னை

D) கொல்கத்தா



✓ இந்தியா – தாய்லாந்து ஆகிய இருநாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான இந்தியா – தாய்லாந்து ஒருங்கிணைந்த ரோந்தின் (**COoR**dinated **PAT**rol – **CORPAT**) 28ஆவது சுற்றானது செப்.5 தொடங்கி செப்.15 வரை தாய்லாந்தின் பாங்காங்கில் நடைபெறவுள்ளது. கடல்சார் சட்டங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தை (UNCLOS) திறம்பட செயல்படுத்துவதை உறுதிசெய்வதே இந்தோ – தாய் CORPATஇன் நோக்கமாகும்.


3.அண்மையில் காலமான அப்துல் காதிர், எந்த நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற இடச்சுழற்பந்து வீச்சாளராவார் (leg–spinner)?

A) இந்தியா

**B) பாகிஸ்தான் ☑**

C) வங்கதேசம்

D) தென்னாப்பிரிக்கா



✓ பாகிஸ்தானின் முன்னாள் இடச்சுழற்பந்து வீச்சாளரான அப்துல் காதிர் கான் (63) செப்டம்பர்.7 அன்று இலாகூரில் காலமானார். மொத்தம் 67 டெஸ்ட் மற்றும் 104 ஒருநாள் ஆட்டங்களில் ஆடி, 368 சர்வதேச விக்கெட்டுகளை அவர் வீழ்த்தியுள்ளார். உலக கிரிக்கெட்டில் வேகப்பந்து வீச்சு ஆதிக்கம் செலுத்திக்

கொண்டிருந்த போது, இடச்சுழற்பந்துவீச்சுக் கலை முடிவுக்கு வரும் என்ற நிலையில் அதனை உலக கிரிக்கெட்டுக்கு புதுப்பித்துக் கொடுத்தவர் அப்துல் காதிர் கான்.

4.உட்கட்டமைப்பிற்கான திட்ட வரைவை தயார் செய்யும் பணிக்குழுவின் தலைவர் யார்?

A) சோபனா K. பட்டநாயக்

B) அருண் கோயல்

**C) இராஜீவ் குமார் ☑**

D) திரிலோச்சன் மோகபத்ரா



✓ 2019–20 முதல் 2024–25 நிதியாண்டு வரை ₹100 இலட்சம் கோடி தேசிய உட்கட்டமைப்பிற்கான திட்ட வரைவை தயாரிப்பதற்கான பணிக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இராஜீவ் குமார் (பொருளாதார விவகாரங்கள் செயலர்) தலைமையிலான இக்குழு, 2019–20ஆம் நிதியாண்டிலேயே தொடங்கக்கூடிய தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் நிதியியல் ரீதியாக சாத்தியமாகக்கூடிய உட்கட்டமைப்புத் திட்டங்களை பரிந்துரைக்கும்.

✓ Greenfield மற்றும் Brownfield திட்டங்களுக்காக தலா ₹100 கோடி ஒதுக்கீடும் இந்தத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இந்திய முதலீட்டு கட்டமைப்பு மற்றும் தேசிய முதலீட்டு & உட்கட்டமைப்பு நிதியத்தின் மூலம் தனியார் முதலீடு தேவைப்படும் திட்டங்களுக்கு சந்தைப்படுத்தலை மேற்கொள்ளவும் இது உதவுகிறது.


5.பறவையின சளிக்காய்ச்சலில் (H5N1) இருந்து விடுபட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள நாடு எது?

A) நேபாளம்

**B) இந்தியா ☑**

C) இலங்கை

D) வங்கதேசம்



✓ பறவையின சளிக்காய்ச்சலில் இருந்து இந்தியா விடுபட்டுள்ளதாக விலங்குகள் நலத்திற்கான உலக அமைப்பு அறிவித்துள்ளது. மற்றொரு நோய்த்தொற்று கண்டறியப்படும் வரை இத்தகுதி இந்தியாவுக்கு வழங்கப்படும். இது ஒரு மிகக்கொடிய தொற்றுநோய் நச்சுயிரியாகும் (virus); இது குறிப்பாக கோழிகள், வான்கோழிகள் மற்றும் வாத்துகள் போன்ற பறவையினங்களை பாதிக்கின்றது. சிலவேளைகளில் மனிதர்களை தாக்கும் இந்த நச்சுயிரி மரணத்தைக் கூட ஏற்படுத்தவல்லது.

6.உலக நலவாழ்வு அமைப்பின் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள எந்தெந்த உறுப்பு நாடுகள், B வகை கல்லீரல் அழற்சியை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளன?

A) இந்தியா, பூட்டான், நேபாளம் & இலங்கை

B) வங்கதேசம், இந்தோனேசியா, வியட்நாம் & மியான்மர்

World Health Organization

C) இந்தியா, நேபாளம், மியான்மர் & தாய்லாந்து

**D) வங்கதேசம், பூட்டான், நேபாளம் & தாய்லாந்து ☑**

- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) தென்கிழக்காசிய பிராந்தியத்தில், B வகை கல்லீரல் அழற்சியை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ள முதல் நான்கு நாடுகளாக வங்கதேசம், பூட்டான், நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. 5 வயதுக்கும் குறைவான குழந்தைகளிடையே நோய்த்தாக்கம் 1 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கும்போது இந்த நச்சுயிரி கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது.
- ✓ B வகை கல்லீரல் அழற்சி என்பது ஒரு நச்சுயிரி தொற்று ஆகும். இது கல்லீரலைத் தாக்குகிறது. மேலும், கடுமையான மற்றும் நாட்பட்ட நோய்களை ஏற்படுத்துகிறது.

**7.** 'Mid–Monsoon 2019 Lightning' என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டுள்ள இந்திய அமைப்பு எது?

A) இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம்

**B) இந்திய வானிலை ஆய்வுமையம் ☑**

C) இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்

D) இந்திய ரிசர்வ் வங்கி



- ✓ 'Mid–Monsoon 2019 Lightning' என்ற தலைப்பிலான அறிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையத்தின் ஆராய்ச்சி அமைப்பான காலநிலை மீள் கண்காணிப்பு அமைப்புகள் ஊக்குவிப்பு கழகம் (CROSPC) தயாரித்துள்ளது. இது இந்தியாவில் நிகழ்ந்த மின்னல் தாக்குதல் குறித்து வெளியிடப்படும் முதலாவது அறிக்கையாகும்.
- ✓ ஏப்ரல் – ஜூலை வரையிலான 4 மாத காலப்பகுதியில், ஒடிசாவில் அதிக மின்னல் தாக்குதல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மகாராஷ்டிரத்தில் 6.26 இலட்சம் மின்னல்களும், கர்நாடகத்தில் 6.21 இலட்சம் மின்னல்களும் தாக்கியுள்ளன. மின்னல் தாக்கியதில் மட்டும் குறைந்தது 1311 பேர் உயிரிழந்துள்ளனர். 224 உயிரிழப்புகளுடன் உத்தரப்பிரதேசம் முதலிடத்திலும் பீகார் (170), ஒடிசா (129), ஜார்க்கண்ட் (118) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

**8.** எந்தப் பெருந்திரள் ஊடக பரப்புரையுடன், 'POSHAN மா – 2019' தொடங்கப்பட்டுள்ளது?

A) POSHAN அபியான்

B) தூய்மை இந்தியா இயக்கம்

C) ஆயுஷ்மான் பாரத்

**D) சரியானதை உண்ணுங்கள் இந்தியா (Eat Right India) ☑**




- ✓ மத்திய நலவாழ்வு அமைச்சர் Dr. ஹர்ஷ்வர்தன், 'ஊட்டச்சத்து மாதம் – 2019'ஐ தொடங்கி, 'சரியானதை உண்ணுங்கள் இந்தியா' இயக்கம் குறித்த ஓராண்டுகால பெருந்திரள் ஊடக பரப்புரையை தொடங்கி

வைத்தார். இந்த இயக்கமானது அரசின் முன்னணி நலவாழ்வுத் திட்டங்களான POSHAN அபியான், இரத்தசோகை முக்த் பாரத் திட்டம் & தூய்மை இந்தியா இயக்கம் ஆகியவற்றுடன் ஒத்திசைந்துள்ளது. மேலும், நலம் பயக்கும் உணவுகள் அடங்கிய ஒரு தட்டு, சரியானதை உண்ணுவது குறித்த ஓர் இணையவழி வினாடி வினா மற்றும் ஓர் இணையவழி பாடத்திட்டம் உள்ளிட்ட மக்கள் நலவாழ்வை முன்னிலைப்படுத்திய ஒரு புதிய "சரியானதை உண்ணுங்கள் இந்தியா" இலச்சினையையும் Dr. ஹர்ஷ்வர்தன் அறிமுகப்படுத்தினார்.

**9.**உலக நலவாழ்வு அமைப்பின் தென்கிழக்காசிய பிராந்தியமானது தட்டம்மை மற்றும் ரூபெல்லா முதலிய நோய்களை ஒழிப்பதற்கு, எந்த ஆண்டை இலக்காக நிர்ணயித்துள்ளது?

A) 2022

**B)** 2023 ☑

C) 2024

D) 2025

2023

- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) தென்கிழக்காசிய பிராந்தியத்தின் உறுப்பு நாடுகள், 2023ஆம் ஆண்டளவில் குழந்தைகளைத் தாக்கியழிக்கும் மிகக்கொடிய தொற்றுநோய்களான தட்டம்மை மற்றும் ரூபெல்லா முதலிய நோய்களை முற்றாக ஒழித்துக்கட்ட முடிவு செய்துள்ளன. புது தில்லியில் நடந்த தென்கிழக்காசியாவுக்கான உலக நலவாழ்வு அமைப்பின் பிராந்திய குழுக்கூட்டத்தின் 72ஆவது அமர்வில், இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ✓ இதுநாள்வரை பூட்டான், மக்களாட்சிக் குடியரசு கொரியா, மாலத்தீவுகள், இலங்கை மற்றும் திமோர் லெஸ்டே ஆகிய 5 நாடுகள் தட்டமை நோயை ஒழித்துள்ளன. வங்கதேசம், பூட்டான், மாலத்தீவுகள், நேபாளம், இலங்கை & திமோர் லெஸ்டே ஆகிய 6 நாடுகளும் ரூபெல்லாவை கட்டுப்படுத்தியுள்ளன.
- ✓ ஏழை மக்களுக்கு தட்டம்மை நோய் பேராபத்தை விளைவிக்கின்றது; ஏனெனில் இது ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள சிறார்கள் மற்றும் நோயெதிர்ப்பு ஆற்றல் குறைவாக உள்ளவர்களைத் தாக்குகிறது. இது குருட்டுத்தன்மை, மூளையழற்சி, கடுமையான வயிற்றுப்போக்கு, செவித்தொற்று மற்றும் நிமோனியா உள்ளிட்ட கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும். அதேநேரத்தில் ரூபெல்லா / பிறவி ரூபெல்லா நோய்க்குறியானது சரிசெய்யவியலா பிறவிக்குறைபாடுகளை ஏற்படுத்துகிறது.

**10.**சர்ச்சைக்குரிய களைக்கொல்லியான கிளைபோசேட்டுக்கு (glyphosate), 2023ஆம் ஆண்டில் தடைவிதிக்க முடிவுசெய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடு எது?

**A)** ஜெர்மனி ☑

B) போலந்து

C) பிரான்ஸ்

D) பிரிட்டன்



- சூழலமைப்புகளிலும் உணவுப்பயிர்களின் மகரந்தச் சேர்க்கையிலும் முக்கிய பங்கு வகிக்கும் பூச்சி இனங்களைப் பாதுகாக்க 2023ஆம் ஆண்டின் இறுதியில் சர்ச்சைக்குரிய களைக்கொல்லியான கிளைபோசேட்டுக்கு தடைவிதிக்க ஜெர்மனி முடிவுசெய்துள்ளது. இந்த வேதியானது மனிதர்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தும் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.
- இந்தத் தடை, ஜெர்மன் வேளாண் வேதி உற்பத்தியாளரான பேயர் கிராப் சைன்ஸ் நிறுவனத்துக்கு பேரிடியாக இருக்கும். இந்தியாவிலும் கிளைபோசேட் களைக்கொல்லி பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. முன்னதாக, 2019 ஜூலையில் கிளைபோசேட் பயன்பாட்டை தடைசெய்த முதல் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடாக ஆஸ்திரியா ஆனது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- அழிவின் விளம்பிலுள்ள நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை முக்கூர்த்தி தேசிய பூங்காவில் கடந்த மூன்றாண்டுகளில் 27% அதிகரித்துள்ளது. 2018இல் 568ஆக இருந்த அதன் எண்ணிக்கை தற்போது 612ஆக உயர்ந்துள்ளது. *Nilgiritragus hylocrius* என்ற விலங்கியல் பெயர்கொண்ட இவ்விலங்கினம் தமிழ்நாட்டின் மாநில விலங்காகும்.



- இந்திய கடலோர காவல்படையின் கரையோர ரோந்துக் கப்பலான யார்ட்–45005, வடசென்னையின் எண்ணூரில் அறிமுகப்படுத்தப்பட்டது. பொருத்தப்பட்ட கருவிகள் & எந்திரங்கள் மீதான சோதனைகள் முடிந்தபின், 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இது இந்திய கடலோர காவல்படையில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## நடப்பு நிகழ்வுகள்

1. 'ANGAN' என்னும் பன்னாட்டு மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?




A) பெர்லின்

**B) புது தில்லி ☑**

C) ஜெனிவா

D) பாரிஸ்

✓ கட்டடத் துறையில் எரிசக்தி செயல்திறன் குறித்து 3 நாள் நடைபெறும், 'ANGAN' என்னும் பன்னாட்டு மாநாட்டை புது தில்லியில் செப்.9 முதல் நடத்த எரிசக்தித் திறன் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வு, இந்திய – ஜெர்மானிய தொழினுட்ப ஒத்துழைப்புடன் நடத்தப்படுகிறது.

✓ இந்நிகழ்வில், 16 நாடுகளைச் சேர்ந்த வல்லுநர்களும் கொள்கை வகுப்பாளர்களும், எரிசக்தித் திறன் மிக்க வணிக மற்றும் குடியிருப்பு கட்டடங்களின் வடிவமைப்பு குறித்தும் கட்டுமானத்துறையில் உள்ள பல்வேறு மாற்று விருப்பங்கள் குறித்தும் கட்டுமானத்துறையில் உள்ள தொழில்நுட்பங்கள் குறித்தும் விவாதிக்கவுள்ளனர்.

2. நடப்பாண்டு US ஓப்பன் டென்னிஸில், ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?



A) நோவக் ஜோகோவிச்

B) ரோஜர் பெடரர்

**C) ரபேல் நடால் ☑**

D) டேனியல் மெட்வெடேவ்

✓ 7–5, 6–3, 5–7, 4–6, 6–4 என்ற ஐந்து செட்கணக்கில் டேனியல் மெட்வெடேவை வீழ்த்தி ஸ்பெயினின் ரபேல் நடால் US ஓப்பன் டென்னிஸில் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார். இது அவரது நான்காவது US ஓப்பன் பட்டமும் 19ஆவது கிராண்ட்ஸ்லாம் கோப்பையும் ஆகும். ரபேல் நடாலுக்கு, 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்று அதிக பட்டங்கள் கைப்பற்றியவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள சுவிச்சர்லாந்தின் ரோஜர் பெடரரின் சாதனையை எட்டிப்பிடிக்க இன்னும் ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டமே தேவையாக உள்ளது.

✓ ஓப்பன் சகாப்தத்தில் அதிக வயதில் அமெரிக்க ஓப்பனில் பட்டம் வென்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையை ரபேல் நடால் (33) பெற்றுள்ளார். இவ்வகையில் கடந்த 1970இல் ஆஸ்திரேலியாவின் கென் ரோஸ்வால் தனது முப்பத்தைந்தாம் வயதில் அமெரிக்க ஓப்பனில் வாகை சூடியிருந்தார்.

**3.** 24ஆவது உலக ஆற்றல் மாநாட்டின் கருப்பொருள் என்ன?

A) Securing Tomorrow's Energy Today

B) Energy Transition Towards 2030

**C) Energy for Prosperity ☑**

D) Embracing New Frontiers

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி ஷேக் கலிபா பின் சயித் அல் நகியான் ஆதரவின் கீழ், 24ஆவது உலக ஆற்றல் மாநாடு அபுதாபியில் தொடங்கப்பட்டது. அரசுகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், கல்வித்துறை & ஊடகங்கள் உள்ளிட்ட பன்னாட்டு ஆற்றல்சார் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதே இம்மாநாட்டின் நோக்கமாகும். "செழுமைக்கான ஆற்றல்" என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாகும்.

**4.** எந்த நகரத்தில், ஆசியாவின் முதல் ஐந்தாம் தலைமுறை – மெய்நிகர் அடிப்படையிலான அதிநவீன ஓட்டுநர் பயிற்சி சிமுலேட்டர் மையம் தொடங்கப்பட்டுள்ளது?

**A) சென்னை ☑**

B) கோயம்புத்தூர்

C) சேலம்

D) நாகர்கோவில்



✓ ஆசியாவின் முதல் ஐந்தாம் தலைமுறை – மெய்நிகர் அடிப்படையிலான அதிநவீன ஓட்டுநர் பயிற்சி சிமுலேட்டர் மையம் சென்னையில் உள்ள இந்திய தானியங்கி வாகனங்களுக்கான சங்கத்தின் தென்னிந்திய கிளை அலுவலகத்தில் (AASI) தொடங்கப்பட்டுள்ளது.

✓ இந்தப் பயிற்சி மையத்தில், "பாதுகாப்பாக வண்டியோட்டுதல்" என்ற பரப்புரையின் கீழ் – அவசர ஊர்தி ஓட்டுநர்கள் இருநூறு பேருக்கு இலவசப்பயிற்சி அளிக்கும் திட்டமும் தொடங்கப்பட்டது. இது அடுத்த ஆறு மாதங்களில் நிறைவுசெய்யப்படும். இந்தச் சிமுலேட்டரை சென்னையைச் சேர்ந்த 'ரெட் சேரியட்' தொழில்நுட்ப நிறுவனம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

**5.** UNESCO அதன் தொட்டுணர முடியா கலாசார பாரம்பரியத்தை ஊக்குவிப்பதற்காக, எந்த இந்திய மாநிலத்துடன் கூட்டிணைந்துள்ளது?

**A) இராஜஸ்தான் ☑**

B) மத்திய பிரதேசம்


C) ஜார்க்கண்ட்

D) பஞ்சாப்



- ✓ இராஜஸ்தான் மாநிலத்தின் வளமிகு தொட்டுணர முடியா கலாசார பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகம் சார்ந்த பொறுப்பான சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக UNESCO இராஜஸ்தான் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இத்திட்டம் ஜோத்பூர், பார்மேர், ஜெய்சல்மார் மற்றும் பிகானேர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட கலைச்சமூகங்களின் சமூக–பொருளாதார வளர்ச்சியைத் தூண்ட முற்படுகிறது.
- ✓ கலைச்சமூகத்திற்கு பயனளிக்கும் சுற்றுலா வாய்ப்புகளை உருவாக்குவதற்காக மட்பாண்டங்கள், நெசவு மற்றும் பிற கைவினைப்பொருட்கள் கலையுடன் இசை மரபுக்கலைகள் போன்ற தொட்டுணர முடியாத கலாசார பாரம்பரிய மரபுகளில் இது கவனம் செலுத்தும்.

6. 2020ஆம் ஆண்டுக்கான 'Oscars of Science'ஐ வென்றுள்ள தொலைநோக்கிக் குழு எது?



A) மிகப்பெரிய தொலைநோக்கி

B) மாபெரும் மாகெல்லன் தொலைநோக்கி

C) முப்பது மீட்டர் தொலைநோக்கி

**D) இவெண்ட் ஹாரிசன் தொலைநோக்கி (Event Horizon Telescope) ☑**

- ✓ 347 அறிவியலாளர்களைக் கொண்ட இவெண்ட் ஹாரிசன் தொலைநோக்கிக் குழு, வரும் 2020ஆம் ஆண்டுக்கான, "அடிப்படை இயற்பியலில் திருப்புமுனை ஏற்படுத்தியதற்கான பரிசை" வென்றுள்ளது. $3 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான இந்தப் பரிசு "அறிவியலின் ஆஸ்கர்" என்றும் அழைக்கப்படுகிறது.
- ✓ 2019 ஏப்.10 அன்று மெஸ்ஸியர் 87 (M87) விண்மீன் திரளில் உள்ள கருந்துளையை படமாக்கியதன் மூலம் உலகின் முதல் கருந்துளை படத்தை இந்தக் குழு உருவாக்கியது. ஆரஞ்சு மற்றும் வெளிறிய வாயுக்களின் மத்தியில் அந்தக் கருந்துளை காணப்பட்டது. உலகின் பல இடங்களில் எட்டு ரேடியோ தொலைநோக்கிகளை ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் திட்டம்தான் இவெண்ட் ஹாரிசன் தொலைநோக்கித் திட்டம்.

7. 'TSENTR 2019' என்ற பன்னாட்டுப் பயிற்சியை நடத்தும் நாடு எது?



A) இந்தியா

**B) இரஷ்யா ☑**

C) சீனா

D) உஸ்பெகிஸ்தான்

- ✓ சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் முதலிய நாடுகளின் படைகளுடன் இந்திய இராணுவம் பன்னாட்டுப் போர் விளையாட்டுகள் பயிற்சியான 'TSENTR – 2019'இல் பங்கேற்கிறது. செப்.9–23 வரை இரஷ்யாவின் மத்திய ராணுவ ஆணையத்தால் ஒரென்பர்க்கில் உள்ள டோங்குஸ் பயிற்சித் தளங்களில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

✓ நடப்பாண்டின் பயிற்சிகள் இரண்டு தொகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் தொகுதியில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், வான்வழித் தாக்குதல்களைத் தடுப்பது, உளவு நடவடிக்கைகள் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும். அதேசமயத்தில், இரண்டாம் தொகுதியானது தாக்குதல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்.


8.நடப்பாண்டின் சர்வதேச எழுத்தறிவு நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Literacy in a digital world

B) Reading the Past, Writing the Future

**C) Literacy and Multilingualism ☑**

D) Literacy and skills development




✓ கல்வியறிவின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்.8 அன்று சர்வதேச கல்வியறிவு நாள் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டில் நாளுக்கான கருப்பொருள், "கல்வியறிவு மற்றும் பன்மொழித்துவம்" என்பதாகும்.

9.நேர வங்கி (Time Bank) அமைக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?

**A) மத்திய பிரதேசம் ☑**

B) ஹிமாச்சல பிரதேசம்

C) அருணாச்சல பிரதேசம்

D) ஆந்திர பிரதேசம்



✓ மத்திய பிரதேச மாநில அரசின் மகிழ்ச்சித் துறையானது நேர வங்கியை அமைக்க முடிவுசெய்துள்ளது. நேர வங்கி என்பது பணத்துக்குப் பதிலாக நேரத்தை அலகாகப் பயன்படுத்தி சேவைப் பரிமாற்றத்தை ஏதுவாக்கும் ஒரு முறைமையாகும். இந்த வங்கியில் உறுப்பினராக இருக்கும் ஒருவருக்கு சேவையை வழங்குவதன் மூலம் (நேரத்தை வழங்குதல்) ஒருவர் நேர வங்கியில் வைப்புச் செய்யலாம்.

✓ பின்னர் அவருக்கு ஓர் உதவி / சேவை தேவைப்படும்போது அந்த வங்கியின் பிற ஓர் உறுப்பினரிடம் இருந்து தனது வைப்பைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளலாம். உலகின் முதலாவது நேர வங்கியானது 1973ஆம் ஆண்டில் ஜப்பானில் அமைக்கப்பட்டது.

10.நடப்பாண்டு US ஓப்பன் டென்னிஸில் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?

**A) பியாங்கா ஆண்ட்ரீஸ்கு ☑**

B) கரோலின் வோஸ்னியாக்கி

C) சிமோனா ஹாலெப்

D) நவோமி ஒசாகா



- இறுதிப்போட்டியில் செரீனா வில்லியம்ஸை 6–3, 7–5 என்ற செட் கணக்கில் வீழ்த்தி, நடப்பாண்டு US ஓப்பன் டென்னிஸில் மகளிர் ஒற்றையர் பட்டத்தை பியாங்கா ஆண்ட்ரீஸ்கு வென்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம், கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் கனடிய வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ், தூய்மையான புனித தலங்களை உருவாக்கும் முயற்சியில் முதற்கட்டமாக இந்தியா முழுவதும் பத்து புனித தலங்கள் தேர்வுசெய்யப்பட்டன. இதில், மதுரை மீனாட்சி சொக்கநாதர் கோவில் தேர்வுசெய்யப்பட்டு இரண்டாம் பரிசு வழங்கப்பட்டுள்ளது.



- சென்னை கோயம்பேட்டில் தமிழ்நாட்டின் முதல் நவீன ஆதார் சேவை மையம் திறக்கப்பட்டுள்ளது.
- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உப்பார்பட்டி, சந்திர குப்த மௌரியா பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் 14ஆவது அரசு சட்டக்கல்லூரியினை துணை முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் தொடங்கிவைத்தார்.
- திருவில்லிப்புத்தூரில் கடந்த 79 ஆண்டுகளாக தயாரிக்கப்பட்டுவரும் தனிச்சுவைகொண்ட பால்கோவாவுக்கு நடுவணரசின் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.



# நடப்பு நிகழ்வுகள்

**1.** எந்த நகரத்தில், சமீபத்தில், இந்தியாவின் முதல் உலங்குவானூர்தி (helicopter) உச்சிமாநாடு நடைபெற்றது?

A) பாட்னா

**B) டேராடூன் ☑**

C) இலக்னோ

D) புது தில்லி



✓ உலங்குவானூர்திகள் மூலம் இணைப்பை விரிவுபடுத்துதல் என்ற கருப்பொருளில் உத்தரகாண்ட் மாநிலத்தின் டேராடூனில் உள்ள சஹஸ்ரதாரா ஹெலிட்ரோம் என்ற இடத்தில் மத்திய உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகத்தால் இந்தியாவின் முதல் உலங்குவானூர்தி உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. தேசிய அளவில் MEDEVACஇல் இந்திய வான்படை உலங்குவானூர்திகளின் பங்கு குறித்து பேசுவதற்காக இந்திய வான்படையும் இந்த உச்சிமாநாட்டிற்கு அழைக்கப்பட்டது.

**2.** UNCCD COP 14 நடைபெறுகிற நகரம் எது?

A) கொழும்பு

B) பாரிஸ்

**C) புது தில்லி ☑**

D) ஜெனிவா

United Nations
Convention to Combat Desertification

✓ பாலைநிலமாதலுக்கு எதிரான ஐ.நா. தீர்மான உறுப்பினர்களின் 14ஆவது மாநாடு (UNCCD COP 14), செப்டம்பர்.2 – 13 வரை புது தில்லியில் நடைபெறுகிறது. நிலச்சீரழிவையும் அதன் விளைவுகளையும் மீட்டமைப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சி நிரலாகும். ஐக்கிய நாடுகள் மாநாட்டில் பங்கேற்கும் ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, இந்திய சிவிங்கிப்புலி, இளஞ்சிவப்பு தலை வாத்து மற்றும் இந்திய கானமயில் ஆகியவை பாலைநிலமாதல் காரணமாக அழிவின் விளிம்பில் உள்ளன.

**3.** சமீபத்தில் காலமான வீரு கிருஷ்ணன், எந்த நடன வடிவத்தில், புகழ்பெற்ற இந்திய பாரம்பரிய நடனக்கலைஞராக இருந்தார்?

A) மோகினியாட்டம்

**B) கதக் ☑**

C) கதகளி

D) பரதநாட்டியம்

kathak

- ✓ ஹிந்தி நடிகரும் புகழ்பெற்ற கதக் நடனக்கலைஞருமான வீரு கிருஷ்ணன், மும்பையில், செப்.7 அன்று காலமானார். 'இராஜா ஹிந்துஸ்தானி', 'துல்ஹே இராஜா' மற்றும் 'அகேலே ஹம் அகேலே தும்' போன்ற திரைப்படங்களில் நடித்ததற்காக அவர் நினைவுகூரப்படுகிறார்.

**4.**ஜம்மு & காஷ்மீர் இரண்டாகப் பிரிபடுவதை மேற்பார்வையிடும் குழுவின் தலைவர் யார்?

**A) சஞ்சய் மித்ரா ☑**

B) கிரிராஜ் பிரசாத் குப்தா

C) அருண் கோயல்

D) K L மிஸ்ரா



- ✓ இரு யூனியன் பிரதேசங்களாக செயல்படவிருக்கும் ஜம்மு & காஷ்மீரின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் பங்கீடு தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக மூன்று உறுப்பினர்கள்கொண்ட குழுவை நடுவணரசு அமைத்துள்ளது. பாதுகாப்புத்துறை முன்னாள் செயலர் சஞ்சய் மித்ரா, இந்தக் குழுவின் தலைவராக செயல்படுவார். 2019 அக்டோபர் 31 முதல் ஜம்மு – காஷ்மீர் இரு யூனியன் பிரதேசங்களாக செயல்படவுள்ளது.

**5.**ஆசிய அமைச்சரவைகளுக்கு இடையேயான எரிசக்தி தொடர்பான எட்டாவது வட்டமேசை மாநாட்டை (AMER8) எந்த நாட்டுடன் இணைந்து இந்தியா நடத்தவுள்ளது?

A) இஸ்ரேல்

B) வியட்நாம்

**C) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

D) மலேசியா



- ✓ ஆசிய அமைச்சரவைகளுக்கு இடையேயான எரிசக்தி தொடர்பான எட்டாவது வட்டமேசை மாநாட்டை (8th Asian Ministerial Energy Roundtable – AMER8) ஐக்கிய அரபு அமீரகத்துடன் இணைந்து இந்தியா நடத்தவுள்ளது. ஆசியாவிலும் உலகிலும் பொறுப்புமிக்க வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், மாறி வரும் உலகில் ஆற்றல் பாதுகாப்பு குறித்து விவாதிக்கவுள்ள இந்த மூன்றுநாள் மாநாட்டில் பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சரான தர்மேந்திர பிரதான் பங்கேற்கின்றார்.

**6.** 25ஆவது சீனியர் மகளிர் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் தொடங்கியுள்ள மாநிலம் எது?

A) தெலுங்கானா

**B) அருணாசல பிரதேசம் ☑**

C) ஜார்கண்ட்

D) உத்தர பிரதேசம்

✓ ஹீரோ சீனியர் மகளிர் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப்பின் 25ஆவது பதிப்பு, செப்டம்பர்.10 அன்று அருணாச்சல பிரதேசத்தின் பசிகாட்டில் தொடங்கியது. 15 நாட்கள் நடைபெறும் இந்தச் சாம்பியன்ஷிப் நிகழ்வில், இந்தியா முழுவதுமிருந்து முப்பது அணிகள் பங்கேற்கின்றன. அந்த அணிகள் 8 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன.


7. நடப்பாண்டு உலக தற்கொலை தடுப்பு நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Take a Minute, Change a Life

**B) Working Together to Prevent Suicide ☑**

C) Connect, Communicate, Care

D) Light a candle near a Window?




✓ தற்கொலைகளைத் தடுக்க உலகளாவிய அர்ப்பணிப்பு மற்றும் நடவடிக்கைகளை வழங்குவதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்.10 அன்று உலக தற்கொலை தடுப்பு நாள் (World Suicide Prevention Day) கடைப்பிடிக்கப்படுகிறது. "Working Together to Prevent Suicide" என்பது நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

8. 2019 துலீப் கோப்பைக்கான பட்டத்தை வென்ற அணி எது?

A) இந்தியா நீலம்

B) இந்தியா பச்சை

**C) இந்தியா சிவப்பு ☑**

D) இந்தியா மஞ்சள்



✓ பெங்களூருவில் நடந்த இறுதிப்போட்டியில், இந்தியா பச்சை அணியை ஓர் இன்னிங்ஸ் மற்றும் 38 இரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து துலீப் கோப்பைக்கான போட்டியின் 58ஆவது பருவத்தை இந்தியா சிவப்பு அணி வென்றுள்ளது. இந்தியா சிவப்பு அணிக்காக 153 இரன்கள் எடுத்த அபிமன்யு ஈஸ்வரன், ஆட்டநாயகனாக தேர்வுசெய்யப்பட்டார்.

9. எந்த நகரத்தில், இந்திய – இலங்கை கடல்சார் கடற்படை கூட்டுப்பயிற்சியான 'SLINEX–2019' தொடங்கியுள்ளது?

**A) விசாகப்பட்டினம் ☑**

B) புனே

C) சென்னை

D) கொல்கத்தா



✓ 'SLINEX–2019' என்னும் இந்தியா மற்றும் இலங்கை கடற்படைகளுக்கு இடையிலான இருதரப்பு கடல்சார் பயிற்சியின் ஏழாம் பதிப்பு அண்மையில் ஆந்திரத்தில் உள்ள விசாகப்பட்டின துறைமுகத்தில் தொடங்கியது. ஒத்துழைப்பை மேம்படுத்துவதோடு இரு கடற்படையினருக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையையும் இயங்குதன்மையையும் மேலும் வலுப்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

10.எந்த நகரத்தில், SCO உறுப்புநாடுகளுக்கான இராணுவ மருத்துவம் குறித்த முதல் மாநாடு நடைபெறவுள்ளது?

**A)** புது தில்லி ☑

B) பெய்ஜிங்

C) மாஸ்கோ

D) தாஷ்கண்ட்



✓ சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்புநாடுகளுக்கான இராணுவ மருத்துவம் குறித்த முதல் மாநாடு செப்.12–13 வரை புதுதில்லியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இராணுவ மருத்துவத் துறையில் உள்ள சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது, திறன்களை கட்டமைப்பது & பொதுமையான சவால்களை கையாள்வது ஆகியன இந்த மாநாட்டின் நோக்கங்களாகும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ இந்திய அயோடின் கணக்கெடுப்பு 2018–2019இல், அயோடின் உப்பைப்பயன்படுத்தும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு கடைசி இடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாடு, உப்பு உற்பத்தியில் நாட்டின் மூன்றாவது பெரிய மாநிலமாக உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. 61.9% பேர் மட்டுமே தமிழ்நாட்டில் அயோடின் உப்பைப் பயன்படுத்துகின்றனர்.

✓ தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக விழுப்புரம் மாவட்டம் சின்னசேலத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில், உலகத்தரத்தில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்கப்படவுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** இந்திய இரயில்வே குழந்தைகளுக்கான தனது முதல் 'பொழுதுபோக்குப் பகுதி'யை எந்த இரயில் நிலையத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது?

A) ஹஸ்ரத் நிசாமுதீன்

B) போபால்

**C) விசாகப்பட்டினம் ☑**

D) சத்ரபதி சிவாஜி முனையம்



✓ ஆந்திரத்தின் விசாகப்பட்டினம் இரயில் நிலையத்தில் இந்திய இரயில்வே குழந்தைகளுக்கான தனது முதல் 'Fun Zone – பொழுதுபோக்குப்பகுதி'யை அறிமுகப்படுத்தியுள்ளது. இரயில்வே நடைமேடைகளில் இரயிலுக்காக நீண்டநேரம் காத்திருக்கும் நேரங்களில் குழந்தைகளை பல்வேறு உள்ளரங்கு விளையாட்டுகளில் ஈடுபடுத்துவதே இதன் நோக்கமாகும். இது கிழக்குக் கடற்கரை இரயில்வேயின் வால்டேர் பிரிவின் ஒரு புதுமையான முயற்சியாகும்.

**2.** T20 சர்வதேச கிரிக்கெட்டில் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பந்துவீச்சாளர் யார்?

**A) லசித் மலிங்கா ☑**

B) முகமது ஷமி

C) கேமரூன் பான்கிராப்ட்

D) ஜஸ்பிரித் பும்ரா



✓ இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த லசித் மலிங்கா, நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது T20 போட்டியில், 4 பந்துகளுக்கு 4 விக்கெட்டை வீழ்த்தினார். இதன்மூலம், சர்வதேச T20 போட்டிகளில் 100 விக்கெட்டை வீழ்த்திய முதல் வீரராக அவர் ஆனார். மேலும், 97 விக்கெட் வீழ்த்தியிருந்த பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த ஷாஹித் அப்ரிடியின் சாதனையை மலிங்கா முறியடித்துள்ளார்.

**3.** ஆங்கிலக்கால்வாயைக் கடந்த உலகின் மிகவும் இளம் நீச்சல் வீரரான கௌர்வி சிங்வி, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

**A) இராஜஸ்தான் ☑**

B) குஜராத்

C) ஹிமாச்சல பிரதேசம்

D) மகாராஷ்டிரா



✓ இராஜஸ்தான் மாநிலம் உதய்பூரைச்சேர்ந்த கௌர்வி சிங்வி (16), கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 13 மணி 26 நிமிடங்களில் ஆங்கிலக் கால்வாயைக் கடந்த உலகின் மிகவும் இளம் திறந்தவெளி நீர்ப்பரப்பு

நீச்சல் வீரராக ஆனதன் மூலம் இந்தியாவுக்குப் பெருமைசேர்த்துள்ளார். இந்தக் கால்வாய், தெற்கு இங்கிலாந்தை வட பிரான்சிலிருந்து பிரிக்கிறது மற்றும் வடகடலின் தெற்குப்பகுதியை அட்லாண்டிக் பெருங்கடலுடன் இணைக்கும் ஒரு நீர்நிலையாகும்.

**4.** இந்திய பத்திரிகை அமைப்பின் (PTI) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) K N சாந்த் குமார்



B) மகேந்திர மோகன் குப்தா

**C) விஜய் குமார் சோப்ரா ☑**

D) அவீக் குமார் சர்க்கார்

✓ இந்திய பத்திரிகை அமைப்பின் (PTI) தலைவராக பஞ்சாப கேசரி குழுமத்தின் தலைமையாசிரியர் விஜய் குமார் சோப்ரா நியமிக்கப்பட்டுள்ளார். பதிப்பாளரும், தி இந்து பத்திரிகையின் முன்னாள் தலைமையாசிரியருமான N ரவிக்குப்பிறகு அவர் இப்பதவிக்கு வந்துள்ளார். இந்தியாவின் மிகப்பெரிய செய்தி நிறுவனம் PTI, புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

**5.** 40ஆவது சரளா புரஸ்காரருக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரபல எழுத்தாளர் யார்?

A) ஹரபிரசாத் தாஸ்

B) இராதா மோகன் கடனாயக்

C) மானசி பிரதான்

**D) பிரதீப் தாஷ் ☑**

✓ புகழ்பெற்ற ஒடிய எழுத்தாளரான Dr. பிரதீப் தாஷ் அவர்களுக்கு வரும் அக்.26 அன்று 'சாரு சிபார் ஒ சார்ஜியா' என்ற அவரது கவிதை படைப்பிற்காக மதிப்புமிக்க 'சரளா புராஸ்கர்' வழங்கி கௌரவிக்கப் –படவுள்ளார். இந்த விருது, ஒடிசாவின் முதன்மை இலக்கிய விருதாக அங்கீகரிக்கப்பட்டு, IMFA நிறுவனத்தின் தொண்டு நிறுவனமான இந்திய உலோகங்கள் பொதுத் தொண்டு நிறுவனத்தால் (IMPaCT) நிறுவப்பட்டதாகும். IMFA லிட், இந்தியாவில் இரும்பு உலோகக் கலவைகளின் முன்னணி மற்றும் ஒரே முழுமையான ஒருங்கிணைந்த தயாரிப்பாளராகும்.

**6.** 2019 ஆசிய பசிபிக் 'Golf Hall of Fame'க்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்தியர் யார்?

A) ஷியாம் சரண்



B) தீபக் நயார்

**C) பவன் முஞ்சல் ☑**

D) பிரவீன் சோமேஷ்வர்

- ✓ ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனத்தின் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான Dr. பவன் முஞ்சல், வரும் நவ.6 அன்று 2019 ஆசிய பசிபிக் 'Golf Hall of Fame'இல் இணைக்கப்படுவார். இதன்மூலம், ஏற்கனவே இந்தப்பட்டியலில் உள்ள ஜாக் நிக்லாஸ், கேரி பிளேயர் போன்ற பல புகழ்பெற்ற கோல்ப் வீரர்களுடன் அவர் இணைவார்.
- ✓ Dr. பவன் முஞ்சல் தனது இருசக்கர வணிகத்தைத் தவிர, கோல்ப், கால்பந்து, கள ஹாக்கி & கிரிக்கெட் ஆகிய விளையாட்டுகளுக்கான பன்னாட்டு விளம்பரதாரர்களுள் ஒருவரும் ஆவார்.

**7.** CRPD தொடர்பான ஐ.நா குழுவின் 22ஆவது பதிப்பு நடைபெற்ற நகரம் எது?

**A) ஜெனிவா ☑**

B) பாரிஸ்

C) நியூயார்க்

D) பெர்லின்




- ✓ மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் தொடர்பான ஐ.நா சாசனத்தின் 22ஆவது அமர்வு, செப்.2 & 3 ஆகிய தேதிகளில் ஜெனிவாவில் உள்ள UNHRCஇல் நடைபெற்றது. இந்த அமர்வில், CRPD தொடர்பான 'இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளின் நிலைமை' குறித்த இந்தியாவின் முதல் அறிக்கையை ஐ.நா. பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. இதில் பங்கேற்ற இந்திய தூதுக்குழுவுக்கு சகுந்தலா D காம்லின் தலைமைதாங்கினார். UNCRPDஇன் கடமைகளுக்கு ஏற்ப மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டுக்காக இந்திய அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகளை அப்போது அவர் எடுத்துரைத்தார். இந்தத் தீர்மானத்தின் 35ஆவது பிரிவுக்கு இணங்க 2007 அக்.1 என பின்னேற்பு இட்டு இந்தியா இதற்கு ஒப்புதல் அளித்தது.

**8.**எந்த நகரத்திலிருந்து தேசிய கால்நடை நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது?

A) சென்னை

**B) மதுரா ☑**

C) காந்தி நகர்

D) புது தில்லி



- ✓ நாட்டில் உள்ள கால்நடைகளுக்கு ஏற்படும் கால் & வாய்ப்பகுதி நோய், புரூசெலாஸிஸ் ஆகியவற்றை கட்டுப்படுத்தவும், ஒழிக்கவும், தேசிய கால்நடை நோய்த்தடுப்புத் திட்டத்தைப் பிரதமர் நரேந்திர மோடி உத்தரப்பிரதேச மாநிலம் மதுராவில் தொடங்கிவைத்தார்.
- ✓ கால்நடைகள், எருமை, செம்மறி ஆடு, ஆடு, பன்றிகள் உள்ளிட்ட 500 மில்லியனுக்கும் அதிகமான கால்நடைகளுக்கு சுமார் ₹13000 கோடி செலவில் தடுப்பூசி போடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது 2024 வரை ஐந்தாண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும். இதுதவிர, 'ஸ்வச்சதா ஹி சேவா' திட்டம் – 2019 மற்றும் தேசிய செயற்கை கருவூட்டல் திட்டத்தையும் அப்போது அவர் தொடங்கி வைத்தார்.

9.பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



A) ஷியாம் சரண்

B) ரியாத் மேத்யூ

**C) பிரமோத் குமார் மிஸ்ரா ☑**

D) வீரேந்திர குமார்

✓ Dr. பிரமோத் குமார் மிஸ்ரா IAS (குஜராத்: 1972) செப்டம்பர்.11 முதல் அமலுக்கு வரும் வகையில் பிரதமர் மோடியின் புதிய முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்திற்கு முன்னர், அவர் பிரதமரின் கூடுதல் முதன்மைச் செயலாளராகவும் அமைச்சரவை பதவியிலும் இருந்தார்.

10.இந்தியாவின் முதல் பன்னாட்டு மகளிர் வர்த்தக மையத்தை அமைக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?



A) மகாராஷ்டிரா

B) கர்நாடகா

**C) கேரளா ☑**

D) ஒடிசா


✓ பெண் தொழில்முனைவோரை அதிகரிப்பதற்கும் பாலின சமத்துவத்தைப் பெறுவதற்குமாக நாட்டின் முதல் பன்னாட்டு மகளிர் வர்த்தக மையத்தை (international Women's Trade Centre – iWTC) கோழிக் கோட்டில் அமைக்க கேரள மாநில அரசு முடிவுசெய்துள்ளது. இது ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் (SDGs') ஒத்துப்போகிறது. "விஷன் 2020"இன் கீழ் iWTCஇன் முதல் கட்டப்பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இது 2021ஆம் ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சியில் உள்ள அருள்மிகு குலசேகரமுடையார் உடனுறை அறம்வளர்த்தநாயகி அம்மன் கோவிலிலிருந்து 37 ஆண்டுகட்கு முன்பு திருடுபோன, 700 ஆண்டுகள் பழமைவாய்ந்த நடராஜர் சிலையை மெட்ராஸ் உயர்நீதிமன்ற சிறப்பு விசாரணைக் குழுவினர் மீட்டுள்ளனர். இந்தக் கோவில், மன்னர் குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டதாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

1. "K2–18b" என்னும் மீ புவியின் வளிமண்டலத்தில் நீராவியைக் கண்டறிய அறிவியலாளர்கள் பயன்படுத்திய தொலைநோக்கி எது?



A) மிகப்பெரிய தொலைநோக்கி

**B) ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி ☑**

C) ஆஸ்ட்ரோசாட்

D) Spektr – RG

✓ இலண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் வானியலாளர்கள், NASAஇன் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியிலிருந்து தரவைப் பயன்படுத்தி, 'K2–18b' எனப்படும் புவி அளவிலான கோளின் வளிமண்டலத்தில் முதன்முறையாக நீராவியைக் கண்டுபிடித்துள்ளனர். 'K2–18b' என்னும் இந்தப் புறக்கோள், நமது புவியைப்போன்று எட்டு மடங்கு நிறை கொண்டதாக இருப்பதால் இது, 'மீ புவி–Super Earth' என்று அழைக்கப்படுகிறது.

✓ இது லியோ விண்மீன் மண்டலத்தில், புவியிலிருந்து 110 ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு சிவப்பு குள்ள நட்சத்திரத்தைச் சுற்றிவருகிறது. இக்கோள் முதன்முதலில் NASAஇன் கெப்லர் விண்கலத்தால் 2015ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. புறக்கோள் என்பது நமது சூரிய மண்டலத்திற்கு அப்பாற்பட்ட ஒரு கோளைக் குறிக்கிறது.

2.எந்த இந்திய தூதருக்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல்தர 'Order of Zayed II' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது?



A) இரவீஷ் குமார்

**B) நவ்தீப் சிங் சூரி ☑**

C) இரஹி மசூம் ராசா

D) சையத் அக்பருதீன்

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி ஷேக் கலீபா பின் சயீத் அல் நஹியான், இந்திய தூதர் நவ்தீப் சிங் சூரிக்கு முதல்தர 'Order of Zayed II' விருதை வழங்கியுள்ளார். இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவுகள் & ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் அவராற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

3. Cheapflightsall.com என்னும் உலகின் மிகப்பெரிய நிலை வலைத்தளத்தை உருவாக்கிய அமித் சர்மா, எந்த நகரத்தைச் சேர்ந்தவராவார்?




A) புனே **B) தில்லி ☑**

C) பெங்களூரு D) இராஞ்சி

- ✓ தில்லியில் வசிப்பவரும், Cheapflightsall.comஇன் உரிமையாளருமான அமித் சர்மா, உலகின் மிகப் பெரிய நிலைவலைத்தளமான (static website) Cheapflightsall.comஐ உருவாக்கியுள்ளார்.
- ✓ இந்தச் சாதனையின் மூலம், லிம்கா சாதனைகள் நூல் – 2019, பன்னாட்டு சாதனைகள் நூல் – 2018, உலக சாதனைகள் நூல் – 2019, இந்திய சாதனையாளர்கள் சாதனை நூல் – 2019, இந்திய சாதனைகள் நூல் – 2019 மற்றும் ஆசியா சாதனைகள் நூல் – 2019 முதலிய 6 வெவ்வேறு சாதனை நூல்களில் அவர் தனது பெயரை பதிவு செய்தார்.

**4.** சமீபத்தில் காலமான இராஜசேகர், எந்தப் பிராந்திய திரையுலகில் மூத்த நடிகர் – இயக்குநராக இருந்தார்?

**A) தமிழ் ☑**

B) மலையாளம்

C) தெலுங்கு

D) கன்னடம்



- ✓ மூத்த தமிழ் நடிகரும், ஒளிப்பதிவாளரும், இயக்குநருமான ராஜசேகர் (61), செப்.8 அன்று சென்னையில் காலமானார். பல முன்னணி தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துள்ள இவர், 'சரவணன் மீனாட்சி' தொடர் மூலம் அண்மைக்காலங்களில் பிரபலமாக அறியப்பட்டார்.


**5.** எந்த ஆற்றில், இந்தியாவின் 2ஆவது ஆற்றுவழி பல்வகை முனையம் கட்டப்பட்டுள்ளது?

A) யமுனை

B) பிரம்மபுத்திரா


C) கோதாவரி

**D) கங்கை ☑**



- ✓ இந்தியாவின் 2ஆவது ஆற்றுவழி பல்வகை போக்குவரத்து முனையமானது பிரதமர் மோடியால் ஜார்கண்டில் உள்ள சாஹிப்கஞ்சில் செப்.12 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதனை, ஜல் மார்க் விகாஸ் திட்டத்தின்கீழ், கங்கையாற்றில், இந்திய நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் கட்டியுள்ளது. சுமார் 2 ஆண்டுகளில் ₹290 கோடி செலவில் இது கட்டப்பட்டுள்ளது.
- ✓ சாஹிப்கஞ்சில் உள்ள இந்த முனையம், ஜார்க்கண்ட் மற்றும் பீகார் மாநிலத்தில் செய்யப்பட்டு வரும் தொழில்களை உலக சந்தை அளவுக்கு கொண்டுசெல்லும். மேலும், இந்திய – நேபாளம் இடையே சரக்குப் போக்குவரத்து இணைப்பையும் இது வழங்கும். இந்தியாவின் முதல் ஆற்றுவழி பல்வகை போக்குவரத்து முனையம், வாரணாசியில் கட்டப்பட்டது.

6. 'Savarkar: Echoes from a forgotten past' என்ற நூலின் ஆசிரியர் யார்?




A) ரோமிலா தாப்பர்

**B) விக்ரம் சம்பத் ☑**

C) இர்பான் ஹபீப்

D) ராமச்சந்திர குகா

✓ 'Savarkar: Echoes from a forgotten past' என்ற நூலை பெங்களூருவைச் சேர்ந்த வரலாற்றாசிரியர் விக்ரம் சம்பத் எழுதியுள்ளார். இது, விடுதலைப் போராளியும் தத்துவவாதியுமான விநாயக் தாமோதர் சாவர்க்கரின் (வீர் சாவர்க்கர்) வரலாற்றை அவர் பிறந்த 1883இலிருந்து 1924இல் இரத்னகிரியில் அவருக்கு வழங்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்ட விடுதலை வரை விவரிக்கிறது.

7. இந்தியாவின் முதல் டிஜிட்டல் திறமை மையத்தை அமைபப்தற்காக NITI ஆயோக்கால் தெரிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் எது?

**A) மெக்கின்சி (McKinsey) ☑**

McKinsey & Company

B) கூகிள்

C) மைக்ரோசாப்ட்

D) ரிலையன்ஸ்

✓ இந்தியாவின் முதல் டிஜிட்டல் திறமை மையத்தை (Digital Capability Centre – DCC) அமைப்பதற்காக மெக்கின்சி & நிறுவனத்தை NITI ஆயோக் தேர்ந்தெடுத்துள்ளது. இது, மேம்பட்ட தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தும் மற்றும் வளர்ந்துவரும் புத்தாக்கங்களுக்கு ஒரு சோதனை மையமாகவும் விளங்கும்.

✓ ஆச்சென், சிகாகோ, சிங்கப்பூர், வெனிஸ் மற்றும் பெய்ஜிங் ஆகிய இடங்களில் ஏற்கனவே இதுபோன்ற 5 டிஜிட்டல் திறமை மையங்களை மெக்கின்சி தனது ஆதரவில் நடத்தி வருகிறது. DCC என்பது ஒரு தனித்துவமிக்க டிஜிட்டல் உற்பத்தி கற்றல் மையமாகும். இது நிறுவனத்தின் தலைவர்கள் மற்றும் அதன் பணியாளர்களை அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்தில் அனுபவம் மிக்கவர்களாக மாற்ற செயல்படுகிறது. பயிலரங்குகள் / அமர்வுகளை நடத்துவதன் மூலம் அவர்களின் செயல்பாடுகள், வடிவமைப்பு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த இது உதவுகிறது.

8. வெற்று வெண்சுருட்டு பொதியலை (cigarette packaging) வெளியிட்ட முதல் ஆசிய நாடு எது?

**A) தாய்லாந்து ☑**

B) இந்தோனேசியா

C) இந்தியா

D) சிங்கப்பூர்



- ✓ வெற்று (படங்கள் ஏதுமற்ற) வெண்சுருட்டு பொதியலை (cigarette packaging) வெளியிட்ட முதல் ஆசிய நாடு தாய்லாந்து ஆகும். அந்நாட்டில், வெண்சுருட்டு நுகர்வால் உடல்நல பாதிப்பு மிகப்பெரிய அளவிலும் புகைபிடித்தல் தொடர்பான நோய்கள் மரணத்திற்கு ஒரு முக்கிய காரணமாகவும் இருந்து வருகிறது.
- ✓ தரப்படுத்தப்பட்ட இப்பொதியலில், உடலில் புகையிலையால் ஏற்படும் விளைவுகள் பற்றிய வரைகலை படமும் எளிய எழுத்துருவில் எழுதப்பட்ட இலச்சினை ஏதுமற்ற நிறுவனப்பெயரும் உள்ளது. 2012இல், வெற்றுப் பொதியல் முறையை அறிமுகப்படுத்திய உலகின் முதல் நாடாக ஆஸ்திரேலியா ஆனது.

9.ரொனால்டோ லைடோன்ஜாம், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) ஹாக்கி

B) குத்துச்சண்டை

**C) மிதிவண்டி ஓட்டுதல் (Cycling) ☑**

D) கால்பந்து



- ✓ புது தில்லியில் உள்ள இந்திராகாந்தி உள்ளரங்கத்தில் நடந்த 2019 டிராக் ஆசிய கோப்பைக்கான மிதிவண்டி ஓட்டும் போட்டியில், இந்தியாவைச் சேர்ந்த ரொனால்டோ லைடோன்ஜாம் தனது 4ஆவது தங்கப்பதக்கத்தை வென்றார். நடைபெற்ற போட்டிகளில், ஆண்கள் ஜூனியர் 200 மீட்டர் போட்டியின் தகுதிச்சுற்றில் 10.065 வினாடிகளில் போட்டியை முடித்து புதிய ஆசிய சாதனையையும் ரொனால்டோ படைத்தார். முன்னதாக, இச்சாதனையை சீனாவின் லியு குய் வைத்திருந்தார். ஒட்டுமொத்தமாக, 10 தங்கம், 8 வெள்ளி மற்றும் 7 வெண்கலங்களுடன் இந்தியா பதக்கப்பட்டியலின் முதலிடத்தில் உள்ளது.

10.போக்குவரத்து குறித்த நிகழ்நேரத் தகவல்களை வழங்குவதற்காக, எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் குருகிராம் காவல்துறை இணைந்துள்ளது?

A) மைக்ரோசாப்ட்

B) பேஸ்புக்

**C) கூகிள் ☑**

D) இன்போசிஸ்



- ✓ திட்டமிடப்பட்ட சாலை மூடல்கள், திசை திருப்புதல், சாலை விபத்து தொடர்பான போக்குவரத்து எச்சரிக்கைகள் போன்ற போக்குவரத்து தொடர்புடைய தகவல்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நிகழ்நேரத்தில் வழங்குவதற்காக குருகிராம் போக்குவரத்துக் காவல்துறையானது கூகிள் மேப்ஸுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஏற்பாட்டின் பின்னணியில் உள்ள அடிப்படை யோசனை என்னவெனில், பயணிகள் தங்கள் பயண அனுபவத்தை சிரமமில்லாமல் மேற்கொள்ள உதவுவதாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

1. 'முக்கியமந்திரி வியாபாரி சமூஹிக் நிஜி துர்கத்னா பீமா யோஜனா'வை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

A) ஹிமாச்சல பிரதேசம்

B) உத்தர பிரதேசம்

C) மத்திய பிரதேசம்

**D) ஹரியானா ☑**

- ✓ பதிவுசெய்யப்பட்ட சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்காக 'முக்கியமந்திரி வியாபாரி சமூஹிக் நிஜி துர்கத்னா பீமா யோஜனா' (MVSNDBY) மற்றும் 'முக்கியமந்திரி வியாபாரி க்ஷதிபுர்த்தி பீமா யோஜனா (MVKBY) ஆகிய இரண்டு காப்பீட்டு திட்டங்களை ஹரியானா அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ துர்கத்னா யோஜனாவின்கீழ், ₹5 இலட்சமும் மற்ற திட்டத்தின்கீழ் ₹5 – ₹25 இலட்சம் வரையும் காப்பீட்டுத்தொகை வழங்கப்படும். இவ்விரண்டு திட்டங்களின் கீழ்வரும் 38 கோடி வணிகர்களின் காப்பீட்டுத் தவணையை மாநில அரசே செலுத்தும். ஹரியானா பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி (HGST) சட்டம், 2017இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வணிகர்கள் இந்தத் திட்டங்களின் கீழ் வருவார்கள்.

2. "சிறைகளில் குற்றச்செயல்கள் மற்றும் தீவிரவாதமயமாக்கல்" குறித்த தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்த அமைப்பு எது?

A) BSF

B) CISF

**C) BPR&D ☑**

D) CRPF

- ✓ காவலர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகமானது (BPR&D) அண்மையில், "Criminal Activities and Radicalization in Jails : Vulnerability of Inmates and Jail Staff and their Protection" என்ற தலைப்பிலான தேசிய மாநாட்டை புது தில்லியில் ஏற்பாடு செய்தது.
- ✓ தேசிய அளவில் அனைத்து நிலையிலுள்ள சிறை ஊழியர்களுக்கும் பல்வேறு செயல்பாட்டு மற்றும் நிர்வாக பிரச்சனைகள் குறித்த அவர்களின் நேர்மையான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு தளத்தை வழங்குவதே இந்த 2 நாள் மாநாட்டின் நோக்கமாகும்.

**3.** தென்கிழக்காசியாவின் மிகப்பெரிய சூரிய மின்னாற்றல் பண்ணையை திறந்துள்ள நாடு எது?

A) தாய்லாந்து

**B) வியட்நாம் ☑**

C) இந்தோனேசியா

D) மியன்மார்



✓ தென்கிழக்காசியாவின் மிகப்பெரிய சூரிய மின்னாற்றல் பண்ணையை வியட்நாம் அண்மையில் திறந்தது. இது ஆண்டுதோறும் 688 மில்லியன் KW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன்கொண்டது. வியட்நாமில் உள்ள மிகப்பெரிய செயற்கை ஏரியான டௌ டைங் நீர்த்தேக்கத்தில், இந்த டௌ டைங் சூரிய ஆற்றல் வளாகம் கட்டப்பட்டுள்ளது. 3,20,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் விதமாக நாட்டின் சூரிய மின்னுற்பத்தி ஆற்றலில் 10% உற்பத்தியை இது செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4.** 'மைத்ரீ – 2019' என்னும் இந்தியா – தாய்லாந்து கூட்டு இராணுவப்பயிற்சி நடத்தப்படும் மாநிலம் எது?

**A) மேகாலயா ☑**

B) சத்தீஸ்கர்

C) நாகாலாந்து

D) மிசோரம்



✓ இந்தியாவுக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான, 'மைத்ரீ – 2019' செப்.16–29 வரை உம்ரோய் (மேகாலயா) அயல்நாட்டு பயிற்சி மையத்தில் நடத்தப்படுகிறது. அந்தந்த நாடுகளில், பல்வேறு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது பெறப்பட்ட நுட்பங்களை, அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

**5.** சர்வதேச நுண்ணுயிர் எதிர்ப்பி தடுப்புத்திறன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் (Global Anti – Microbial Resistance Research and Development (R & D) Hub) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

A) போலந்து

**B) ஜெர்மனி ☑**

C) ஆஸ்திரியா

D) பிரான்ஸ்

✓ இந்தியா, அண்மையில், சர்வதேச நுண்ணுயிர் எதிர்ப்பி தடுப்புத்திறன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் உறுப்பினரானது. இம்மையம் 2018இல் உலக நலவாழ்வு அவையின் 71ஆவது அமர்வின் போது தொடங்கப்பட்டது. இதன் தலைமையகம் ஜெர்மனியில் அமைந்துள்ளது.

✓ நுண்ணுயிர் எதிர்ப்பியின் தடுப்புத்திறனில் ஆராய்ச்சி & மேம்பாட்டுக்கு நாடுகள் எவ்வளவு வளங்களை ஒதுக்கீடு செய்யலாம் எனத்தீர்மானிக்க, அவற்றுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் நுண்ணுயிர் எதிர்ப்பியின் தடுப்புத்திறன் என்பது ஒரு பெருஞ்சிக்கலாக உள்ளது. ஏனெனில், வளர்ந்துவரும் நாடுகளில் தொற்றுநோய்களின் பாதிப்பு மிக அதிகமாகவும், நல்வாழ்வுக்கான வள ஒதுக்கீடுகள் குறைவாகவும் உள்ளன.

**6.பன்னாட்டு கிரிக்கெட்டில் இரண்டு 'ஹாட்ரிக்' விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பெண்மணி என்ற பெருமையைப்பெற்ற மேகன் ஷூட், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

A) மேற்கிந்திய தீவுகள்

**B) ஆஸ்திரேலியா ☑**

C) தென்னாப்பிரிக்கா

D) நியூசிலாந்து



✓ ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான மேகன் ஷூட், சர்வதேச கிரிக்கெட்டில் இரண்டு 'ஹாட்ரிக்' விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பெண்மணி என்ற பெருமையைப்பெற்றுள்ளார். செப்டம்பர்.12 அன்று ஆன்டிகுவாவில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில், ஒருநாள் போட்டிகளில் 'ஹாட்ரிக்' விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரே ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீராங்கனை என்ற பெருமையையும் ஷூட் பெற்றுள்ளார். தனது முதல் 'ஹாட்ரிக்'கை 2018இல், இந்தியாவுக்கு எதிரான T20 போட்டியில் ஷூட் பெற்றார்.

**7.வாழ்க்கைத் திறன்களுக்கான பாடத்திட்டத்தை (ஜீவன் கௌஷல்) அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) இளையோர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சகம்

B) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

C) திறன் மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகம்

**D) மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ☑**




✓ மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் சஞ்சய் தோத்ரே, அண்மையில் புது தில்லியில், பல்கலைக்கழக மானியக்குழுவால் (UGC) வடிவமைக்கப்பட்ட வாழ்க்கைத் திறன்களுக்கான பாடத் திட்டத்தை (ஜீவன் கௌஷல்) அறிமுகப்படுத்தினார்.

✓ வகுப்பறை கற்றல் (அ) வாழ்க்கை அனுபவம் மூலம் ஒரு தனிநபர் பெற்ற வாழ்க்கைத் திறன்களின் தொகுப்பை இந்தப் பாடத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. அவை, அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சமாளிக்க உதவும். தான் & தனது ஒட்டுமொத்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு தனிநபரும் அகவளவிலும் புறவளவிலும் கொண்டிருக்க வேண்டிய முக்கிய திறன்கள் இதில் அடங்கும்.

8.எந்த UNCCD நிகழ்வில், 'வறட்சி கருவிப்பெட்டி' அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது?

A) COP 15

B) COP 16

C) COP 17

D) COP 14 ☑



- ✓ ஐ.நா அவையின் பாலைநிலமாதலுக்கு எதிரான தீர்மானத்தில் (UNCCD) உள்ள உறுப்புநாடுகளின் 14ஆவது மாநாட்டின்போது (COP 14), 'வறட்சி கருவிப்பெட்டி – Drought Toolbox' அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. நாடுகளால் தங்கள் பிராந்தியங்களில் ஏற்படும் வறட்சி அபாயங்களை முன்கூட்டியே மதிப்பிடுவதற்கு இதை பயன்படுத்த முடியும்.
- ✓ இந்தக் கருவிப் பெட்டியானது மண்ணின் ஈரப்பதம், மழை குறித்த தரவு மற்றும் தற்போதைய மற்றும் கடந்தகால வெப்பநிலை குறித்த தரவு உள்ளிட்ட முப்பது அம்சங்களைப் பயன்படுத்துகின்றது. இந்தக் கருவிப் பெட்டியால், வெவ்வேறு புவியியல் பகுதிகளில் வறட்சியினால் ஏற்படும் பாதிப்புகளைத் துல்லியமாக கணிக்கவியலும்.

9. 2019 ஆசிய சமுதாய கேம் சேஞ்சர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய காவல்துறை அதிகாரி யார்?

A) R ஸ்ரீலேகா

B) சஞ்சுக்தா பராஷர்

C) ரூபா திவாகர் முட்கில்

D) சாயா சர்மா ☑



- ✓ தில்லியில், மருத்துவ மாணவி நிர்பயா கூட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட வழக்கை விசாரித்து, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வாங்கிக்கொடுத்த காவல்துறை அதிகாரி சாயா சர்மா, 2019ஆம் ஆண்டுக்கான, 'ஆசிய சமூக மாற்றத்துக்கான விருது'க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ ஆசிய சமூக அமைப்பு என்பது அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் உள்ள கலாசார அமைப்பாகும். இந்த அமைப்பு சார்பில், ஆசியாவின் எதிர்காலத்துக்கு சிறப்பாக பணியாற்றியவர்களை கௌரவிக்கும் வகையில், 2014 முதல், 'ஆசிய சமூக மாற்றத்துக்கான விருது ' வழங்கி கௌரவித்து வருகிறது.
- ✓ இந்த ஆண்டுக்கான விருதுக்கு, சாயா சர்மா உட்பட ஆறு பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். விருது வழங்கப்பட்ட ஆண்டு முதல், விருது பெறுவோர் அனைவருமே பெண்களாக இருப்பது இதுவே முதல் முறையாகும்.

10. 'பத்ம விபூஷன்' விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் இந்திய தடகள வீராங்கனை யார்?

A) P V சிந்து

B) சாக்ஷி மாலிக்

**C) மேரி கோம் ☑**

D) தீபா கர்மாகர்



✓ மணிப்பூரைச் சேர்ந்த M C மேரி கோம், விளையாட்டு அமைச்சகத்தால் 'பத்ம விபூஷன்' விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் இந்திய தடகள வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றுள்ளாரர். 6 முறை உலக அமெச்சூர் குத்துச்சண்டை சாம்பியனான ஒரே வீராங்கனையும் ஏழு உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் ஒவ்வொன்றிலும் பதக்கம் வென்ற ஒரே குத்துச்சண்டை வீராங்கனையுமாவார் மேரி கோம்.

✓ பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த், கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் மற்றும் மலையேற்ற வீரர் சர் எட்மண்ட் ஹிலாரி ஆகியோருக்குப் பிறகு 'பத்ம விபூஷன்' விருதைப் பெறும் நான்காவது விளையாட்டு ஆளுமையாக மேரி கோம் இருப்பார். மேரி கோம், 2013இல் 'பத்ம பூஷன்' விருதையும், 2006இல் 'பத்மஶ்ரீ' விருதையும் வென்றார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றிவரும் அனைத்துப் பள்ளிகளிலும் நிகழாண்டு (2019–20) முதல் ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு மாணாக்கர்களுக்கும் பொதுத்தேர்வு நடத்தப்படும் எனத் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை அறிவித்துள்ளது.

✓ மதுரை மீனாட்சியம்மன் சொக்கநாதர் கோவிலில் வரும் தீபாவளி (அக்டோபர்.27) முதல் பக்தர்களுக்கு இலவசமாக இலட்டு பிரசாதமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

1. 'முக்கியமந்திரி தால் போஷித் யோஜனா'வை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

A) ஹிமாச்சல பிரதேசம்

B) உத்தர பிரதேசம்

C) மத்திய பிரதேசம்

**D) உத்தரகாண்ட் ☑**



- ✓ மாநிலத்தில் உள்ள ஏழை மக்களுக்கு மலிவு விலையில் பருப்பு வகைகளை விநியோகிப்பதற்காக உத்தரகாண்ட் அரசு அண்மையில், 'முக்கியமந்திரி தல் போஷித் யோஜனா'வை அறிமுகப்படுத்தியது.
- ✓ இத்திட்டத்தின் படி, ஒவ்வொரு மாதமும் 23.32 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் 2 கிலோ பருப்பு வகைகள் கிடைக்கும். கொண்டைக்கடலை ஒரு கிலோ / மாதத்திற்கு ₹44 என்ற விலையில் கிடைக்கும். இந்தக் கடலையின் தற்போதைய சந்தை விலை, கிலோவுக்கு ₹65 – 70 வரை உள்ளது.

2. எந்தத் தேதியில், ஹிந்தி மொழி நாள் கொண்டாடப்படுகிறது?

A) செப்டம்பர் 12

B) செப்டம்பர் 13

**C) செப்டம்பர் 14 ☑**

D) செப்டம்பர் 15




- ✓ தேசிய ஹிந்தி மொழி நாள் (National Hindi Day), ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.14 அன்று இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. 1949ஆம் ஆண்டு இதே நாளில் இந்தியாவின் அரசியலமைப்பு அவையானது தேவநாகரி எழுத்துவடிவில் எழுதப்பட்ட ஹிந்தியை 343ஆவது பிரிவின் கீழ், ஹிந்தியக் குடியரசின் அலுவல்பூர்வ மொழியாக அறிவித்தது. இந்தியாவில் மொத்தம் 22 அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகள் உள்ளன. அதில் ஹிந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளும் அதிகாரப்பூர்வமாக இந்திய ஒன்றிய அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

3. பெப்ஸிகோ நிறுவனத்தின், விளையாட்டின்போது அருந்தப்படும் பானமான 'Gatorade'இன் விளம்பர தூதராக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய தடகள வீரர் / வீராங்கனை யார்?

A) பஜ்ரங் புனியா

B) வினேஷ் போகத்

**C) ஹிமா தாஸ் ☑**

D) சௌரப் சவுத்ரி



✓ அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த இந்திய தடகள வீராங்கனையான ஹிமா தாஸ், பெப்ஸிகோ நிறுவனத்தின், விளையாட்டின்போது அருந்தப்படும் பானமான 'Gatorade'இன் இந்தியாவுக்கான விளம்பர தூதராக தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

✓ இதன்மூலம், பூப்பந்து வீராங்கனை P V சிந்து மற்றும் ஈட்டியெறி வீரர் நீரஜ் சோப்ரா ஆகியோருடன் இந்தியாவுக்கான விளம்பர தூதராக இருப்போரின் பட்டியலில் ஹிமா தாஸும் இணைந்துள்ளார். 'Gatorade' இந்தியாவானது பயிற்சி & பந்தயநாள் ஊட்டச்சத்து குறித்து நன்கு புரிந்துகொள்வதற்காக இந்த ஒப்பந்த காலத்தின்போது ஹிமா தாஸுடன் இணைந்து செயல்படும்.

**4.** 2020 FIFA U–17 பெண்கள் உலகக்கோப்பை நடைபெறவுள்ள நாடு எது?

**A) இந்தியா ☑**

B) இலங்கை

C) தென்னாப்பிரிக்கா

D) மேற்கிந்திய தீவுகள்



✓ FIFA U–17 பெண்கள் உலகக்கோப்பை 2020இன் 7ஆவது பதிப்பை 2020 நவ.2–21 வரை இந்தியா நடத்தவுள்ளது. போட்டிகள் நடத்தப்படவுள்ள நகரங்களின் பட்டியல், FIFAஉடன் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் அறிவிக்கப்படும். ஸ்பெயின் நடப்புச் சாம்பியனாக உள்ளது. இதற்குமுன்பு 2017ஆம் ஆண்டில் ஆண்கள் U–17 உலகக்கோப்பையை இந்தியா நடத்தியுள்ளது.


**5.** "Fortune Turners: The Quartet That Spun India to Glory" என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) டிக்கி ரத்னாகர்

B) போரியா மஜும்தார்

**C) ஆதித்யா பூஷன் ☑**

D) S இராமசாமி




✓ "Fortune Turners: The Quartet That Spun India to Glory" என்ற நூலை ஆதித்ய பூஷன் மற்றும் சச்சின் பஜாஜ் ஆகியோர் எழுதியுள்ளனர். இது, 853 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய பிரபல இந்திய சுழற் பந்து நால்வர்களான பிஷன் சிங் பேடி, எரபள்ளி பிரசன்னா, பகவத் சந்திரசேகர் மற்றும் சீனிவாஸ் வெங்கடராகவன் ஆகியோருக்கான வாழ்த்துப்பாவாகும்.

**6.**எவ்வகை இனத்துடன் தொடர்புடையது *Cryodrakon boreas*?

**A) Pterosaurs ☑** B) Rapidosaurus

C) Dinosaurs D) Stegosaurus



- ✓ இலண்டனில் உள்ள குயின் மேரி பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள், அண்மையில், 77 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வட அமெரிக்காவின் மேல் பறந்து திரிந்த இதுவரை வாழ்ந்த மிகப் பெரிய பறக்கும் விலங்குகளுள் ஒன்றான 'டெரோசார் – கிரையோடிராகன் போரியாஸ்' என்ற ஒரு புதிய வகையின் படிமத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- ✓ வானூர்தி அளவிலான இந்த ஊர்வனம், 10 மீட்டர் நீள இறக்கைகளையும் 250 கிலோ எடையைக் கொண்டுள்ளது. கிரேக்க மொழியில், அதன் பெயர் "வாடைக்காற்றின் உறைந்த டிராகன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**7.** இந்திய தாவரவியல் அளவாய்வின் (BSI) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A) புனே

B) சென்னை

**C) கொல்கத்தா** ☑

D) தில்லி



- ✓ இந்திய தாவரவியல் அளவாய்வின் அறிவியலாளர்கள், அண்மையில், நாகாலாந்து மாநிலத்தின் பெரென் மற்றும் திமாபூர் மாவட்டத்தில், 2 புதிய இஞ்சி இனங்களைக் கண்டறிந்தனர். இவ்விரண்டு இனங்களில், *Zingiber dimapurense* அளவில் உயரமாக உள்ளது; அதன் இலைதளிர்கள் 90–120 செ.மீ உயரத்தைக் கொண்டுள்ளன. அதேசமயம், *Zingiber perenense* இலைகளின் தளிர்கள் 70 செ.மீ உயரம் வரை உள்ளன.
- ✓ *Zingiber officinale*இன் (பொதுவான இஞ்சி) வேர்த்தண்டுக்கிழங்கு ஆசியா முழுவதும் சமையல் பயன்பாட்டுக்காகவும், அதன் மருத்துவ மதிப்புக்காகவும் பயன்படுத்தப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். BSIஇன் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.

**8.** இந்திய தர நிர்ணய அமைவனத்தின் (BIS) கூற்றுப்படி, உலகத்தரம்மிக்க குண்டுதுளைக்காத மேல் சட்டைகளை வழங்குவதில் உலகளவில் இந்தியாவின் நிலை என்ன?

A) 6ஆவது

B) 5ஆவது

C) 3ஆவது

**D) 4ஆவது** ☑



- ✓ 360° பாதுகாப்பை வழங்கும் குண்டு துளைக்காத மேல் சட்டைகளை (bulletproof jackets) வழங்கும் நாடுகளின் வரிசையில் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி முதலிய நாடுகளுக்குப் பிறகு தனது சொந்த தேசிய தரத்தை பெற்ற நான்காவது நாடாக இந்தியா உள்ளது என இந்திய தர நிர்ணய அமைவனம் (BIS) தெரிவித்துள்ளது.

✓ இப்போது, இந்தியா தனது சொந்த தரத்தின்படி குண்டுதுளைக்காத மேல் சட்டைகளை ஐரோப்பிய நாடுகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத்தொடங்கியுள்ளது. BIS விதிமுறைகளின்படி, இரண்டு பொதுத்துறை நிறுவனங்களான மேதனி மற்றும் சென்னை ஆவடியில் உள்ள போர்த்தளபாடங்கள் உற்பத்தித் தொழிற்சாலை மற்றும் தனியார் நிறுவனங்களான SNPP (பல்வால்), ஹரியானாவின் ஸ்டார்வயர் (பரிதாபாத்) மற்றும் உத்தரபிரதேசத்தின் MKU (கான்பூர்) ஆகியவை குண்டு துளைக்காத மேல் சட்டைகளை உற்பத்தி செய்கின்றன. BIS என்பது பல்வேறு தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான தரங்களை நிர்ணயிக்கும் ஒரு தேசிய அமைப்பாகும்.

9.போரினால் பாதிக்கப்பட்ட ஏமனில், ஐக்கிய நாடுகளின் திட்டத்தை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள மூத்த இந்திய இராணுவ அதிகாரி யார்?

**A) அபிஜித் குகா ☑**

B) திவ்யா அஜித் குமார்

C) சதீந்தர் குமார் சைனி

D) K ஸ்ரீராம் குமார்



✓ ஏமனில் உள்ள ஹோதைதா நகரத்தில் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நடந்து வந்தது. அந்தப் போரை நிறுத்த ஐ.நா அவை ஒப்பந்தம் ஒன்றை கடந்த ஆண்டு நிறைவேற்றியது. இந்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்க ஐ.நா ஒரு பாதுகாப்புக் குழுவை நிறுவியது. ஐ.நா அவை சார்பில் ஏமன் ஹோதைதா குழுத்தலைவராக பணிபுரிந்த மைக்கேல் லாலெஸ்கார்ட் பணி ஓய்வு பெற்றதையடுத்து ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸ், மூத்த இந்திய இராணுவ அதிகாரியான ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் அபிஜித் குஹாவை அந்தப் பதவிக்கு நியமித்துள்ளார்.

10. 'ஜன் சூச்னா வலைத்தளத்தை' தொடங்கியுள்ள மாநில அரசு எது?

A) பஞ்சாப்

B) ஒடிசா

C) மத்திய பிரதேசம்

**D) இராஜஸ்தான் ☑**




✓ தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கு இணங்கும் உணர்வில் அரசு அலுவலர்கள் மற்றும் துறைகள் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு தன்னிச்சையாக வழங்குவதற்காக இராஜஸ்தான் அரசு 'ஜன் சூச்னா வலைத்தளம்' என்றவொன்றை ஜெய்ப்பூரில் தொடங்கியது. இதன் வகையில் இந்தியாவின் முதன்மைத் தளமாக விளங்கும் இத்தளம், வெளிப்படைத்தன்மை & பொறுப்புக்கூறல் ஆகியவற்றைக் கொண்டுவருகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** இந்தியாவில் உணவு பூங்காக்களுக்கு ₹3000 கோடி உதவி வழங்க ஒப்புதல் வழங்கியுள்ள சர்வதேச அமைப்பு எது?

**A) உலக வங்கி ☑**

B) ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி

C) ஆசிய வளர்ச்சி வங்கி

D) சர்வதேச நாணய நிதியம்

✓ நாடு முழுவதும் சிறிய மற்றும் பெரிய அளவிலான உணவு பூங்காக்களை அமைக்க ₹3000 கோடி நிதி உதவியை அளிப்பதற்கு உலக வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. இத்தகவலை பதினைந்தாவது இந்திய – அமெரிக்க பொருளாதார உச்சிமாநாட்டின்போது, மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் துறை அமைச்சர் இராமேஸ்வர் தேலி தெரிவித்தார். இந்த உச்சிமாநாட்டை செப்டம்பர்.13 அன்று புது தில்லியில் இந்திய–அமெரிக்க வர்த்தக சபையின் வட இந்திய கவுன்சில் (IACC–NIC) ஏற்பாடு செய்திருந்தது.

**2.** கௌஷல் தர்மமேர், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) ஸ்குவாஷ்

**B) பூப்பந்து ☑**

C) டென்னிஸ்

D) சதுரங்கம்



✓ இரங்கூனில் நடந்த விறுவிறுப்பான ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில், இந்தோனேசியாவின் கரோனோ கரோனோவை வீழ்த்தி 2019 மியான்மர் சர்வதேச தொடரை மும்பையைச் சேர்ந்த இந்திய வீரர் கௌஷல் தர்மர் வென்றார்.

**3.** நடப்பாண்டு ACC U–19 ஆசியக்கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியை வெல்வதற்கு இந்தியா வீழ்த்திய நாடு எது?

A) பாகிஸ்தான்

B) ஆப்கானிஸ்தான்

C) இலங்கை

**D) வங்கதேசம் ☑**



✓ செப்.14 அன்று கொழும்புவில் நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை இறுதிச்சுற்றில் வங்கதேச அணியை 5 இரன்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது இந்திய அணி. ஐந்து விக்கெட்டுகள்

எடுத்து இந்திய அணி கோப்பையை வெல்ல உதவிய இடதுகை சுழற்பந்துவீச்சாளரான அதர்வா அன்கோல்கருக்கு 'ஆட்ட நாயகன்' விருது வழங்கப்பட்டது.

4.மியான்மரில் நடந்த 2019 IBSF உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பை வென்ற இந்தியர் யார்?

A) சுபாஷ் அகர்வால்

B) யாசின் மெர்ச்சன்ட்

**C) பங்கஜ் அத்வானி ☑**

D) ஆதித்யா மேத்தா



✓ IBSF உலக பில்லியர்ட்ஸ் போட்டியில் 22ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார் இந்திய வீரர் பங்கஜ் அத்வானி. இவர் இந்தியாவின் நிலையான விளையாட்டு வீரர்களுள் ஒருவராவார். பில்லியர்ட்ஸின் சிறிய வடிவ பிரிவில், கடந்த 6 ஆண்டுகளில் பங்கஜ் அத்வானி வெல்லும் ஐந்தாவது பட்டம் இதுவாகும். ஐக்கிய பேரரசின் தொழிற்முறை போட்டிகளிலிருந்து 2014இல் திரும்பிய பின்னர், ஒவ்வோர் ஆண்டும் பங்கஜ் அத்வானி வாகை சூடிவருகிறார்.

5.நடப்பாண்டு வியட்நாம் ஓப்பன் சூப்பர் 100 இறகுப்பந்து போட்டியில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்ற இந்திய வீரர் யார்?

A) கௌஷல் தர்மமேர்

**B) சௌரப் வர்மா ☑**

C) இலக்ஷ்யா சென்

D) சன் பெய் சியாங்



✓ வியட்நாமின் ஹோ சி மின் நகரத்தில் நடந்த வியட்நாம் ஓப்பன் சூப்பர் 100 இறகுப்பந்து போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிச்சுற்றில், சீன வீரர் சன் பெய் சியாங்கை இந்திய வீரர் சௌரப் வர்மா 21–12 17–21 21–14 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி பட்டத்தைக் கைப்பற்றினார். இந்த ஆண்டில் ஹைதராபாத் ஓப்பன், ஸ்லோவேனியன் ஓப்பன் ஆகிய சர்வதேச போட்டிகளில் சௌரப் வர்மா சாம்பியன் பட்டம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

6.கேரள அரசு சமீபத்தில் எந்த நாட்டுடன் புற்றுநோய் பராமரிப்பு குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது?

A) இலங்கை

B) வியட்நாம்

C) இந்தோனேசியா

**D) மாலத்தீவு ☑**



- ✓ கேரள அரசும் பிராந்திய புற்றுநோய் மையமும் இணைந்து, தீவு நாடான மாலத்தீவில் புற்றுநோய் பராமரிப்பை வலுப்படுத்துவதற்காக அந்நாட்டு அரசாங்கத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. பிராந்திய புற்றுநோய் மையத்தின் நிபுணத்துவத்தின் மூலம் மாலத்தீவில் புற்றுநோய் பராமரிப்புத் திட்டங்களை மேம்படுத்துவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- ✓ இந்த ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, மாலத்தீவில் உள்ள நலப்பராமரிப்பு மையங்களின் மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் ஆய்வக ஊழியர்களுக்கு பிராந்திய புற்றுநோய் மையத்தில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

7.அண்மையில் காலமான சஞ்சிவ் தத்தா, எந்தத் துறையைச் சேர்ந்தவர்?



A) கிரிக்கெட்

**B) திரைத்துறை ☑**

C) நிழற்படம் எடுத்தல்

D) நீச்சல்

- ✓ ஹிந்தித் திரையுலகின் புகழ்பெற்ற திரைப்படத் தொகுப்பாளரான சஞ்சிவ் தத்தா (54), கொல்கத்தாவில் செப்டம்பர்.15 அன்று காலமானார். அவர், 'டோர்', 'மர்தானி', 'ஏக் ஹசினி தி' போன்ற திரைப்படங்களில் பணியாற்றினார். ஹிந்தி, பெங்காலி மொழித் திரைப்படங்கள் உட்பட எண்பதுக்கும் மேற்பட்ட திரைப் படங்களை தொகுத்த பெருமைக்குரியவர் சஞ்சிவ் தத்தா. குந்தன் ஷா, ஸ்ரீராம் ராகவன், பிரதீப் சர்க்கார் போன்ற திரைப்பட இயக்குநர்களுடன் அவர் பணியாற்றியுள்ளார்.

8. 2019 சர்வதேச ஓசோன் அடுக்கு பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருள் என்ன?




A) 44 Years and Healing

**B) 32 Years and Healing ☑**

C) 50 Years and Healing

D) 48 Years and Healing

- ✓ ஓசோன் படலத்தை பாதுகாக்க 1987ஆம் ஆண்டில் 'மாண்ட்ரியல் ஒப்பந்தம்' கையெழுத்தானது. அதனை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.16 அன்று சர்வதேச ஓசோன் அடுக்கு பாதுகாப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஓசோன் படலம் அழிவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அதை தக்கவைத்துக்கொள்வதற்கான தீர்வை ஆராய்வதுமே இதன் நோக்கமாகும்.
- ✓ மாண்ட்ரியல் ஒப்பந்தத்தின்கீழ் ஓசோன் அடுக்கு மற்றும் காலநிலையைப் பாதுகாக்க 30 ஆண்டுகளாக பன்னாட்டளவில் அளிக்கப்பட்டு வரும் ஒத்துழைப்பை, நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான, "32 Years and Healing" என்ற கருப்பொருள் கொண்டாடுகிறது.

**9.** குருநானக் தேவின் படைப்புகளை உலக மொழிகளில் வெளியிட முடிவுசெய்துள்ள சர்வதேச அமைப்பு எது?

**A) UNESCO ☑**

B) UNICEF

C) உலக நலவாழ்வு அமைப்பு

D) SAARC

- ✓ ஐ.நா கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பானது (UNESCO) குருநானக் தேவின் 550ஆவது பிறந்தநாளைக்குறிக்கும் வகையில் அவரது படைப்புகளின் தொகுப்பை உலக மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட முடிவுசெய்துள்ளது. இந்த நிகழ்வைக்குறிக்கும் வகையில், இந்திய அரசாங்கமும் தொடர்ச்சியான நிகழ்வுகளை நடத்திவருகிறது.
- ✓ இதில், பஞ்சாபின் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள தேவபாபா நானக் முதல் பன்னாட்டு எல்லை வரையிலான கர்தார்பூர் வழித்தடத்தை நிர்மாணித்தல், வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான சுல்தான்பூர் லோதியை மேம்படுத்துதல், சுல்தான்பூர் லோதி ரயில் நிலையத்தை தரமுயர்த்துதல் மற்றும் நினைவு நாணயங்கள் மற்றும் அஞ்சல் தலைகளை வெளியிடுதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் அடங்கும். தேசிய நூல் அறக்கட்டளையும் குர்பானியை வெவ்வேறு இந்திய மொழிகளில் வெளியிடவுள்ளது.

**10.** சோன்பட்டில் உள்ள இராய் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் முதல் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

A) இரவி சாஸ்திரி

**B) கபில் தேவ் ☑**

C) சச்சின் டெண்டுல்கர்

D) VVS இலக்ஷ்மன்



- ✓ ஹரியானா மாநிலம் சோனிபட் மாவட்டத்தின் இராய் பகுதியில் விளையாட்டுப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் முதல் வேந்தராக கிரிக்கெட் வீரர் கபில் தேவ் நியமிக்கப்பட்டுள்ளார். உடற்கல்வி, விளையாட்டு அறிவியல், நவீன தொழில்நுட்பம், ஊட்டச்சத்து, விளையாட்டு ஊடகம், சந்தைப்படுத்துதல் தொடர்பான பாடங்கள் இங்கு பயிற்றுவிக்கப்படும்.
- ✓ சுவர்னிம் குஜராத் விளையாட்டு பல்கலைக்கழகம் (காந்திநகர்) மற்றும் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் (சென்னை) ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக நாட்டின் மூன்றாவது விளையாட்டு பல்கலைக்கழகமாக ஹரியானா விளையாட்டு பல்கலைக்கழகம் இருக்கும்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## மின்சார வாகனக் கொள்கை - 2019

- சுற்றுப்புறச் சூழல்களை பாதுகாத்து, காற்று மாசுபடுவதை குறைக்கின்ற வகையில், மின்சாரத்தில் இயங்கிடும் வாகனங்களை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசினால் தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை – 2019 தயாரிக்கப்பட்டுள்ளது.
- இதன்படி, மின்சாரத்தில் இயங்கும் அனைத்து இருசக்கர வாகனங்கள், மகிழுந்துகள், மூன்று சக்கர வாகனங்கள், பேருந்துகள் மற்றும் இலகுரக சரக்கு வாகனங்கள் ஆகியவற்றுக்கு 100% மோட்டார் வாகன வரிவிலக்கு அளிக்கப்படும். இந்த வரிவிலக்கு, 2022ஆம் ஆண்டு இறுதி வரை வழங்கப்படும்.
- மின்சார வாகனங்கள் உற்பத்திக்கான முதலீடுகளுக்கு 15 சதவீதம் வரையிலும், மின்கல உற்பத்திக்கான முதலீடுகளுக்கு 20 சதவீதம் வரையிலும் மூலதன மானியம் அளிக்கப்படும். இந்தச் சலுகை 2025ஆம் ஆண்டு வரை செய்யப்படும் முதலீடுகளுக்குப் பொருந்தும். முதல் மின்சார வாகனக் கொள்கையின் மூலமாக ₹50,000 கோடிக்கு முதலீடுகளை ஈர்க்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- அடுத்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் 6 மாநகரங்களில் மின்சார தானிகள் இயக்கப்படும். சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு மாநகரங்களில் உள்ள அனைத்து தானிகளும் மின்சாரத்தில் இயங்கும் வகையில் மாற்றப்படும். அதைத் தொடர்ந்து அனைத்து இடங்களிலும் படிப்படியாக மின்சார தானிகள் இயக்கப்படும்.

# நடப்பு நிகழ்வுகள்

1.யாருக்கு நடப்பாண்டுக்கான 'சர்வதேச Dr.கலாம் ஸ்மிருதி சிறப்பு விருது' வழங்கப்பட்டுள்ளது?

A) சஷி தரூர்

B) நரேந்திர மோடி

C) ஆங் சான் சூகி

**D) ஷேக் ஹசீனா ☑**



- ✓ பதற்றம், மோதல்கள் & பயங்கரவாதம் இல்லாத அமைதியான மற்றும் வளமான தெற்காசியாவுக்கான அவரது தொலைநோக்குப் பார்வைக்காக வங்கதேசத்தின் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு டாக்காவில், நடப்பாண்டுக்கான 'சர்வதேச Dr.கலாம் ஸ்மிருதி சிறப்பு விருது' வழங்கப்பட்டது.
- ✓ இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் அவராற்றிய பங்களிப்பை இவ்விருது அங்கீகரிக்கிறது. இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர் Dr. APJ அப்துல் கலாம் அவர்களின் நினைவாக இவ்விருது நிறுவப்பட்டது. தங்களது நாடு சிறந்து விளங்குவதற்காக, தங்களது துறைகளில் சிறந்து விளங்கிய அரசியல் தலைவர்கள் அல்லது தலைவர்களைக் கௌரவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் இவ்விருது வழங்கப்படுகிறது.

2. 38ஆவது சர்வதேச ஷார்ஜா புத்தக கண்காட்சியின் (SIBF–2019) கருப்பொருள் என்ன?

A) Share a Story

B) Read the World

**C) Open Books, Open Minds ☑**

D) Reading, it's my right




- ✓ ஷார்ஜா சர்வதேச புத்தக கண்காட்சியின் (SIBF–2019) 38ஆவது பதிப்பு, அக்.30 முதல் நவம்பர்.9 வரை "Open Books, Open Minds" என்ற கருப்பொருளுடன் நடைபெறவுள்ளது. இதில், உலகெங்கிலும் உள்ள ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், அறிவுஜீவிகள் மற்றும் கலைஞர்கள் தங்கள் அனுபவங்களையும் நிபுணத்துவத்தையும் இந்த முக்கிய நிகழ்வுக்கு கொண்டுவருவதோடு இந்தத் துடிப்பான கலாசார நிகழ்வில் பங்கேற்கவும் செய்வார்கள்.
- ✓ இதுதவிர, நூல்கள் & கல்வியறிவை மேம்படுத்துவதில் ஷார்ஜாவின் தொடர்ச்சியான முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக UNESCO, 2019ஆம் ஆண்டிற்கான உலக புத்தக தலைநகரமாக ஷார்ஜாவை அறிவித்துள்ளது.

3.கோடியக்கரை கானுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?



**A) தமிழ்நாடு ☑** B) கர்நாடகா

C) ஒடிசா D) கேரளா

✓ தஞ்சாவூர் சிவகங்கை பூங்கா, பொலிவுறு நகரம் திட்டத்தின்கீழ் ₹8 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பூங்காவில், மான்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பொலிவுறு நகரம் திட்டத்தில் நகரங்களில் விலங்குகளைப் பராமரிக்கக்கூடாது எனச்சட்டம் உள்ளதால் பூங்காவில் உள்ள மான்களை இடமாற்றம் செய்வது என முடிவுசெய்யப்பட்டது. அதன்படி, பூங்காவில் உள்ள 41 மான்களும், நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அருகேயுள்ள கோடியக்கரை சரணாலயத்துக்கு சிறப்பு வாகனங்கள் மூலம் கொண்டுசென்று விடப்பட்டன.

**4.** "Turbulence & Triumph: The Modi Years" என்ற நூலின் ஆசிரியர் யார்?



A) அனிதா தேசாய்

B) துர்ஜோய் தத்தா

C) சேதன் பகத்

**D) இராகுல் அகர்வால் ☑**

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான நிழற்படத்தொகுப்பு அடங்கிய "Turbulence & Triumph: The Modi Years" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. குஜராத்தின் வாத்நகரில் சிறுவனாக இருந்ததிலிருந்து பிரதமரானது வரையிலான அவருடைய வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளின் புகைப்படங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. அவருடைய குடும்பத்தார், நண்பர்கள், தேசிய மற்றும் வெளிநாட்டுத்தலைவர்களின் கருத்துக்களும் இதில் இடம்பெற்றுள்ளது. இந்நூலை, இராகுல் அகர்வால் மற்றும் பாரதி S பிரதான் ஆகியோர் தொகுத்துள்ளனர்.

**5.**அண்மையில் காலமான சத்தார், எந்தப்பிராந்திய திரையுலகில் புகழ்பெற்ற நடிகராக இருந்தார்?



A) ஒடியா

B) ஹிந்தி


C) கன்னடம்

**D) மலையாளம் ☑**

✓ திரைப்படங்களில் குணச்சித்திர வேடங்களுக்காக புகழ்பெற்ற மூத்த மலையாள நடிகரான சத்தார் செப்.17 அன்று ஆலுவாவில் காலமானார். தமிழ் மற்றும் தெலுங்கு மொழித் திரைப்படங்கள் உட்பட முந்நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார்.

✓ அவர் தனது திரைத்துறை வாழ்வின் உச்சத்திலிருந்தபோது 1979இல் பிரபல நடிகை ஜெயபாரதியை மணந்தார். ஆனால், பின்னர் அவர்கள் பிரிந்தனர். இவர்களது மகன் கிருஷ் சத்தாரும் ஒரு நடிகராவார்.

**6.**இந்தியாவின் முதல் பெண் இராணுவ தூதரக அதிகாரி யார்?



A) நிகிதா சிங்

B) அபா தாவேசர்

C) மிருதுலா கோஷி

**D) அஞ்சலி சிங் ☑**

- ✓ இந்திய தூதரகங்களில் பணியமர்த்தப்பட்ட முதல் பெண் விங் கமாண்டர் என்ற பெருமையை அஞ்சலி சிங் பெற்றுள்ளார். வெளிநாட்டுத் தூதரகங்களில் முப்படைகளில் ஏதேனும் ஒரு பிரிவைச் சேர்ந்த அதிகாரி பணியிலமர்த்தப்படுவது வழக்கமாக இருந்தாலும் முதல்முறையாக இந்திய வான்படையின் வானூர்தி பொறியியல் பிரிவைச் சேர்ந்த விங் கமாண்டர் அஞ்சலி சிங், மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரகப் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ இவர், விமானப்படையில் 17 ஆண்டுகளாக பணியாற்றிவருகிறார். வெளிநாட்டு தூதரகத்தில் விமானப் படையின் சார்பில் இருக்கும் அதிகாரி, இந்திய விமானப்படை அந்த நாட்டில் பிரிதிநிதியாக இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

7. 'Enduroman Triathlon'ஐ முடித்த முதல் இந்தியரான மாயங்க் வைத், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

A) ஹரியானா

B) திரிபுரா

**C) ஹிமாச்சல பிரதேசம் ☑**

D) மேற்கு வங்கம்



- ✓ உலகின் மிகவும் கடினமான சகிப்புத்தன்மை போட்டிகளுள் ஒன்றாக கருதப்படும், இங்கிலாந்து முதல் பிரான்ஸ் வரையிலான, 'Enduroman – Arch to Arc' என்னும் டிரையத்லான் போட்டியை முடித்த உலகின் 44ஆவது நபராகவும் முதல் இந்தியராகவும் ஹிமாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த மாயங்க் வைத் ஆனார். இதனை தனித்திறனில் முடித்த முதல் ஆசிய நபராகவும் இவருள்ளார்.
- ✓ 50 மணி 24 நிமிடங்களில் ஓடுதல், நீச்சல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த டிரையத்லானை முடித்து, இதுவரை இந்தப் போட்டியை முடிக்க எடுக்கப்பட்ட மிகக்குறுகிய நேரத்திற்கான சாதனையையும் மாயங்க் வைட் முறியடித்துள்ளார்.

8.ஆந்திரத்தின் முதல் லோகாயுக்தாவாக பதவியேற்றுள்ளவர் யார்?

**A) P இலட்சுமன் ரெட்டி ☑**

B) அஜய கல்லம்

C) துவாரகா திருமலை ராவ்

D) மல்லாடி விஷ்ணு



- ✓ முன்னாள் ஆந்திர உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி P இலட்சுமன் ரெட்டி, 2014ஆம் ஆண்டில் மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதிலிருந்து ஆந்திர பிரதேச மாநிலத்தின் முதல் லோகாயுக்தாவாக பதவியேற்றுள்ளார். அவர் ஐந்தாண்டு காலத்திற்கு இந்தப் பதவியை வகிப்பார்.
- ✓ ஆளுநர் பிஸ்வா பூசன் ஹரிச்சந்தன், தும்மலப்பள்ளி சேத்ரையா கலாக்ஷேத்திரத்தில் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்தார். YSR காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கமானது தனது சமீபத்திய பட்ஜெட்

அமர்வின்போது, லோகாயுக்தா சட்டத்தில் திருத்தம் செய்து, ஓய்வுபெற்ற நீதிபதியை லோகாயுக்தாவாக நியமிக்க உதவியது. அது, ஊழல் விசாரணை அமைப்பை அமைப்பதற்கு வழிவகுத்தது.

9. 52ஆவது தேசிய பொறியாளர்கள் நாளின் கருப்பொருள் என்ன?

A) Role of Engineers in a developing India

**B) Engineering for change ☑**

C) Find Smart Engineering Solutions

D) Engineering Challenges for Knowledge Era

✓ புகழ்பெற்ற கட்டடப் பொறியாளர் சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரையாவின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்.15 அன்று தேசிய பொறியாளர் நாள் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. நவீன மைசூரின் தந்தை என இவர் போற்றப்படுகிறார். நாட்டிற்கு அவராற்றிய பங்களிப்புகளுக்காக 1955இல் அவருக்கு 'இந்திய மாமணி' வழங்கப்பட்டது. 52ஆவது பொறியாளர் நாள், அண்மையில், "மாற்றத்திற்கான பொறியியல்" என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது.

10. 2019 ஆண்கள் FIBA உலக கூடைப்பந்து சாம்பியன்ஷிப்பை வென்ற நாடு எது?

A) அர்ஜென்டினா

B) சீனா

**C) ஸ்பெயின் ☑**

D) பிரான்ஸ்

✓ சீனத்தின் பெய்ஜிங்கில் நடந்த 2019 ஆண்கள் FIBA உலக கூடைப்பந்து சாம்பியன்ஷிப்பை ஸ்பெயின் ஆண்கள் தேசிய கூடைப்பந்து அணி வென்றுள்ளது. இறுதிப்போட்டியில், அவர்கள், அர்ஜென்டினாவை 95–75 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தினர்.

## நடப்பு நிகழ்வுகள்

1. 2020 டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்றுள்ள முதலாவது இந்திய மல்யுத்த வீரர் / வீராங்கனை யார்?

A) சாக்ஷி மாலிக்

B) பவன் குமார்

C) பபிதா குமாரி

**D) வினேஷ் போகத் ☑**



✓ செப்.18 அன்று கஜகஸ்தானின் நூர் சுல்தானில் நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில், அமெரிக்க வீராங்கனை சாரா ஹில்டெபிராண்ட்டை வீழ்த்தி, 53 கி.கி பிரிவில் 2020 டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்ற முதல் இந்திய மல்யுத்த வீராங்கனை என்ற பெருமையை வினேஷ் போகத் பெற்றுள்ளார். டோக்கியோ ஒலிம்பிக்கில் தனது இடத்தைப்பெறுவதற்காக உலக சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப்பதக்கம் வென்ற சாராவை 8–2 என்ற புள்ளிக்கணக்கில் வினேஷ் போகத் வென்றார்.

2. எந்தத் தேதியில், நடப்பாண்டுக்கான உலக மூங்கில் நாள் கொண்டாடப்பட்டது?

A) செப்டம்பர் 17

B) செப்டம்பர் 20

**C) செப்டம்பர் 18 ☑**

D) செப்டம்பர் 19



✓ மூங்கில் தொழிலைப்பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக மூங்கில் அமைப்பால் ஒவ்வோர் ஆண்டும் செப்.18 அன்று உலக மூங்கில் நாள் (World Bamboo Day) கொண்டாடப்படுகிறது. 130க்கும் மேற்பட்ட இனங்களுடன் சீனாவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது மிகப்பெரிய மூங்கில் சாகுபடியாளராக இந்தியா உள்ளது.

✓ கடந்த ஜூலை மாதத்தில், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், குழுக்கள் அடிப்படையிலான அணுகுமுறையின் மூலம் பாரம்பரிய தொழில்களான மூங்கில், காதி மற்றும் தேன் போன்றவற்றை புதுப்பிக்க இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தியது. பாரம்பரிய தொழில்களை மீளுருவாக்கம் செய்வதற்கான நிதித்திட்டத்தின்கீழ் (SFURTI) இது மேற்கொள்ளப்படும். இது அத்தகைய தொழில்கள் & கைவினைஞர்களை குழுக்களாக ஒழுங்கமைப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

3. நடப்பாண்டுக்கான சர்வதேச மக்களாட்சி நாளின் கருப்பொருள் என்ன?

A) Space for Civil Society

**B) Participation ☑**

C) Democracy under Strain

D) Engage for Change



✓ மக்களாட்சியின் கொள்கைகளை மேம்படுத்துவதற்கும் நிலைநிறுத்துவதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.15 அன்று சர்வதேச மக்களாட்சி நாள் அனுசரிக்கப்படுகிறது. 'பங்கேற்பு' என்பது நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்; இது மக்களாட்சி என்பது மக்களைப் பற்றியது என்பதை நினைவுபடுத்துகிறது. உள்ளடங்கிய, சமமான & பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையில் மக்களாட்சி கட்டமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது அமைதி, நிலைத்த வளர்ச்சி மற்றும் மனித உரிமைகளுக்கான அடிப்படை கட்டமைப்பாகும்

**4.** அண்மைய ஐ.நா. சர்வதேச புலம்பெயர்ந்தோர் அறிக்கையின்படி, நடப்பாண்டில், சர்வதேச அளவில், எந்த நாட்டிலிருந்து அதிகம்பேர் புலம்பெயர்ந்துள்ளனர்?

**A) இந்தியா ☑**

B) மெக்ஸிகோ

C) சீனா

D) இரஷ்யா



✓ 'சர்வதேச புலம்பெயர்ந்தோர் – 2019' என்ற தரவுத்தொகுப்பு, அண்மையில் ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக விவகாரத்துறையின் மக்கள்தொகை பிரிவால் வெளியிடப்பட்டது. உலகின் அனைத்து நாடுகளுக்கும் பகுதிகளுக்கும் வயது, பாலினம் மற்றும் தோற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையின் அண்மைய மதிப்பீடுகளை இத்தரவு வழங்குகிறது.

✓ இவ்வறிக்கையின்படி, உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வசிப்போர் எண்ணிக்கை 272 மில்லியனாக உள்ளது. பன்னாட்டளவில் புலம்பெயர்ந்தோர் பட்டியலில் இந்தியர்கள் முதலிடம் பிடித்துள்ளனர். அதாவது 17.5 மில்லியன் பேர் உலகின் பல்வெறு நாடுகளில் வசிக்கின்றனர். இது சர்வதேச அளவிலான புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையில் 6% ஆகும். இந்தியாவைத் தொடர்ந்து, மெக்ஸிகோ (11.8 மில்லியன்), சீனா (10.7 மில்லியன்), இரஷ்யா (10.5 மில்லியன்) ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் வெளிநாடுகளில் வசிக்கின்றனர்.


**5.** "The Cousins Thackeray: Uddhav, Raj and the Shadow of their Senas" என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) அமிர்தா முகர்ஜி

**B) தவால் குல்கர்னி ☑**

C) வாணி கௌஷல்

D) ஷைலி சோப்ரா




✓ "The Cousins Thackeray: Uddhav, Raj and the Shadow of their Senas" என்ற நூலை இதழாளரும் – எழுத்தாளருமான தவால் குல்கர்னி எழுதியுள்ளார். இந்த நூல், தாக்கரே குடும்பத்தின் வரலாறு, சமூக சீர்திருத்தவாதியும் எழுத்தாளருமான பிரபோதங்கர் தாக்கரேவின் காலங்கள் பற்றியும் உத்தவ் மற்றும் இராஜ் தாக்கரே ஆகியோரின் குழந்தைப்பருவம் மற்றும் அரசியல் வாழ்க்கையைப் பற்றியும் ஆழமாகக் கூறுகிறது.

- ✓ அடையாள அரசியல் பற்றிய கேள்விகளையும், அதிலிருந்து சிவசேனா மற்றும் MNS உருவாவதற்கு ஊக்கமளித்த சமூக, கலாசார மற்றும் பொருளாதார அணி பற்றியும் இந்நூல் ஆராய்கிறது.


6.நடப்பாண்டு ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்திய ஆவணப்படமான 'மோதி பாக்' திரைப்படத்தின் இயக்குநர் யார்?

A) சஞ்சய் காக்

B) அஸ்வின் குமார்

**C) நிர்மல் சந்தர் ☑**

D) ஆர்த்தி ஸ்ரீவஸ்தாவா




- ✓ தொலைதூர இமயமலை கிராமத்தில் உள்ள 83 வயதான 'வித்யாதத்' என்னும் விவசாயியின் போராட்டத்தை அடிப்படையாகக்கொண்ட 'மோதி பாக் – Moti Bagh' என்ற ஆவணத்திரைப்படம், நடப்பாண்டுக்கான ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- ✓ இப்படத்தை நிர்மல் சந்தர் இயக்கியுள்ளார்; உத்தரகாண்ட் மலைப்பகுதியில் உள்ள முள்ளங்கிகளை வளர்க்கும் ஒரு விவசாயி நடத்தும் பண்ணையைப் பற்றியதாகும் இப்படம். அம்மாநிலத்தின் கார்வால் & குமாவோன் பிராந்தியங்களில் உள்ள பல சிற்றூர்களிலிருந்து உள்ளூர்வாசிகள் புலம்பெயர்ந்ததை இந்தப் படம் எடுத்துக்காட்டுகிறது.

7.தெற்காசியாவின் மிகவுயரமான கோபுரத்தை திறந்துள்ள நாடு எது?



A) மியான்மர்

B) வங்கதேசம்

**C) இலங்கை ☑**

D) இந்தியா

- ✓ அண்மையில் தெற்காசியாவின் மிகவுயரமான கோபுரத்தை கொழும்புவில் இலங்கை திறந்தது. இது, $100 மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதன், 80% செலவை சர்ச்சைக்குரிய பட்டை & பாதை திட்டத்தின்கீழ் சீனா நிதியளித்தது.
- ✓ 350 மீ உயரமும் 17 அடுக்கும் கொண்ட இந்தத் 'தாமரை கோபுரமானது' ஒரு தொலைக்காட்சி கோபுரம், ஓர் உணவகம், தொலைத்தொடர்பு அருங்காட்சியகம், உணவகங்கள், அரங்கம், ஒரு கண்காணிப்புத் தளம், ஒரு வணிக வளாகம் மற்றும் ஒரு மாநாட்டு மையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. 30,600 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள இந்தக் கோபுரம் இலங்கையின் 'டிஜிட்டல் தொலைக்காட்சி கோபுரமாக' செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கண்ணாடி இழை வடங்களால் கட்டப்பட்டுள்ளது மற்றும் தேவையான தொலைதொடர்பு சாதனங்கள் இதில் முழுமையாக பொருத்தப்பட்டுள்ளது.

8. 'பரோசா சேமிப்புக்கணக்கை' அறிமுகப்படுத்தியுள்ள கொடுப்பனவு (Payment) வங்கி எது?

A) Paytm கொடுப்பனவுகள் வங்கி

B) ஜியோ கொடுப்பனவுகள் வங்கி

C) இந்திய அஞ்சல் கொடுப்பனவுகள் வங்கி

**D) ஏர்டெல் கொடுப்பனவுகள் வங்கி ☑**

✓ நாட்டில் நிதிசார் சேர்ப்பை ஆழப்படுத்துவதற்காக ஏர்டெல் கொடுப்பனவுகள் வங்கி, 'பரோசா சேமிப்புக் கணக்கை' அறிமுகப்படுத்தியுள்ளது. இது இந்தியாவில் வங்கிச் சேவை சரிவர கிடைக்கப்பெறாத மற்றும் வங்கிச் சேவையில் ஈடுபடாத மக்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு சேவை செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ மாதத்திற்கு ஒரு பற்று பரிவர்த்தனையுடன் வெறும் ₹500 வைப்புத்தொகையை பராமரித்து வரும் வாடிக்கையாளருக்கு ₹5 இலட்சம் மதிப்புள்ள இலவச தனிநபர் விபத்துக் காப்பீட்டை இந்தக் கணக்கு வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் தங்கள் 'பரோசா' கணக்கில் அரசாங்க மானியங்களைப்பெற முடிவு செய்தால் / அதில் வைப்புசெய்தால், அவர்கள் ரொக்கச்சலுகை பெறவும் தகுதியுடையவர்களாவார்கள்.

9.முக்கியமந்திரி சேவா சங்கல்ப் உதவித்தொலைபேசி சேவை – 1100ஐ அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?

**A) ஹிமாச்சல பிரதேசம் ☑**

B) ஆந்திர பிரதேசம்

C) மத்திய பிரதேசம்

D) அருணாச்சல பிரதேசம்

✓ ஹிமாச்சல பிரதேச மாநில அரசாங்கமானது பொதுமக்களின் குறைகளை விரைவாகவும் குறித்த காலத்திற்குள்ளாகவும் தீர்க்கும் வகையில், 'முக்கியமந்திரி சேவா சங்கல்ப் உதவித் தொலைபேசி சேவை – 1100'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது, வாரத்தில் 6 நாட்களில் (திங்கள்–சனி) காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும்.

10.இந்தியாவுக்கும் எந்த நாடுகளுக்கும் இடையே 'SITMEX' என்னும் முதலாவது முத்தரப்பு கடற்படைப் பயிற்சி தொடங்கியுள்ளது?

A) இந்தோனேசியா & வியட்நாம்

B) சீஷெல்ஸ் & மொரிசியஸ்

**C) சிங்கப்பூர் & தாய்லாந்து ☑**

D) மாலத்தீவுகள் & கம்போடியா



✓ இந்தியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் கடற்படை பங்கேற்கும், 'SITMEX' என்னும் முத்தரப்பு கூட்டுப்பயிற்சியானது செப்.16 அன்று அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் உள்ள போர்ட்

பிளேரில் தொடங்கியது. இம்மூன்று நாடுகளும் இத்தகைய முத்தரப்பு பயிற்சியில் பங்கேற்பது இது முதல்முறையாகும்.

- ✓ இந்தப்பயிற்சியின் மூலம் 3 நாடுகளின் கடற்படையும் பரஸ்பரம் தங்கள் அனுபவங்களைப் பகிர்வது மூலம் புதிய உத்திகளை கற்றுக்கொள்ள இயலும். சிங்கப்பூர் கடற்படையின் 'RSS டெனேஷியஸ்' சிறுரக தாக்குதல் கப்பல், தாய்லாந்து கடற்படையின் 'HTMS கிராபுரி' போர்க்கப்பல், இந்திய கடற் படையின் 'இரன்வீர்', 'கோரா' போர்க்கப்பல்கள், 'சுகன்யா' ரோந்துக்கப்பல் ஆகியவை இப்பயிற்சியில் பங்கேற்கின்றன.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** ககன்யான் திட்டத்திற்காக எந்த அமைப்புடன் ISRO ஒப்பந்தம் செய்துள்ளது?

A) VSSC

B) NASA

**C) DRDO ☑**

D) BARC



✓ விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் 'ககன்யான்' திட்டம் தொடர்பாக, இந்திய விண்வெளி ஆய்வு மையத்துக்கும் (ISRO) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துக்கும் (DRDO) இடையே, விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உணவு, அவர்களது உடல்நலத்தைக் கண்காணிக்கும் கருவிகள், அவசரகால உதவிக்குத் தேவையான பொருட்கள், பாராசூட் உள்ளிட்டவற்றை வழங்கும் வகையில் சில வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 75ஆவது விடுதலை நாளைக் கொண்டாடும் 2022ஆம் ஆண்டுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

**2.** 5ஆவது சர்வதேச இராமாயண விழா நடைபெற்ற நகரம் எது?

A) கொச்சி

B) இலக்னோ

**C) புது தில்லி ☑**

D) சென்னை



✓ சர்வதேச ராமாயண விழாவின் 5ஆவது பதிப்பானது இந்திய கலாசார உறவுகளுக்கான கவுன்சிலால் செப்டம்பர்.17–19 வரை புது தில்லியில் நடத்தப்பட்டது. பொதுவாக நவராத்திரத்திற்கு முன்பு ஏற்பாடு செய்யப்படும் இவ்விழாவில், இராமாயண காவியத்தின் கலாசார விளக்கங்களை கலைக்குழுவினர் நடித்துக்காண்பிப்பர். 17 நாடுகளைச்சேர்ந்த கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்று இராமாயணத்தின் பல்வேறு பதிப்புகளை மக்களின் பார்வைக்கு வழங்கினர்.

**3.** 2020ஆம் ஆண்டை 'செயற்கை நுண்ணறிவு' ஆண்டாக அறிவிக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?

A) ஜார்க்கண்ட்

B) கர்நாடகம்

C) ஹிமாச்சல பிரதேசம்

**D) தெலுங்கானா ☑**



✓ வளர்ந்துவரும் தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் 2020ஆம் ஆண்டை செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence) ஆண்டாக அறிவிக்க தெலுங்கானா மாநில அரசு முடிவு செய்துள்ளது.

✓ மாநிலத்தில் முன்னோடித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 'செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய உத்தி'யை வெளியிட்டுள்ள NITI ஆயோக்குடனான ஒப்பந்தத்தில் தெலுங்கானா மாநில அரசு கையெழுத்திட்டுள்ளது.

4.எந்த நகரத்தில், தேசிய தூய நிலக்கரி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (National Centre for Clean Coal Research and Development – NCCCR & D) தொடங்கப்பட்டுள்ளது?

**A) பெங்களூரு ☑**

B) கொல்கத்தா

C) தில்லி

D) சென்னை



✓ பெங்களூருவில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் இந்திய அறிவியல் கழகத்தில் (IISc.) தேசிய தூய நிலக்கரி ஆராய்ச்சி & மேம்பாட்டு மையம் (NCCCR&D) தொடங்கப்பட்டுள்ளது. NCCCR&D என்பது ஒரு தேசிய கூட்டமைப்பு ஆகும்; இது தூய்மையான நிலக்கரி சார்ந்த தொழில்நுட்பங்களின் வளர்ச்சியில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும்.

✓ NCCCR&D இலக்குவைத்துள்ள பயனாளிகளுள் தேசிய அனல்மின் நிறுவனம் (NTPC), GAIL இந்தியா நிறுவனம், பாரத மிகு மின் நிறுவனம் (BHEL), டாடா பவர் மற்றும் திரிவேணி டர்பைன்ஸ் லிமிடெட் போன்ற நிறுவனங்கள் அடங்கும்.

5.முதலாவது 'William Klein – Acadmie des beaux – arts' நிழற்படக்கலை விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள புகழ்பெற்ற இந்திய நிழற்படக் கலைஞர் யார்?

A) பப்லோ பார்தலோமெவ்

B) அதுல் கஸ்பேகர்

**C) இரகு ராய் ☑**

D) அசோக் சாலியன்



✓ புகழ்பெற்ற இந்திய நிழற்படக் கலைஞர் இரகு ராய், முதலாவது 'William Klein – Acadmie des beaux – arts' என்னும் மதிப்புமிக்க பிரெஞ்சு விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். €120,000 யூரோக்கள் பரிசுகொண்ட இந்த விருது, வரும் அக்.30 அன்று பாலாய்ஸ் டி இன்ஸ்டிட்யூட் டி பிரான்ஸில் ராய்க்கு வழங்கப்படும். முதன்முறையாக வழங்கப்படும் ஒரு விருதாக, இவ்விருது ஒரு நிழற்படக்கலைஞரின் நிழற்படம் எடுத்தல் மீதான அவரது அர்ப்பணிப்புக்கு வெகுமதி அளிக்கும் நோக்கம் கொண்டுள்ளது.

✓ தனது வழக்கமற்ற நிழற்பட உத்திகளுக்காக பிரபலமாக அறியப்படும் நிழற்படக்கலைஞரும் திரைப்பட இயக்குநருமான அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சு நிழற்படக் கலைஞரான வில்லியம் கிளேனை கௌரவிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்படுகிறது. 1984ஆம் ஆண்டு நடந்த போபால் நச்சுவாயு சோகத்தை தனது நிழற்படங்கள் மூலம் காண்பித்தவரும், 1971ஆம் ஆண்டு நடந்த வங்கதேசப்போரின் கடுமையான பின்விளைவுகளை காண்பித்தவருமாவார் இரகு.

6.முதலாவது உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?

A) செப்டம்பர் 14

B) செப்டம்பர் 15

**C) செப்டம்பர் 17 ☑**

D) செப்டம்பர் 16




✓ நோயாளிகளின் பாதுகாப்பு குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், உலகளாவிய ஒற்றுமை மற்றும் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்குமாக முதலாவது உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் (World Patient Safety Day) செப்.17 அன்று அனுசரிக்கப்பட்டது. "Patient Safety: a global health priority" என்பது இந்த நாளுக்கான கருப்பொருளாகவும், "Speak up for Patient Safety!" என்பது இந்த நாளுக்கான முழக்கவரியாகவும் இருந்தது.

7.அருணாச்சல பிரதேச மாநிலத்தின் எந்த மாவட்டத்தில், இந்தியாவின் கிழக்கத்திய சிற்றூராக இருக்கும், 'விஜயநகர்' அமைந்துள்ளது?

A) மேல் சியாங்

**B) சங்லங் ☑**

C) கிழக்கு லோகித்

D) கமெங்



✓ அருணாச்சலபிரதேச மாநிலத்தின் சங்லங் மாவட்டத்தில் உள்ள இந்தியாவின் கிழக்கத்திய சிற்றூரான விஜயநகரில், இந்திய வான்படையானது சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட ஓடுபாதையை திறந்துவைத்தது. படையினரை விரைவாக அணிதிரட்டுவதை உறுதிசெய்வதற்கும், சீனாவுடனான ஆதிக்க எல்லைக் கோட்டுக்கு பொருட்களை அனுப்புவதற்கும் இந்தப் புதுப்பிக்கப்பட்ட விஜயநகர் தரையிறங்கு தளம் முக்கியமானதாகும்.

✓ 4000 அடி நீளங்கொண்ட இந்த ஓடுதளம், AN–32 இரக விமான இயக்கத்துக்கு மட்டுமே பொருந்தும். டகோட்டா மற்றும் ஒட்டர் விமானங்களுடன் விஜயநகரில், 1962இல், முதன்முதலில் இந்திய வான் படை தனது செயல்பாடுகளைத் தொடங்கியது. இந்தியா–சீனா போர் நடந்த ஆண்டு இது. விஜயநகர், சாலை வழியாக இணைக்கப்படவில்லை. இது மூன்று பக்கங்களிலும் மியான்மரால் சூழப்பட்டுள்ளது மற்றும் நான்காவது பக்கம் நம்தாபா தேசியப்பூங்காவின் நீட்சிப்பகுதிகளைக் கொண்டுள்ளது.

8.மனித–விலங்கு மோதலைக்குறைப்பதற்காக உயிரி–வேலியை (Bio–fencing) அமைக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?

A) கர்நாடகம் **B) உத்தரகண்ட் ☑**

C) உத்தரபிரதேசம் D) ஹிமாச்சல பிரதேசம்



✓ மனித–விலங்கு மோதலைக்குறைப்பதற்காக, உத்தரகண்ட் மாநில அரசு அந்தப்பகுதிகளில் பல்வேறு வகையான தாவரங்களை (எலுமிச்சைப் புல், நீலக்கற்றாழை மற்றும் மிளகாய்) வளர்ப்பதன் மூலம் உயிரி–வேலி அமைக்க முடிவுசெய்துள்ளது.

✓ வனவிலங்குகள் குடியிருப்புப் பகுதிக்குள் நுழைவதைத் தடுப்பதற்காகவும், வனங்களை ஒட்டிய பகுதிகளில் வேளாண் பயிர்கள் மற்றும் கால்நடைகளை பாதுகாப்பதற்காகவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த உயிரியல் முறையானது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக உள்ளது. சிறுத்தை, கரடி, யானை மற்றும் காட்டுப்பன்றி முதலான விலங்குகள் மனித உயிர்கட்கும் கால்நடைகட்கும் பேரச்சுறுத்தலாக உள்ளன.

**9.** மின்னணு முறையில் தோற்றுவாய்ச் சான்றிதழ்களை (elecroic Certificates of Origin – CoO) வழங்குவதற்கான பொதுமையான டிஜிட்டல் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?

A) வெளியுறவு அமைச்சகம்

B) உள்துறை அமைச்சகம்

**C) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

D) இரயில்வே அமைச்சகம்




✓ மத்திய வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சரான பியூஷ் கோயல், மின்னணு முறையில் தோற்றுவாய்ச் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஒரு பொதுமையான டிஜிட்டல் தளத்தை புது தில்லியில் அறிமுகப்படுத்தினார்.

✓ இந்தத் தளம் அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும், அனைத்து FTA'கள் / PTA'களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து முகவர்களுக்கும் ஓர் ஒற்றை அணுகல் புள்ளியாக இருக்கும். பங்காண்மை நாடுகள் ஒப்புக்கொண்டால், தோற்றுவாய்ச் சான்றிதழ்கள் மின்னணு முறையில் வழங்கப்படும். பங்காண்மை நாடுகளின் அதிகாரிகள், வலைத்தளத்திலிருந்தே சான்றிதழ்களின் நம்பகத்தன்மையை சரிபார்க்க இயலும். இந்தப் புதிய தளம் பரிவர்த்தனை செலவுகள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் நேரத்தை மீதப்படுத்துகிறது.

**10.** 'கரண் வந்தனா' என்பது எந்தப் பயிரின் புதிய கலப்பின வகையாகும்?

A) மக்காச்சோளம்

B) தானியங்கள்

**C) கோதுமை ☑**

D) அரிசி



✓ கரண் வந்தனா (DBW 187) என்பது ஒரு புதிய கலப்பின கோதுமை வகையாகும்; இது மஞ்சள் சொறி நோய் மற்றும் வெண் வெடிப்பு நோயைத்தாங்கி வளரும் ஆற்றல் கொண்டதாகும். மேலும், வழக்கமான கோதுமை வகைகளை விடவும் கணிசமாக அதிக மகசூலை இது தரும்.

- ✓ இது, விரைவில் நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்படும். புரதம் மற்றும் இரும்புச்சத்து நிறைந்த இது, நாடு முழுவதும் அதிக வெப்பத்தைத் தாங்கி வளரும் ஆற்றல் உடையது. இதை இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின்கீழ் இயங்கும் இந்திய கோதுமை மற்றும் பார்லி ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

# "கீழடி, வைகை நதிக்கரையில் சங்ககால நாகரிகம்"

- ✓ "கீழடி, வைகை நதிக்கரையில் சங்ககால நாகரிகம்" என்ற தலைப்பில் தமிழ்நாடு தொல்லியல் துறையால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. கீழடியில் மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வு குறித்த இந்த அறிக்கையின் மூலம் தொல்குடி தமிழ்ச்சமூகம் கி.மு. 6ஆம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியுள்ளது தெரியவந்துள்ளது.
- ✓ மதுரை நகருக்கு தென்கிழக்கில் சுமார் 15 கி.மீட்டர் தொலைவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள கீழடியில் கடந்த 2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்ட நான்காவது அகழ்வாய்வில் கிடைத்த பொருள்களைவைத்து கிடைத்த முடிவுகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

### அமெரிக்க ஆய்வகத்தில் சோதனையில் வெளியான தகவல்கள்:



தங்கத்தினால் ஆன தொல்பொருட்கள்

- ✓ கீழடியில் 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நான்காம்கட்ட அகழ்வாய்வின்போது சேகரிக்கப்பட்ட ஆறு கரிம மாதிரிகள் அமெரிக்க நாட்டின் புளோரிடா மாகாணம், மியாமி நகரத்தில் அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டன.
- ✓ பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட மாதிரிகளில் அதிகபட்சமாக 353 செ.மீட்டர் ஆழத்தில் கிடைக்கப் பெற்ற கரிமத்தின் காலம் கி.மு. 580 என்று கணக்கீடு செய்யப்பட்ட ஆய்வறிக்கை கிடைத்துள்ளது.
- ✓ இக்கால கணிப்பு கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்றாம் நூற்றாண்டு வரை வளமையான பண்பாடுகொண்ட பகுதியாக கீழடி விளங்கியிருக்க வேண்டும் எனத்தெரிகிறது. தற்போது கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகள் மூலம் வைகை ஆற்றின்கரையில் நகரமயமாதல், கி.மு. 6ஆம் நூற்றாண்டில் இருந்து தொடங்குகிறது என்பது தெளிவாகிறது.

- ✓ இதே காலகட்டத்தில்தான் வட இந்தியாவின் கங்கைச் சமவெளிப் பகுதியிலும் நகரமயமாதல் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. கீழடி அகழ்வாய்வில் கிடைத்த அறிவியல் ரீதியான காலக் கணிப்புகள் தமிழ்–பிராமியின் காலம். மேலும், நூறாண்டுகள் (கி.மு.6ஆம் நூற்றாண்டு) பழமை வாய்ந்தது எனும் முடிவுக்கு நம்மை இட்டுச்செல்கிறது. இதன்மூலம் 2,600 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ்நாடு எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியுள்ளதை நிலைநிறுத்த முடிகிறது.

### வேளாண்மையே முதன்மைத் தொழில்:

- ✓ கீழடியிலிருந்து கிட்டத்தட்ட 70 எலும்புத்துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை (53%) காளை, எருமை, ஆடு, பசு ஆகியவற்றினுடையவை. இந்தப் பகுப்பாய்வு முடிவுகளின் மூலம் சங்ககாலச் சமூகம், வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்ததோடு கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது.



- ✓ கீழடியில் கிடைத்த ஓடுகள், செங்கற்கள், காரை ஆகியவற்றில் மண், சுண்ணாம்பு, இரும்பு, மெக்னீசியம், அலுமினியம் ஆகியவை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இங்கு நடத்தப்பட்ட ஆய்வுகளில் சுவர்கள், கட்டடங்களின் இடிபாடுகளும் கிடைத்தன.
- ✓ தரைகள் வழுவழுப்பான களிமண்ணால் மெழுகப்பட்டிருந்தன. கட்டடங்களைப் பொருத்தவரை அவற்றின் சுவர்கள், கூரை வரை எழுப்பப்பட்டிருக்கவில்லை. மாறாக சுவர்களுக்கு அருகில் கம்புகள் நடப்பட்டு கூரைகள் போடப்பட்டிக்கின்றன. அதே போன்று இந்தக் கீழடி அகழ்வாய்வில் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட 56 பானை ஓடுகள் கிடைத்துள்ளன.
- ✓ இவற்றில் குவிரன், ஆத(ன்) உள்ளிட்ட பெயர்களும் முழுமையடையாத எழுத்துகளும் கிடைத்துள்ளன. இதில் ஆதன் என்ற பெயர், அதன் என்று குறிப்பிடப்படுகிறது. முற்கால தமிழ் பிராமியில், நெடிலைக் குறிக்க ஒலிக்குறியீடு இடும் வழக்கம் இல்லை என்பதால், இந்த தமிழ் பிராமி எழுத்துகள் காலத்தால் மிகவும் முந்தையவையாகக் கருதப்படுகின்றன.




## நெசவுத் தொழில்– தாய விளையாட்டு:

✓ மேலும் கீழடியில் நூல்நூற்கப் பயன்படும் தக்களி, தறிகளில் பயன்படுத்தப்படும் தூரிகை, தறியில் தொங்கவிடும் கருங்கல் போன்றவையும் கிடைத்திருப்பதால், இப்பகுதியில் வாழ்ந்தவர்கள் நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

✓ இங்கு பல விளையாட்டுப் பொருள்கள் குறிப்பாக ஆட்டக் காய்கள், தாய விளையாட்டிற்கான பகடைக் காய்கள் அதிகளவில் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் சுட்டமண்ணாலானவை.

✓ அதேபோன்று பெண்கள் விளையாடும் வட்டச்சில்லுகள் 600 எண்ணிக்கையிலும், சிறுவர்கள் கயிறு சுட்டி விளையாடும் சுடுமண்ணாலான வட்டச் சுற்றிகள், வண்டி இழுத்து விளையாடும் வண்டிகளின் சக்கரங்கள் கிடைத்துள்ளன. மேலும் பெரியவர்கள் தங்கள் திறமையில் வெளிப்படுத்தும் வகையில் விளையாடும் சதுரங்க விளையாட்டுக்குப் பயன்படும் பல்வேறு அளவிலான 80 சதுரங்கக் காய்கள் கிடைத்துள்ளன.




## தமிழ்நாட்டில் ரோம் வணிகர்கள்:

✓ மேலும், வடமேற்கு இந்தியாவின் மகாராஷ்டிரம், குஜராத் போன்ற பகுதிகளில் பரவலாகக் காணப்படும் அகேட் மற்றும் கார்னீலியம் கற்களால் ஆன மணிகளும் கிடைத்துள்ளன. ரோம் நாட்டை சேர்ந்த அரிட்டைன் பானை ஒடு மண்ணடுக்கின் மேல் நிலையில் கிடைத்திருக்கிறது. இவை ரோம் நாட்டில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் புழக்கத்தில் இருந்தவை.

✓ எனவே, ரோம் நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் அல்லது அழகன்குளத்தில் தங்கியிருந்த ரோம் நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் இந்தப் பகுதிக்கு வந்திருக்கலாம். இங்கு ஒட்டுமொத்தமாக சுடுமண்ணாலான 13 மனித உருவங்கள், 3 விலங்கு உருவங்கள், 650–க்கும் மேற்பட்ட விளையாட்டுப் பொருள்கள், 35 காதணிகள், பிற அணிகலன்கள் கிடைத்துள்ளன. ஆனால், வழிபாடு தொடர்பான தொல்பொருள்கள் எவையும் தெளிவான முறையில் இதுவரை கிடைக்கவில்லையென தொல்லியல் துறையின் ஆய்வறிக்கை கூறுகிறது.

நன்றி: *தினமணி.*

# நடப்பு நிகழ்வுகள்


1. Audit Bureau of Circulationsஇன் 2019–20ஆம் ஆண்டிற்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்–டுள்ளவர் யார்?

A) பிரபுல்லா சென்

B) கிரிஷ் அகுஜா

**C) மதுகர் காமத் ☑**

D) மிலன் சக்சேனா



✓ இந்தியாவில் உள்ள பத்திரிக்கைகளின் விற்பனையை தணிக்கை செய்து, சான்றிதழ் வழங்கும் நிறுவனம் 'ABC' என்றழைக்கப்படும் "Audit Bureau of Circulations". இந்நிறுவனத்தின் 2019–20ஆம் ஆண்டுக்கான தலைவராக முத்ரா விளம்பர நிறுவனத்தின் தலைவர் மதுகர் காமத் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதுதவிர, அவர் இந்திய விளம்பர முகவர்கள் சங்கத்தின் தலைவராகவும், இந்திய விளம்பர தர நிர்ணய கழகத்தின் தலைவராகவும் உள்ளார்.

2. இலண்டனில் நடந்த 21ஆம் நூற்றாண்டு ஐகான் விருதுகள் வழங்கும் விழாவில், 'மகத்தான நிகழ்த்துக்கலை – Magnificent Performing Art' விருதை வென்ற இந்திய பாடகர் யார்?

A) ஸ்ரேயா கோஷல்

**B) சோனு நிகம் ☑**

C) அரிஜித் சிங்

D) சுனிதி சௌகான்



✓ ஆண்டுதோறும் இலண்டனில் நடைபெறும் '21ஆம் நூற்றாண்டு Icon' விருதுகள் வழங்கும் விழாவில், பிரபல ஹிந்தி பின்னணிப் பாடகர் சோனு நிகமுக்கு, 'மகத்தான நிகழ்த்துக்கலை' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவ்விருதுகள், இங்கிலாந்தில் வசித்துவரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழில்முனைவோர்களான தருண் குலாட்டி & பிரீத்தி ராணா ஆகியோரின் சிந்தனையில் உதித்த ஒன்றாகும்.

3. மின்னணு–ரோந்துப் புத்தக (e–beat book) அமைப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ள நகரம் எது?

A) தில்லி

B) சென்னை

C) பெங்களூரு

**D) சண்டிகர் ☑**



✓ மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சண்டிகரில், அவசரகால பதிலளிப்பு அமைப்பு (ERSS – டயல் 112), 'மின்னணு – ரோந்துப் புத்தக' அமைப்பு மற்றும் சண்டிகர் காவல்துறையின் 'E–Saathi' செயலி ஆகிய மூன்று குடிமக்கள் மைய சேவைகளை தொடங்கிவைத்தார். ERSS, குறிப்பாக பெண்கள் மற்றும்

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைக் குறைப்பதில் அல்லது தடுப்பதில் முக்கிய பங்கு வகிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. குடிமக்கள் தங்களின் அவசரகால தகவல்களை அழைப்பு, குறுந்தகவல், மின்னஞ்சல் மற்றும் 112 இந்தியா அலைபேசி செயலி மூலம் அனுப்பலாம்.

✓ 'மின்னணு – ரோந்துப் புத்தகம்' என்பது வலைத்தள மற்றும் அலைபேசி செயலி அடிப்படையிலான ஒரு பயன்பாடாகும். இது, குற்றம் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை நிகழ்நேரத்தில் சேகரித்தல், புதுப்பித்தல் & பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றை எளிதாக்கும். 'E–Saathi' செயலியானது பொதுமக்கள் காவல்துறையுடன் தொடர்பிலிருக்க உதவும் ஒரு முயற்சியாகும்.

**4.** "From Leeches to Slug Glue: 25 Explosive Ideas that Made (and Are Making) Modern Medicine" என்ற நூலின் ஆசிரியர் யார்?




**A) ரூபா பை ☑**

B) அமிஷ் திரிபாதி

C) இரவீந்தர் சிங்

D) சவி சர்மா

✓ "From Leeches to Slug Glue: 25 Explosive Ideas that Made (and Are Making) Modern Medicine" என்ற நூலை எழுத்தாளர் ரூபா பை எழுதியுள்ளார். இந்நூல், அதன் 25 அத்தியாயங்களில் தடுப்பூசி, மயக்க மருந்து, X–கதிர்கள் மற்றும் கிருமிக்கோட்பாடு போன்ற முன்னேற்றங்களை ஆராய்கிறது.

**5.** இணையத்தை பயன்படுத்துவதற்கான உரிமை என்பது அடிப்படை கல்வி உரிமை மற்றும் தனியுரிமைக்கான உரிமை என அண்மையில் தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம் எது?



**A) கேரளா ☑**

B) தில்லி

C) அலகாபாத்

D) ஜபல்பூர்

✓ அரசியலமைப்பின் 21ஆவது பிரிவின்கீழ், இணையத்தை பயன்படுத்துவதற்கான உரிமை என்பது அடிப்படை கல்வி உரிமை மற்றும் தனியுரிமைக்கான உரிமை என கேரள உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. அலைபேசி பயன்படுத்துவதற்கான விதிகளை மீறியதற்காக தன்னை வெளியேறுமாறு கூறிய விடுதியை எதிர்த்து கோழிக்கோட்டைச் சேர்ந்த கல்லூரி மாணவி தாக்கல் செய்த வழக்கில் இந்தத் தீர்ப்பு வந்துள்ளது.

**6.** அண்மைச் செய்திகளில் வெளிவந்த கீழடி, எந்த மாநிலத்தைச்சேர்ந்த வரலாற்றுத் தலமாகும்?

**A) தமிழ்நாடு ☑** B) கேரளா

C) கர்நாடகம் D) ஆந்திர பிரதேசம்

- ✓ "கீழடி, வைகை நதிக்கரையில் சங்ககால நாகரிகம்" என்ற தலைப்பில் தமிழ்நாடு தொல்லியல் துறையால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. பொதுவாக கிமு 300 முதல் கிபி 300 வரை கருதப்படும் பண்டைய சங்ககாலத்தின் வரலாற்றில் இந்த அறிக்கை முக்கிய திருப்புமுனையாகும்.
- ✓ இக்கால கணிப்பு கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்றாம் நூற்றாண்டு வரை வளமையான பண்பாடுகொண்ட பகுதியாக கீழடி விளங்கியிருக்க வேண்டும் எனத்தெரிகிறது. தற்போது கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகள் மூலம் வைகை ஆற்றின்கரையில் நகரமயமாதல், கி.மு. 6ஆம் நூற்றாண்டில் இருந்து தொடங்குகிறது என்பது தெளிவாகிறது.
- ✓ கீழடி அகழ்வாய்வில் கிடைத்த அறிவியல் ரீதியான காலக்கணிப்புகள் தமிழ்–பிராமியின் காலம். மேலும், நூறாண்டுகள் (கி.மு.6ஆம் நூற்றாண்டு) பழமை வாய்ந்தது எனும் முடிவுக்கு நம்மை இட்டுச்செல்கிறது. இதன்மூலம் 2,600 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு எழுத்தறிவுபெற்ற சமூகமாக விளங்கியுள்ளதை நிலைநிறுத்த முடிகிறது.

**7.** சமூக பங்குச்சந்தைகளுக்கான விதிமுறைகளை பரிந்துரைக்கும் SEBI குழுவின் தலைவர் யார்?

A) ஷாமிகா ரவி

B) அமித் சந்திரா

**C) இஷாத் உசேன் ☑**

D) வினீத் ராய்



- ✓ இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (SEBI) அண்மையில் SBI அறக்கட்டளையின் இயக்குநர் இஷாத் உசேன் தலைமையில் சமூக பங்குச் சந்தைகள் (Social Stock Exchanges) குழுவை அமைத்தது. இந்தக் குழு, சமூக நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள், பத்திர சந்தைக் களத்திற்குள் நிதி திரட்டுவதற்கு ஏதுவான கட்டமைப்புகள் மற்றும் வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்து அதன்பின் பரிந்துரைகளை வழங்கும்.

**8.** கிழக்கு இலடாக்கில் சாங்தாங் பிரகார் என்ற அரிய பயிற்சியை நடத்திய இந்திய ஆயுதப்படை எது?

A) இந்திய கடலோர காவல்படை

B) இந்திய கடற்படை

C) இந்திய விமானப்படை

**D) இந்திய இராணுவம் ☑**



- ✓ இந்திய ராணுவம் அதன் போரிடும் திறன்களை பரிசோதிப்பதற்கும் மேம்படுத்துவதற்குமாக சீனத்தின் எல்லையில் உள்ள கிழக்கு இலடாக்கில் அமைந்துள்ள ஓர் உயரமான பகுதியில் 'சாங்தாங் பிரகார்' என்ற பெயரிலான ஒரு பெரிய அரிய பயிற்சியை நடத்தியது. இந்த ஒருங்கிணைந்த பயிற்சியில் காலாட்படை, எந்திரமயமாக்கப்பட்ட படைகள், T–72 டாங்கிகள், பீரங்கி துப்பாக்கிகள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

9.அரசாங்க மருத்துவர்கள் தனியார்துறையில் மருத்துவச் சேவை புரிவதைத் தடைசெய்துள்ள மாநில அரசு எது?

**A) ஆந்திரப் பிரதேசம் ☑**

B) சத்தீஸ்கர்

C) இராஜஸ்தான்

D) ஒடிசா



✓ முன்னாள் மத்திய நலவாழ்வுச் செயலாளர் K சுஜாதா ராவ் தலைமையிலான நலவாழ்வுத் துறையில் சீர்திருத்தங்கள் குறித்து வல்லுநர்கள் குழு அளித்த பரிந்துரைகளுக்கு இணங்க அரசாங்க மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள், தனியார்துறை மருத்துவச் சேவை புரிவதற்கு தடை விதித்து அவர்களின் வருமான இழப்புக்கு ஈடாக சம்பளத்தை அதிகரிக்க ஆந்திர மாநில அரசு முடிவு செய்துள்ளது. ஆந்திரத்தில் அரசாங்க மருத்துவர்கள் தனியார்துறை மருத்துவச் சேவை புரிவதற்கு தடை விதிக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும். பிரிக்கப்படாத ஆந்திரத்தில் 1993 ஏப்ரலில் அப்போதைய முதலமைச்சர் NT இராமா ராவ் ஏற்கனவே இதுபோன்ற ஒரு தடையை கொண்டுவந்தார்.

10. 'பூசா யஷஸ்வி' என்பது எந்தப் பயிரின் புதிய திறன்மிகு வகையாகும்?

A) மக்காச்சோளம்

B) தானியங்கள்

**C) கோதுமை ☑**

D) அரிசி



✓ இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமானது வரவிருக்கும் ராபி பயிர் பருவத்தில் நடவுசெய்வதற்காக பூசா யஷஸ்வி (HD–3266) என்ற புதிய திறன்மிகு கோதுமை வகையை வெளியிட்டுள்ளது. இப்புதிய வகை மற்ற கோதுமை வகைகளுடன் ஒப்பிடும்போது 79.6 குவிண்டால் அதிக விளைச்சல் திறனைக் கொண்டுள்ளது. இது அனைத்து வகையான சொறி நோயையும் தாங்கி வளரும் ஆற்றல் கொண்டது.

✓ HD – 3326, துத்தநாகம் (மில்லியனுக்கு 36.8 பாகங்கள், HD – 3086இல் 34.8 மற்றும் HD –2967இல் 36), புரதம் மற்றும் பசையத்தின் (மாவின் வலிமை மற்றும் நெகிழ்ச்சிக்கு பங்களிக்கிறது) அதிக உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. இதனைக் கொண்டு நல்ல சப்பாத்தி, ரொட்டி மற்றும் பிஸ்கட் போன்றவை தயார் செய்யவியலும்.

## நடப்பு நிகழ்வுகள்

1.அண்மையச் செய்திகளில் இடம்பெற்ற காந்தன் டெக்சென்லிங் மடாலயம், எந்த நாட்டில் அமைந்துள்ளது?



A) கொழும்பு

B) புது தில்லி

**C) உலான் பாடோர் ☑**

D) தர்மசாலா

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மங்கோலிய அதிபர் கல்த்மாகின் பத்துல்காவும் இணைந்து கௌதம புத்தர் சிலையையும் அவரது பிரதான சீடர்கள் சிலைகளையும் திறந்துவைத்தனர். உலான் பாடோர் என்ற இடத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க காந்தன் டெக்சென்லிங் மடாலயத்தில் இந்தச் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன.

✓ காந்தன் டெக்சென்லிங் மடாலயம் மங்கோலிய பௌத்தர்களின் ஒரு மிகமுக்கியமான மையமாகும். பௌத்த பாரம்பரியம்மிக்க பொக்கிஷமாகவும் இது திகழ்கிறது. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்ட இந்த மடாலயம், பொதுவுடைமைவாதிகளின் காலத்தில்கூட பௌத்த சேவைகள் தொடர்ந்து செயல்பட்டு வந்த ஒரே மடாலயம் ஆகும்.

2.இந்தியாவின் முதல் திருநங்கையர் கலைவிழாவை (trans–art) நடத்தும் மாநிலம் எது?



A) தமிழ்நாடு


B) மகாராஷ்டிரா

C) கர்நாடகம்

**D) கேரளா ☑**

✓ இந்தியாவின் முதல் திருநங்கையர் கலைவிழாவை "வர்ணாபகிட்–2019" என்ற பெயரில் கேரளா நடத்தவுள்ளது. அதில், திறமையான திருநங்கைகள் தங்களின் கலை மற்றும் படைப்புத் திறன்களை வெளிப்படுத்துவார்கள். கலைவிழாவின் ஒருபகுதியாக, திரைத்துறை தவிர பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய 10 திருநங்கையர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்க விண்ணப்பிக்கவும் மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது. 2 நாள் நிகழ்வு, நாட்டிலேயே ஒரு மாநில அரசால் திருநங்கைகளுக்காக பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்படும் ஒரு கலை விழாவாக கருதப்படுகிறது.

3. 'Being Gandhi' என்ற நூலின் ஆசிரியர் யார்?




A) தவால் குல்கர்னி

B) அமிர்தா முகர்ஜி

**C) பரோ ஆனந்த் ☑**

D) சஞ்சய் காக்

✓ 'Being Gandhi' என்ற நூலை விருதுபெற்ற எழுத்தாளர் பரோ ஆனந்த் எழுதியுள்ளார். காந்தியை ஒரு தலைவர் என்பதையும் அவரது அரசியலைத் தாண்டியும் அவரது வாழ்க்கை முறையைப் பார்க்கும் வகையில் இந்நூல் உள்ளது. மேலும், மகாத்மா காந்தியின் 150ஆவது ஆண்டு நிறைவைக்குறிக்கும் வகையில் இப்புதிய நூல் எழுதப்பட்டுள்ளது.

**4.**அண்மையச் செய்திகளில் இடம்பெற்ற NEAT திட்டம், எந்தத் துறையுடன் தொடர்புடையது?

**A) கல்வி ☑**



B) விளையாட்டு

C) கலை

D) இதழியல்

✓ மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது தொழில்நுட்பத்திற்கான தேசிய கல்வி கூட்டணி (NEAT) என்னும் ஒரு ஒரு புதிய அரசு–தனியார் கூட்டிணைவுத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. செயற்கை நுண்ணறிவுவைப் பயன்படுத்தி கற்போரின் தேவைகளுக்கு ஏற்ப கற்றலை மேலும் தனிப்பயனாக்கவும் திருத்தியமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்தத் திட்டம் வரும் நவம்பர் மாத தொடக்கத்தில் தனது செயற்பாடுகளைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உயர்கல்வியில் சிறந்த கற்றல் விளைவுகளைப் பெறுவதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசாங்க தளத்தில் சேரும் துளிர் நிறுவனங்கள், பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கண்டிப்பாக 25 சதவீத சலுகைகளை வழங்கவேண்டும்.

**5.**இந்திய விமானப்படையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) சித்தார்த் ஸ்ரீவஸ்தாவா



**B) இராகேஷ் K சிங் பதாரியா ☑**

C) P S சந்தர்

D) நரேந்திர ராஜ்புத்

✓ ரபேல் ஒப்பந்த பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு வகித்த ஏர் மார்ஷல் இராகேஷ் K சிங் பதாரியா, இந்திய விமானப்படையின் அடுத்த தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். விமானப்படையின் தலைமைத்தளபதியாக இருக்கும் B S தனோவாவின் பதவிக்காலம் வரும் செப்டம்பர்.30 அன்று முடிவடையவுள்ளது. வான்படையின் துணைத்தளபதியாக கடந்த மே மாதம் நியமிக்கப்பட்ட பதாரியா, தற்போது வான்படையின் 26ஆவது தலைமைத்தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

6.எந்த நகரத்தில், அதிநவீன தேசிய காவல்துறை பல்கலைக்கழகத்தை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது?

A) டேராடூன்

**B) நொய்டா பெருநகரம் ☑**

C) புனே

D) போபால்



✓ உ.பி மாநிலம் நொய்டா பெருநகரப்பகுதியில் உலகத்தரம்வாய்ந்த தேசிய காவலர் பல்கலைக்கழகத்தை அமைக்க மத்திய உள்துறை அமைச்சகம் முடிவுசெய்துள்ளது. குற்றவியல், தடயவியல் அறிவியல், இணையவெளி சார்ந்த தடயவியல் குற்றவியல், இடர் மேலாண்மை உள்ளிட்ட படிப்புகள் கற்றுத் தரப்படும். காவல்துறை தொடர்பான இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் நடத்தப்படும். இந்தப் பல்கலைக்கழகத்தில் தொலைதூர கல்வி மூலமாக பயிலலாம். கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவித்தொகை வழங்கப்படும்.

7.தியோகா பச்சமி தேவாங்கஞ்ச் – ஹரின்சிங்கா (Deocha Pachami Dewanganj – Harinsingha) நிலக்கரித் தொகுதி அமைந்துள்ள மாநிலம் எது?

A) ஜார்க்கண்ட்

**B) மேற்கு வங்கம் ☑**

C) ஒடிசா

D) திரிபுரா



✓ தியோகா பச்சமி தேவாங்கஞ்ச் – ஹரின்சிங்கா நிலக்கரித் தொகுதிக்காக மேற்கு வங்க மின்சார மேம்பாட்டுக் கழகத்துடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இது உலகின் இரண்டாவது பெரிய தொகுதி ஆகும். இத்திட்டம் மேற்கு வங்க மாநிலத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் கணிசமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். மேலும், பிராந்தியத்தின் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கும் இது பங்களிக்கும்.

8. டிஜிட்டல் பேமெண்ட் அபியானுக்காக எந்நிறுவனத்துடன் நடுவணரசு கூட்டிணைந்துள்ளது?

A) பேஸ்புக்

B) டுவிட்டர்

**C) கூகிள் ☑**

D) மைக்ரோசாப்ட்

✓ 'Digital Payment Abhiyan' என்ற ஒரு நாடு தழுவிய விழிப்புணர்வு பரப்புரையைத் தொடங்குவதற்காக நாஸ்காமின் தரவுப் பாதுகாப்புக் கழகமானது அண்மையில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் கூகிள் இந்தியாவுடன் இணைந்துள்ளது.

- ✓ இந்தப் பரப்புரை, பயனர்களுக்கு டிஜிட்டல் முறையில் கட்டணம் செலுத்துவதன் நன்மைகள் குறித்து அறிவுறுத்துவதோடு, பாதுகாப்பின் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுமாறு பொதுமக்களை வலியுறுத்தவும் செய்யும். நாடு தழுவிய இந்தப் பரப்புரை தமிழ், தெலுங்கு, கன்னடம், பெங்காலி, இந்தி, ஆங்கிலம் மற்றும் மராத்தி ஆகிய ஏழு மொழிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

9. 3–8ஆம் வகுப்பு வரையில் அனைத்து பள்ளிகளிலும் சமற்கிருதத்தை கட்டாயமாக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?

**A)** உத்தரகண்ட் ☑

B) ஹிமாச்சல பிரதேசம்

C) மத்திய பிரதேசம்

D) சத்தீஸ்கர்

- ✓ 3–8ஆம் வகுப்பு வரையில் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் சமற்கிருத மொழியை கட்டாயமாக்க உத்தரகண்ட் மாநில அரசு முடிவு செய்துள்ளது. மதிப்பீடுகளின்படி, மாநில மக்களில் 89 சதவீதத்துக்கும் அதிகமானோர் இந்தி (45%), கர்வாலி (23.03), குமாவோன் (19.94%) மற்றும் ஜன்சாரி (1.35%) உள்ளிட்ட நான்கு மொழிகளைப் பேசுகிறார்கள். முக்கிய பிராந்திய மொழிகளான குமாவோன் மற்றும் கர்வாலியை ஐ.நா கல்வி, அறிவியல் & கலாசார அமைப்பு (UNSECO) அருகிவரும் மொழிகளாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

10. 2022 பெய்ஜிங் குளிர்கால பாராலிம்பிக்குக்கான அதிகாரப்பூர்வ சின்னம் எது?

**A)** பிங் டுவென் டுவென் (Bing Dwen Dwen) ☑



B) ஷுயெ் ரோன் ரோன்

C) ஆசிய கருப்புக்கரடி

D) பிங் கியுன்–சுக்

- ✓ 2022 மார்ச் 4–13 வரை சீன மக்கள் குடியரசின் பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள 2022 பெய்ஜிங் குளிர்கால பாராலிம்பிக்கின் அதிகாரப்பூர்வ சின்னமாக "ஷுயெ் ரோன் ரோன்" உள்ளது. 'Bing' என்பது பனியையும் தூய்மையையும் வலிமையையும், 'Dwen Dwen' என்பது குழந்தைகளையும் குறிக்கிறது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாட்டில், 95 சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் புதிய திட்டப்பணிகளை, உட்கட்டமைப்பு, நிதி மேலாண்மை கழகம் தொடங்கியுள்ளது. இதில், அதிகபட்சமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 11 இடங்கள், சென்னை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் தலா 7 இடங்கள் என மொத்தம் 95 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

# நடப்பு நிகழ்வுகள்

1.எந்த நகரத்தில், ஐ.நா பொது அவையின் 74ஆவது அமர்வு தொடங்கியுள்ளது?

A) ஜெனிவா

**B) நியூயார்க் ☑**

C) கோபன்ஹேகன்

D) பெர்லின்



✓ நியூயார்க்கில், பிரதமர் நரேந்திர மோடி ஐ.நா பொது அவையின் 74ஆவது அமர்வில் உரையாற்றினார். மேலும், பிற பலதரப்பு மற்றும் இருதரப்பு நடவடிக்கைகளிலும் அவர் பங்கேற்றார். மோடி, உலகளாவிய சுகாதார காப்பீடு தொடர்பான முதல் உயர்நிலைக் கூட்டத்தில் உரையாற்றினார்; இது அனைவருக்கும் மலிவான, உள்ளடக்கிய மற்றும் நெகிழ்திறன்மிக்க நலவாழ்வு அமைப்புகளுக்கு அணுகலை வழங்கக் கூடிய புதிய முயற்சிகளைத்தொடங்கும்.

2.நடப்பாண்டின் சர்வதேச சைகை மொழிகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Sign Language for Peace

B) With Sign Language, Everyone is Included

C) Sign Language for Deaf

**D) Sign Language Rights for All ☑**




✓ காது கேளாதோரின் மனித உரிமைகளை முழுமையாக உணர்ந்துகொள்வதில் சைகை மொழியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.23 அன்று சர்வதேச சைகை மொழிகள் நாள் (International Day of Sign Languages) அனுசரிக்கப்படுகிறது. "Sign Language Rights for All" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

3.உலக குத்துச்சண்டை சாம்பியன்சிப்பின் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற முதல் இந்திய குத்துச் சண்டை வீரர் யார்?

A) முகமது அலி காமர்

B) கௌரவ் சோலங்கி

**C) அமித் பங்கல் ☑**

D) தினேஷ் குமார்



✓ இரஷ்யாவின் எகடெரின்பர்க்கில் நடந்த AIBA ஆடவர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில், இந்திய குத்துச்சண்டை வீரர் அமித் பங்கல் வெள்ளி வென்றார். பிளைவெயிட் (48-52 கிலோ) பிரிவில், உஸ்பெகிஸ்தானின் ஷாகோபிடின் சோயிரோவிடம் அவர் வீழ்ந்தார். இருப்பினும், சாம்பியன்ஷிப்பின் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற முதல் இந்திய குத்துச்சண்டை வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். அவர், ஏற்கனவே 2020 டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்றுள்ளார்.


4.அண்மையில் காலமான மாதவ் ஆப்தே, எந்த விளையாட்டில் புகழ்பெற்ற வீரராக இருந்தார்?

A) சதுரங்கம்

B) கால்பந்து

**C) கிரிக்கெட் ☑**

D) ஹாக்கி



✓ முன்னாள் கிரிக்கெட் வீரர் மாதவ்ராவ் லக்ஷ்மன்ராவ் ஆப்தே (86), மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் செப்.23 அன்று காலமானார். கடந்த 1952இல் மும்பையில் நடந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான தகுதிகாண் போட்டியில் மாதவ் அறிமுகமனார். தொடர்ந்து கடந்த 1953இல் கிங்ஸ்டனில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தகுதிகாண் போட்டியில் மாதவ் கடைசியாக பங்கேற்றார். இவர் இந்திய கிரிக்கெட் அணிக்காக 7 தகுதிகாண் போட்டியில் பங்கேற்று, 542 இரன்கள் எடுத்துள்ளார்.


5. "Girl Power: Indian Women Who Broke the Rules" என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) பரோ ஆனந்த்

B) ரூபா பாய்

C) அமிஷ் திரிபாதி

**D) நேகா J ஹிராநந்தனி ☑**




✓ "Girl Power: Indian Women Who Broke the Rules" என்ற நூலை நேகா J ஹிராநந்தனி எழுதியுள்ளார். இது குறிப்பிடத்தக்க 50 பெண்களின் போராட்டங்கள் மற்றும் சாதனைகள் பற்றிய விவரங்களை அளிக்கிறது. இந்நூலில் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற P V சிந்து போன்ற சமகால மகளிர் பற்றியும், தனியொருவளாக நின்று போர்த்துகீசியர்களை ஆறுமுறை தோற்கடித்த சௌதா வம்சத்தின் போர் வீராங்கனை இராணி அப்பக்கா போன்ற வரலாற்று மகளிர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'ரிவால்வர் தாதி' எனப் பிரபலமாக அறியப்படும் சந்திரோ தோமரின் வாழ்க்கையைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

6. 2019 ஆசிய ஆடவர் கைப்பந்து சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற நாடு எது?

A) ஆஸ்திரேலியா

B) இந்தியா

C) பாகிஸ்தான்

**D) ஈரான் ☑**



✓ தெஹ்ரானில் உள்ள ஆசாதி விளையாட்டு வளாகத்தில் நடந்த போட்டியில், ஆஸ்திரேலியாவை நேர் செட்களில் தோற்கடித்து நடப்பாண்டின் ஆசிய ஆண்கள் கைப்பந்து (volleyball) சாம்பியன்சிப் பட்டத்தை ஈரான் வென்றது.

7.எந்நோய்க்கு எதிராக போராடுவதற்காக தில்லி அரசு சமீபத்தில், "சாம்பியன்ஸ் பரப்புரை"யை தொடங்கியது?

**A) டெங்கு ☑**

B) மலேரியா

C) சிக்குன்குனியா

D) ஜப்பானிய மூளைக்காய்ச்சல்



✓ தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சமீபத்தில் டெங்குவுக்கு எதிரான ஒரு போராட்டமாக தேசிய தலைநகரத்தில் "சாம்பியன்ஸ் பரப்புரை"யை தொடங்கியுள்ளார். வீடுகளைச் சுற்றி கொசுப்புழுக்கள் உள்ளனவா? எனச் சரிபார்க்கவும், வீடுகளைச் சுற்றி தேங்கிநிற்கும் தண்ணீரை சுத்தம் செய்யவும் பொதுமக்கள் தங்கள் சுற்றங்களை ஊக்குவிக்குமாறு அவர் அப்போது கேட்டுக்கொண்டார். குடிமக்கள் உடனடியாக தங்களுக்குத் தெரிந்த 10 நண்பர்களை அணுகி, அவர்களது வீடுகளைச் சுற்றி டெங்கு அறிகுறிகள் உள்ளதா என சரிபார்க்கும்படி கேட்கவேண்டும் என இப்பரப்புரை ஊக்கப்படுத்துகிறது.

8.இந்தியாவின் சார்பாக 2020ஆம் ஆண்டு ஆஸ்கர் விருதுக்கு அதிகாரப்பூர்வமாக தெரிவு செய்யப்பட்ட திரைப்படம் எது?

A) ஆர்ட்டிக்கிள் 15

**B) கல்லி பாய் (Gully Boy) ☑**

C) கேசரி

D) பதாய் ஹோ




✓ இயக்குநர் சோயா அக்தரின் திரைப்படமான 'கல்லி பாய்', 92ஆவது அகாடமி விருதுகளுக்கு (ஆஸ்கர் 2020) சிறந்த அயல்மொழி திரைப்பட (Best Foreign Language Film) பிரிவில் போட்டியிடுவதற்காக, இந்தியாவின் சார்பாக அதிகாரப்பூர்வமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படம், மும்பையின் சொல்லிசைக் கலைஞர்களின் கதையை விவரிக்கிறது. மேலும், சொல்லிசைக் கலைஞர் நெய்சியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது.

9.2019 C40 உலக மாநகரத் தலைவர்கள் (Mayors) உச்சிமாநாடு நடைபெறவுள்ள நகரம் எது?

A) ஜெனிவா

B) நியூயார்க்

**C) கோபன்ஹேகன் ☑**

D) பெர்லின்




✓ டென்மார்க்கின் கோபன்ஹேகன் நகரத்தில் நடைபெறவுள்ள C40 உலக மாநகரத் தலைவர்கள் உச்சிமாநாட்டில் பங்கேற்க அடுத்தமாதம் தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் செல்லவுள்ளதாகவும்,

அந்த மாநாட்டில் தில்லியில் காற்றுமாசைக் குறைக்க மேற்கொள்ளப்பட்ட வாகனக் கட்டுப்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்து அவர் பேசவுள்ளதாகவும் தில்லி அரசு தெரிவித்துள்ளது.

✓ வரும் அக்.9–12 வரை நடைபெறும் இந்த மாநாட்டில் நியூயார்க், இலண்டன், பாரிஸ், இலாஸ் ஏஞ்சல்ஸ், பெர்லின் உள்ளிட்ட பெருநகரங்களில் இருந்து தலைவர்கள் பங்கேற்று, பருவகால நெருக்கடி குறித்து உரையாற்றவுள்ளனர்.

10.மத்திய பிரதேசத்தின் விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) சச்சின் டெண்டுல்கர்

B) சந்தீப் சிங்

**C) கோவிந்தா ☑**

D) ஆஷா போஸ்லே



✓ மத்திய பிரதேச மாநிலத்தின் பாரம்பரியத்தையும் சுற்றுலாத் தலங்களையும் பிரபலப்படுத்துவதற்காக திரைப்பட நடிகர் கோவிந்தா அதன் விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். மாநிலத்தின் பாரம்பரியங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் பற்றிய தகவல்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே அம்மாநில அரசின் நோக்கமாக உள்ளது. மேலும், மாநிலத்தில் ஒரு திரைப்பட நகரத்தை உருவாக்கவும், மத்திய பிரதேச மாநிலத்தை திரைப்படங்கள் தயாரிப்பிற்கான இடமாக மேம்படுத்தவும் கமல்நாத் அரசு திட்டமிட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப்பல்கலைக்கழகத்துக்கு, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு கடந்த 2013இல் சட்டம் இயற்றப்பட்டு, அதே ஆண்டு நவம்பர்.14இல் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

✓ எண்ணைய் வித்து பயிர்களின் சாதனைக்காக 2017–18ஆம் ஆண்டின் "கிருஷி கர்மான்" விருது, தமிழ்நாடு அரசுக்கு ஐந்தாவது முறையாக கிடைத்துள்ளது.

✓ மூன்றாவது 'உலகத்தமிழ் தொழிலதிபர்கள் மற்றும் திறனாளர்கள் மாநாடு' வரும் நவ.14–16 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ளது.

✓ உலகத்தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம் சார்பில் 3 நாட்கள் நடைபெறும் 18ஆவது இணைய தமிழ் மாநாடு, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் செப்.20 அன்று தொடங்கியது. முதல்நாள் விழாவில், தமிழ் மென்பொருள் உருவாக்குநர்களான மறைந்த ஆன்டோபீட்டர், மறைந்த தகடூர் கோபி ஆகியோருக்கு "தமிழ் கணிமை முன்னோர்" விருது வழங்கப்பட்டது.

✓ தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக தூத்துக்குடி மாவட்டத்துக்கு 'முத்து மாவட்டம்' என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலி மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து துறை சார்பில் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்து மக்கள் அறிந்துகொள்ளலாம்.

## நடப்பு நிகழ்வுகள்

**1.** உலகின் முதல் ஒட்டக மருத்துவமனை அமைந்துள்ள நகரம் எது?



A) தெகுரான்

B) ஜெய்ப்பூர்


**C) துபாய் ☑**

D) பிகானேர்

✓ துபாயில் அமைந்துள்ள உலகின் முதல் ஒட்டக மருத்துவமனையானது அதன் சேவைகளுக்கான தேவை அதிகரிப்பிற்கு பதிலளிக்கும் விதமாக அதன் வசதிகளை கூடுதலாக 50% வரை விரிவுபடுத்த உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக வளர்ந்துவரும் ஒட்டகம் சார்ந்த தொழிலின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு தனித்துவமான மருத்துவமனையாகும் இது.

✓ ஒட்டக மருத்துவத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதே இந்த மருத்துவமனையின் நோக்கமாகும். ஒட்டகங்கள் ஐக்கிய அரபு அமீரக (UAE) பாரம்பரியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். வரலாற்று ரீதியாக, 'பாலைவனத்தின் கப்பல்' என்று அழைக்கப்படும் ஒட்டகங்கள் அந்நாட்டின் போக்குவரத்துக்கு ஆதாரமாகவும், அப்பகுதியின் உணவு மற்றும் பால் தேவைக்கான மூலமாகவும் உள்ளன.

**2.** பின்வரும் எந்தக் காரணத்துடன் UMMID திட்டம் தொடர்புடையது?




A) முதியோர் தொடர்பான பிரச்சனைகள்

**B) பச்சிளங்குழந்தைகளின் மரபணு நோய்கள் ☑**

C) நீரினால் பரவும் நோய்கள்

D) மாசு தொடர்பான நோய்கள்

✓ பச்சிளங்குழந்தைகளில் மரபணு சார்ந்த நோய்களைக் கையாள்வதற்காக, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் நலவாழ்வுத் துறை அமைச்சர் Dr.ஹர்ஷ் வர்தன் அண்மையில், 'UMMID' (Unique Methods of Management and treatment of Inherited Disorders – மரபுவழிக் குறைபாட்டு நோய்களின் மேலாண்மை & சிகிச்சையின் தனித்துவமான முறைகள்) என்னும் திட்டத்தைத் தொடங்கினார்.

✓ இப்புதிய திட்டத்தின் நோக்கம் மருத்துவர்களிடையே மரபணுக் கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மருத்துவமனைகளில் மூலக்கூறு கண்டறியும் முறைகளை நிறுவுவதும் ஆகும். இதனால், மரபியல் மருத்துவ வளர்ச்சியின் நன்மைகள் நோயாளிகளை சென்றடையக்கூடும்.

**3.** தாமஸ் குக் திவாலானதையடுத்து தனது மிகப்பெரிய அமைதிக்கால நடவடிக்கையைத் தொடங்கிய நாடு எது?

Thomas Cook

A) பிரான்ஸ்

B) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**C) ஐக்கியப் பேரரசு (UK) ☑**

D) ஜெர்மனி

✓ செப்.23 அன்று பிரிட்டிஷ் பயண நிறுவனமான தாமஸ் குக் திவாலானதை அடுத்து, இங்கிலாந்து அரசாங்கம் தனது வரலாற்றிலேயே மிகப்பெரியதான 'Operation Matterhorn' என்னும் தாயகத்துக்கு மீட்டுக் கொண்டு வருதல் நிகழ்வைத் தொடங்கியுள்ளது. அந்நிறுவனத்தின் மூலம் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலா சென்றுள்ள ஆறு இலட்சம் பயணிகள் நடுவழியில் சிக்கித் தவிக்கின்றனர். மேலும், தாமஸ் குக் நிறுவனத்தின் 22,000 ஊழியர்கள் ஒரே இரவில் வேலை இழந்துள்ளனர். இந்தப் பயண நிறுவனம் 1841ஆம் ஆண்டில் தாமஸ் குக் என்பவரால் நிறுவப்பட்டது.

**4.** நடப்பாண்டின் சர்வதேச அமைதி நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Stand-Up For International Peace

B) Partnerships for Peace – Dignity for All

**C) Climate Action for Peace ☑**

D) Together for Peace: Respect, Safety and Dignity for All




✓ அனைத்து நாட்டு மக்களிடையேயும் அமைதிக்கான கொள்கைகளை நினைவுகூருவதற்காகவும் வலுப்படுத்துவதற்காகவுமாக ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.21 அன்று சர்வதேச அமைதி நாள் அனுசரிக்கப்படுகிறது. உலகெங்கிலும் அமைதியைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான ஒரு வழியாக, காலநிலை மாற்றத்தை எதிர்ப்பதன் முக்கியத்துவத்தை கவனத்தில் கொள்வதே "Climate Action for Peace" எனும் நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளின் நோக்கமாக உள்ளது.

**5.** சமீபத்தில் காலமான S K பத்மாதேவி, எந்தப் பிராந்திய திரையுலகில் புகழ்பெற்ற நடிகையாக இருந்தார்?

A) தமிழ்

B) தெலுங்கு

C) ஒடியா

**D) கன்னடம் ☑**



✓ மூத்த நடிகையும் பன்முக கலைஞருமான S K பத்மாதேவி (95), செப்.19 அன்று கர்நாடக மாநிலம் பெங்களூருவில் காலமானார். HLN சிம்ஹா மற்றும் பல்லாரி இராகவாச்சார்யா ஆகியோரின் நாடகங்களில் 1960களின் பிற்பகுதி வரை அவர் சுறுசுறுப்பாக இருந்தார். பின்னர் அகில இந்திய வானொலியில் சேர்ந்த அவர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒலிவடிவ நாடகங்களில் பணியாற்றினார். 2016இல் கர்நாடக சலஞ்சித்ரா அகாடமியால் வாழ்நாள் சாதனையாளர்களுக்கான R. நாகேந்திர ராவ் விருது பத்மாதேவிக்கு வழங்கப்பட்டது.

**6.** கின்னஸ் புத்தகத்தில் மிகப்பெரிய நடனமாக இடம்பிடித்து வரலாற்றுச் சாதனை புரிந்துள்ள ஷொண்டோல் நடனம் எந்த நகரத்தைச் சார்ந்ததாகும்?

A) உதய்பூர்

**B) இலடாக் ☑**

C) கொச்சி

D) சிம்லா

- ✓ ஆண்டுதோறும் நடைபெறும் 'நரோபா' திருவிழாவின்போது 408 பெண் கலைஞர்கள் நிகழ்த்திய லடாக்கின், 'ஷொண்டோல்' நடனமானது உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது. 'நரோபா திருவிழா' என்பது இலடாக்கில் உள்ள 11ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த உலகப்புகழ்பெற்ற ஹெமிஸ் மடாலயத்திற்கு அருகே நடந்துவரும் ஒரு பௌத்த மதத்திருவிழாவாகும்.
- ✓ 'ஷொண்டோல்' என்பது லடாக் மன்னர் காலத்து பாரம்பரிய நடனமாகும். சிறப்பு நிகழ்ச்சிகளின்போது இலடாக் மன்னரைப் புகழ்வதற்காக பெண் நடனக்கலைஞர்களால் இந்த நடனம் நிகழ்த்தப்படுகின்றது.

**7.**தேசிய மின்னணு–மதிப்பீட்டு மையத்தின் (NeAC) வருமான வரிக்கான புதிய முதன்மைத் தலைமை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) P S ஜோஷி

B) M S முட்கல்

**C) K M பிரசாத் ☑**

D) T K சர்மா

- ✓ வரும் அக்டோபர் 2019 முதல் வருமானவரி செலுத்துவோருக்கு அடையாளமற்ற (faceless & nameless) மதிப்பீட்டைத் தொடங்குவதற்கான அரசாங்கத்தின் இலட்சியத் திட்டத்தின் ஒருபகுதியாக தேசிய மின்னணு–மதிப்பீட்டு மையத்தை (**N**ational **e**–**A**ssessment **C**entre – **NeAC**) தேசிய தலைநகரில், மத்திய நேரடி வரி வாரியம் அமைத்துள்ளது. 1984ஆம் ஆண்டுப் பிரிவின் இந்திய வருவாய் சேவை அதிகாரியான K M பிரசாத், இந்தப் புதிய மையத்தின் வருமானவரிக்கான முதன்மைத் தலைமை ஆணையராக (Principal Chief Commissioner of Income–tax) நியமிக்கப்பட்டுள்ளார்.

**8.**எந்த மாநிலத்தின் சுற்றுலாத் துறை, பெண்கள் நடத்தும் ஓர் இனக்குழு உணவுகள் சார்ந்த உணவகத்திற்காக PATA தங்க விருதை வென்றுள்ளது?

A) மகாராஷ்டிரா

**B) கேரளா ☑**

C) திரிபுரா

D) ஒடிசா

- ✓ கஜகஸ்தானில் உள்ள நூர்–சுல்தானில் (அஸ்தானா) நடந்த நிகழ்வில், கேரள சுற்றுலாத்துறையானது மூன்று மதிப்புமிக்க பசிபிக் ஆசிய பயண சங்கத்தின் (PATA) தங்க விருதுகளை வென்றுள்ளது. கேரள சுற்றுலாத் துறையின் பொறுப்புமிக்க சுற்றுலா திட்டத்தின்கீழ், குமாரகமில் பெண்களால் நடத்தப்பட்டு வரும் ஓர் இனக்குழு உணவுகள் சார்ந்த உணவகத்திற்காகவும், கேரள சுற்றுலாவின் 'Come out and Play' என்ற விளம்பர பரப்புரைக்காகவும், அதன் வலைத்தளத்திற்காகவும் (www.keralatourism.org) கேரள சுற்றுலாத்துறை விருதுகளை வென்றது.
- ✓ விளம்பர பரப்புரையை ஸ்டார்க் கம்யூனிகேஷன் நடத்தியது. கேரள சுற்றுலாத் துறையின் வலைத் தளத்தை Invis மல்டிமீடியா என்னும் நிறுவனமும் வடிவமைத்து பராமரித்து வருகிறது.

9.இந்தியாவும் எந்த நாடும் இணைந்து, 'Tiger Triumph' என்னும் தங்களின் முதல் முப்படைப் பயிற்சியை நடத்தவுள்ளன?

**A) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**



B) ஐக்கியப் பேரரசு

C) பிரான்ஸ்

D) போலந்து

✓ இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து வரும் நவம்பரில் விசாகப்பட்டினம் மற்றும் காக்கிநாடாவில் 'Tiger Triumph' என்ற குறியீட்டுப் பெயரில் தங்களின் முதல் முப்படை இராணுவப் பயிற்சியை நடத்த உள்ளன. ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமையகத்தின் தலைமையில் இந்தப் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

10.இதழியலுக்கான முதல் கௌரி லங்கேஷ் தேசிய விருதை வென்ற பிரபல இதழாளர் யார்?

A) இராஜ்தீப் சர்தேசாய்



B) கரண் தபார்

C) பிரனாய் ராய்

**D) இராவிஷ் குமார் ☑**

✓ மூத்த இதழாளரும், இரமோன் மகசேசே விருது பெற்றவருமான இராவிஷ்குமார், அண்மையில், பெங்களூரில் நடந்த ஒரு நிகழ்வில், விடுதலைப் போராட்ட வீரர் H S தொரஸ்வாமி அவர்களிடமிருந்து இதழியலுக்கான முதல் கௌரி லங்கேஷ் தேசிய விருதைப் பெற்றுக்கொண்டார். நேர்மையான செய்தி பகுப்பாய்வு மற்றும் சமரசமற்ற மதச்சார்பற்ற நிலைப்பாட்டிற்காக கௌரி லங்கேஷ் நினைவு அறக்கட்டளையானது அவரை இந்த விருதுக்கு தேர்ந்தெடுத்துள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்


**1.** அண்மையில் எந்த சர்வதேச அமைப்பின் தலைமையகத்தில், 'காந்தி சூரிய ஆற்றல் பூங்கா' திறக்கப்பட்டது?

A) சர்வதேச நாணய நிதியம்

B) ஐரோப்பிய ஒன்றியம்

**C) ஐக்கிய நாடுகள் அவை ☑**

D) உலக நலவாழ்வு அமைப்பு




- ✓ நியூயார்க்கில் உள்ள ஐ.நா. அவை கட்டடத்தின் மேற்கூரையில், இந்தியா சார்பில் அமைக்கப்பட்ட 'காந்தி சூரிய ஆற்றல் பூங்கா' மற்றும் நியூயார்க் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட 'காந்தி அமைதிப்பூங்கா' ஆகியவற்றை உலக நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து பிரதமர் மோடி செப்.24 அன்று திறந்துவைத்தார். மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சிறப்பு அஞ்சல்தலையையும் ஐ.நா. அவை வெளியிட்டது.
- ✓ 'தூய்மை இந்தியா' திட்டத்திற்காக பிரதமர் மோடிக்கு, 'குளோபல் கோல்கீப்பர்' விருது வழங்கப்பட்டது. இவ்விருதை மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்ஸின் தொண்டு நிறுவனமான பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை வழங்கி கௌரவித்தது.

**2.** நடப்பாண்டின் தாதாசாகேப் பால்கே விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

A) ராஜ்குமார் ஹிரானி

B) லதா மங்கேஷ்கர்

C) சஞ்சய் லீலா பன்சாலி

**D) அமிதாப்பச்சன் ☑**



- ✓ திரைத்துறையில் சிறப்பான பங்களிப்பு செய்தமைக்காக நடப்பாண்டுக்கான மதிப்புமிக்க 'தாதாசாகேப் பால்கே விருது'க்கு நடிகர் அமிதாப்பச்சன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்த விருது, இந்திய திரைத் துறையில் வழங்கப்படும் மிகவுயர்ந்த விருதாகும். திரைத்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் சிறப்பான பங்களிப்பு செய்த ஒருவருக்கு இந்திய அரசால் இவ்விருது வழங்கப்படுகிறது.
- ✓ ஒரு தங்கத்தாமரை மற்றும் ₹.10 இலட்சம் ரொக்கப்பரிசு ஆகியவற்றை இவ்விருது கொண்டுள்ளது. தனது 50 ஆண்டுகால திரைத்துறை வாழ்க்கையில், 4 முறை சிறந்த நடிகருக்கான தேசிய விருதை அவர் பெற்றிருக்கிறார்.

**3.** 'அபோனர் அபன் கர்' என்னும் வீட்டுக்கடன் மானிய திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**A) அஸ்ஸாம் ☑** B) ஒடிசா

C) ஜார்க்கண்ட் D) மேற்கு வங்கம்

✓ அஸ்ஸாம் மாநில அரசானது கௌகாத்தியில் 'அபோனர் அபன் கர்' என்ற வீட்டுக்கடன் மானிய திட்டத்தை அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின் மூலம், ஒரு குடும்பம் தனக்கான முதல் வீட்டை வாங்கவோ அல்லது கட்டவோ எண்ணினால் அந்தக் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

✓ ₹5–40 இலட்சம் வரையிலான கடன்தொகைக்கு ₹2.5 இலட்சம் வரையிலும் மானியம் வழங்கப்படும். இந்நடவடிக்கை, வீட்டுத்தேவையை அதிகரிக்கும் மற்றும் மாநிலத்தில் ரியல் எஸ்டேட் தொழில் துறையின் விரிவாக்கத்திற்கும் வழிவகுக்கும்.

4. 25ஆவது சீனியர் பெண்கள் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப்பை வென்ற மாநிலம் எது?

A) பஞ்சாப்

**B) மணிப்பூர் ☑**

C) அருணாசல பிரதேசம்

D) சத்தீஸ்கர்




✓ நடப்புச் சாம்பியனான மணிப்பூர் அணி 25ஆவது சீனியர் பெண்கள் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியை 20ஆவது முறையாக வென்றுள்ளது. பசிகாட்டில் (அருணாச்சலபிரதேசம்) உள்ள களத்தில் நடந்த பரபரப்பான இறுதிப்போட்டியில், மணிப்பூர் அணி 1–0 என்ற கோல் கணக்கில் இரயில்வே அணியை வீழ்த்தியது. பாலாதேவி, போட்டியில் அதிக மதிப்பெண் பெற்றவராக உள்ளார். 'சிறந்த கோல் கீப்பர்' மற்றும் 'மிகவும் மதிப்புமிக்க வீராங்கனை' ஆகிய விருதை முறையே மணிப்பூரின் எலங்பம் பந்தோய் சானு மற்றும் இரயில்வே அணியின் சஞ்சு ஆகியோர் வென்றனர்.

5. இராகுல் அவேர், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) டென்னிஸ்

B) பாட்மிண்டன்

**C) மல்யுத்தம் ☑**

D) குத்துச்சண்டை



✓ கஜகஸ்தானில் உள்ள நூர் – சுல்தானில் நடைபெற்ற 2019 உலக சாம்பியன்ஷிப்பில், இந்திய மல்யுத்த வீரர் இராகுல் அவேர் ஆண்கள் 61 கிலோ 'பிரீ – ஸ்டைல்' பிரிவில் வெண்கலம் வென்றுள்ளார். இருப்பினும், இது ஒலிம்பிக் போட்டி வகையைச் சாராது என்பதால் இதில்பெற்ற வெண்கலம் அவருக்கு டோக்கியோ விளையாட்டுக்குத் தகுதிபெற உதவவில்லை.

✓ உலக சாம்பியன்ஷிப்பின் இப்பதிப்பில், மொத்தம் 1 வெள்ளி மற்றும் 4 வெண்கலங்களுடன் இந்தியா இதுவரை ஐந்து பதக்கம் பெற்றுள்ளது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் இப்போட்டிகளில், ஆண்கள் 86 கிலோ பிரிவில், தீபக் புனியா காயம் காரணமாக இறுதிப்போட்டியிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது; அதன் காரணமாக அவருக்கு வெள்ளிப்பதக்கம் மட்டுமே கிடைத்தது.

6. 'ஸ்வச்சதா ஹி சேவா' அபியானை தொடங்கியுள்ள மாநில அரசு எது?



**A) மத்திய பிரதேசம் ☑**

B) உத்தர பிரதேசம்


C) ஹிமாச்சல பிரதேசம்

D) அருணாச்சல பிரதேசம்

✓ ஒற்றைப்பயன்பாடுடையை நெகிழிகளுக்கு எதிராக செப்.25 – அக்.25 வரை ஒரு மாதகாலம் நீளும் 'ஸ்வச்சதா ஹி சேவா' அபியானை மத்திய பிரதேச அரசு தொடங்கியுள்ளது. சந்தைகள், வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் ஆகியவற்றில் ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழிகள் மற்றும் தரமற்ற பாலித்தீன் ஆகியவற்றின் பயன்பாட்டை அகற்றுவதோடு அதற்கான மாற்றுகளை பயன்படுத்த இந்தப் பரப்புரை ஊக்குவிக்கும்.

✓ ஒற்றைப் பயன்பாடு கொண்ட நெகிழிப்பயன்பாட்டுக்கு எதிராக குறைந்தது 50 இலட்சம் குடிமக்களை உறுதியேற்கச் செய்வதே இப்பரப்புரையின் நோக்கமாகும். இப்பரப்புரையின் மூலம், இரண்டு கோடி நகர்ப்புற பொதுமக்களை அடைவதற்கு அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது; இதனால் நெகிழிப் பயன்பாடற்ற நகரத்தை உருவாக்கவும் நெகிழியில்லா தீபாவளியைக் கொண்டாடவும் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முடியும். இப்பரப்புரையின்போது, துணிப்பைகளை பயன்படுத்துவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

7. அகில பாரதீய மராத்தி சாகித்திய சம்மேளனத்தின் 2020ஆம் ஆண்டுக்கான தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளவர் யார்?



A) இராமையா தரிபள்ளி

B) ஜாதவ் பயெங்

**C) பிரான்சிஸ் டி' பிரிட்டோ ☑**

D) சாலுமாராதா திம்மக்கா

✓ எழுத்தாளரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான கத்தோலிக்க பாதிரியார் அருட்தந்தை பிரான்சிஸ் டி' பிரிட்டோ அகில பாரதீய மராத்தி சாகித்திய சம்மேளனத்தின் 2020ஆம் ஆண்டுக்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கிறிஸ்தவராவார் இவர். அருட்தந்தை பிரான்சிஸ் டி' பிரிட்டோ, கத்தோலிக்க திருச்சபையைத் தாண்டி மக்களுக்கு சேவை செய்வதில் பெயர் பெற்றவராவார்.

8. 2019 SASTRA இராமானுஜன் பரிசு பெற்ற ஆடம் ஹார்பர், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?




A) போலந்து

**B) ஜெர்மனி ☑**

C) இங்கிலாந்து

D) இத்தாலி

- ✓ நடப்பாண்டுக்கான சாஸ்த்ரா – இராமானுஜன் விருதுக்கு இங்கிலாந்தின் வார்விக் பல்கைலக்கழக எண்ணியல் பேராசிரியர் முனைவர் ஆடம் ஹார்பர் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இவர் பகுப்பாய்வு, நிகழ் தகவு எண் கோட்பாட்டில் மிகச்சிறந்த பங்களிப்பு அளித்து வருகிறார். இராமானுஜத்தின் தாக்கத்தால் கணிதவியல் ஆய்வில் மிகச்சிறந்த பங்களித்து வரும் 32 வயதுக்குட்பட்ட இளைஞருக்கு சாஸ்த்ரா – இராமானுஜன் விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

- ✓ சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் கும்பகோணம் வளாகத்தில் இராமானுஜனின் பிறந்த நாளான டிச.22 அன்று நடைபெறவுள்ள பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் ஆடம் ஹார்பருக்கு $10,000 அமெரிக்க டாலருடன் கூடிய இந்த விருதுடன் சான்று வழங்கப்படவுள்ளது.

9.அண்மையில் காலமான பகத் ராம் வாட்ஸ், எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?

**A) இதழியல் ☑**

B) விளையாட்டு

C) அரசியல்

D) அறிவியல்



- ✓ இந்தியாவின் முதல் மக்களவைத் தேர்தலை அறிக்கை செய்த முன்னாள் PTI மூத்த நிருபர் பகத் ராம் வாட்ஸ் (97), செப்.18 அன்று காலமானார். புது தில்லியின் ஸ்டேட்ஸ்மேன் நிறுவனத்துடன் தனது வாழ்க்கையைத் தொடங்கிய அவர், பின்னர் பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவில் (PTI) இணைந்தார். வாட்ஸ், 'இந்தியாவுக்கு எதிரான வெளிநாட்டு சூழ்ச்சி' என்ற நூலை எழுதியுள்ளார்.

10.எந்த விடுதலைப்போராட்ட வீரரின் பெயரில் இந்திய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான பங்களிப்புத் துறையில் மத்திய அரசு மிகவுயர்ந்த குடிமக்கள் விருதை நிறுவியுள்ளது?

A) பாலகங்காதர திலகர்

B) பீமாராவ் அம்பேத்கர்

**C) சர்தார் வல்லபாய் பட்டேல் ☑**

D) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்




- ✓ இந்திய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு பங்களிப்பதற்கான மிகவுயரிய குடிமக்கள் விருதை சர்தார் வல்லபாய் பட்டேல் பெயரில் மத்திய அரசு நிறுவியுள்ளது. தேசிய ஒற்றுமை & ஒருமைப்பாட்டை மேம்படுத்துதல், வலுவான, ஒற்றுமையான இந்தியா என்ற நெறியை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு பங்களிக்கும், உத்வேகம் ஏற்படுத்தக்கூடிய பணிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது நிறுவப்பட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டு நாள், அதாவது சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாளான அக்.31ஆம் தேதி இந்த விருது அறிவிக்கப்படும்.

- ✓ இந்த விருதுடன் பதக்கமும், பாராட்டுப்பத்திரமும் வழங்கப்படும். ரொக்கம் ஏதும் இதில் இடம்பெறாது. ஆண்டுக்கு மூன்றுக்கு மேற்பட்ட தேசிய ஒற்றுமை விருதுகள் வழங்கப்படமாட்டாது. நாட்டின் அனைத்து குடிமக்களும் இந்த விருது பெறுவதற்கு தகுதி பெற்றவர்களாவர்.

# நடப்பு நிகழ்வுகள்

1.6ஆவது இந்திய நீர் வாரத்திற்கான பங்காண்மை நாடாக உள்ள நாடு எது?

**A)** ஜப்பான் ☑

B) பிரான்சு

C) ஜெர்மனி

D) ஐக்கிய பேரரசு



- ✓ "நீர் ஒத்துழைப்பு – 21ஆம் நூற்றாண்டின் சவாலைக் கையாளுதல் "என்ற தலைப்பில் மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆறாவது இந்திய நீர் வாரத்தை, புதுதில்லியில் உள்ள அறிவியல் மையத்தில்இந்திய குடியரசுத் ,தலைவர் இராம்நாத் கோவிந்த் தொடங்கிவைத்தார்.இந்த ப்பிரம்மாண்ட நிகழ்வுக்கு ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை பங்காண்மை நாடுகளாக இருந்தன.
- ✓ இந்தப்பரப்புரையின் கீழ்இந்திய அரசு இயந்திர ,த்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூத்த மத்திய அரசு அதிகாரிகள் உட்பட அனைவரும் நீர் சேமிப்பு & பாதுகாப்பில் கவனம் செலுத்தும் செயல்பாடுகளை ஊக்குவிப்பர். இதில் பாரம்பரிய நீர்நிலைகளை புனரமைத்தல் ஆகியவை அடங்கும்.

2.துணைநிலை படைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முதல் பெண் அதிகாரியான பொனுங் டோமிங் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

A) மணிப்பூர்

**B)** அருணாச்சல பிரதேசம் ☑

C) மிசோரம்

D) நாகாலாந்து



- ✓ அருணாச்சல பிரதேசத்தைச் சார்ந்த பொனுங் டோமிங், இந்திய இராணுவத்தில் துணைநிலை படைத்தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் பெண் ராணுவ அதிகாரியாக உள்ளார். முன்னதாக, இந்திய விமானப் படையில் 'விங் கமாண்டர்' ஷாலிசா தாமி, வான் படைப்பிரிவொன்றுக்கு தளபதியாக நியமிக்கப்பட்ட முதல் பெண் அதிகாரியாக ஆனார்.

3. 'IAAF Veteran Pin' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்திய விளையாட்டு வீரர் அல்லது வீராங்கனை யார்?

A) விஸ்வநாதன் ஆனந்த்

B) மில்கா சிங்

**C)** PT உஷா ☑

D) அபினவ் பிந்த்ரா



✓ இந்தியாவின் புகழ்பெற்ற முன்னாள் தடகள வீராங்கனையான P T உஷாவுக்கு, சர்வதேச தடகள சம்மேளனம் வழங்கும் (IAAF) 'Veteran Pin' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. கத்தார் தலைநகர் தோகாவில் நடந்த 52ஆவது IAAF மாநாட்டில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

✓ 1984 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில், 400 மீ தடைதாண்டல் இறுதிப்போட்டியில், வெண்கலத்தை 1/100 வினாடியில் P T உஷா தவறவிட்டார். 'பய்யோலி எக்ஸ்பிரஸ்' என அழைக்கப்படும் இவருக்கு, 1983ஆம் ஆண்டில் 'அர்ஜுனா' விருது வழங்கப்பட்டது.

4.கேட்ஸ் அறக்கட்டளையின் 'சேஞ்ச்மேக்கர்' விருதை வென்ற முதல் இந்தியரான பாயல் ஜாங்கிட், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

A) பஞ்சாப்

**B) இராஜஸ்தான் ☑**

C) அருணாசல பிரதேசம்

D) சத்தீஸ்கர்



✓ குழந்தைத் திருமணம் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறைகளை எதிர்த்து போராடியதற்காக, இராஜஸ்தான் மாநிலத்தின் ஹின்ஸ்லா கிராமத்தைச் சேர்ந்த சிறுமி பாயல் ஜாங்கிட்டுக்கு (17) பில்கேட்ஸ் அறக்கட்டளை சார்பில் 'மாற்றத்துக்கு வித்திட்டவர்' விருது வழங்கப்பட்டுள்ளது.

✓ அவருடைய கிராமத்தில் நிலவிய குழந்தைத் திருமண முறை, குழந்தைத் தொழிலாளர் முறை ஆகியவற்றுக்கு எதிராக அவர் தீவிர பரப்புரை மேற்கொண்டார். அவரது கிராமத்துக்கு அருகிலிருந்த சில கிராமங்களிலும் அவர் இந்தப் பரப்புரையை மேற்கொண்டார். அதனால் அந்தப் பகுதிகளில் பல குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்பட்டன. பாயலின் இந்தச் செயலை கௌரவிக்கும் வகையில் அவருக்கு பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை சார்பில் விருது வழங்கப்பட்டது.

5. IAAF தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட செபாஸ்டியன் கோ, எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?

A) ஜெர்மனி

B) பிரான்சு

**C) பிரிட்டன் ☑**

D) ஜப்பான்



✓ தோகாவில் நடந்த 52ஆவது IAAF மாநாட்டின்போது, பிரிட்டனைச் சேர்ந்த செபாஸ்டியன் கோ, சர்வதேச தடகள கூட்டமைப்பு சங்கத்தின் தலைவராக 4 ஆண்டுகளுக்கு இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தவிர, அடில் சுமரிவல்லா (இந்திய தடகள சம்மேளனத்தின் தலைவர்) இரண்டாவது 4 ஆண்டு காலத்திற்கு IAAF கவுன்சில் உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

6. ஒரே T20 போட்டியில் 3 மெய்டன்களை வீசும் முதல் இந்திய கிரிக்கெட் வீராங்கனை யார்?



A) ஜஸ்பிரீத் பும்ரா

B) ஜுலன் கோஸ்வாமி

**C) தீப்தி சர்மா ☑**

D) புவனேஷ்வர் குமார்

✓ தென்னாப்பிரக்க பெண்கள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி மற்றும் தென்னாப்பிரிக்க அணி இடையே ஐந்து T20 போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டி சூரத்தில் உள்ள லாலாபாய் காண்டிராக்டர் மைதானத்தில் நடைபெற்றது.

✓ இந்தப் போட்டியில், டாஸ் வென்ற தென்னாப்பிரிக்க அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இதனைத் தொடர்ந்து, இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில், 8 விக்கெட்கள் இழப்பிற்கு130 இரன்கள் எடுத்தது. 131 இரன்கள் என்ற இலக்குடன் விளையாடிய தென்னாப்ரிக்க அணி 19.5 ஓவரில் 119 இரன்களுக்கு ஆட்டமிழந்து தோல்வியடைந்து. இந்திய அணி 11 இரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணி தரப்பில் தீப்தி சர்மா நான்கு ஓவர்கள் வீசி எட்டு இரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டை வீழ்த்தினார். அத்துடன், Tபோட்டியில் 3 மெய்டன் ஓவர்கள் வீசிய இந்திய வீராங்கனை என்ற சாதனையையும் அவர் படைத்தார்.

7. நடப்பாண்டுக்கான வாழ்வாதார உரிமைகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் யார்?



A) ஹோலி கில்லிபிராண்ட்

B) ஜான் பால் ஜோஸ்

**C) கிரேட்டா துன்பர்க் ☑**

D) ரிதிமா பாண்டே

✓ சுவீடனைச் சார்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரேட்டா துன்பர்க், 'மாற்று நோபல்பரிசு' என்றழைக்கப்படும் வாழ்வாதார உரிமை விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டியதன் அவசியத்தை உலக அரசியல் அரங்கில் உரக்க ஒலிக்கச்செய்தமைக்காக, கிரேட்டா துன்பர்குக்கு 'வாழ்வாதார உரிமை விருது' வழங்கப்படுகிறது.

✓ செல்வி துன்பர்க், இந்த விருதை யானோமாமி மக்களின் பிரேசிலிய பழங்குடித் தலைவர் டேவி கோபெனாவா, சீன பெண்ணுரிமை வழக்குரைஞர் குவோ ஜியான்மெய் மற்றும் மேற்கு சஹாரா மனித உரிமை பாதுகாவலர் அமினாடோ ஹைதர் ஆகியோருடன் பகிர்ந்துகொள்கிறார், இந்நால்வருக்கும் தலா 1 மில்லியன் சுவீட குரோனாக்கள் ($103,000) ரொக்கப்பரிசு வழங்கப்படும்.

8.சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**A) கிறிஸ்டலினா ஜார்ஜீவா ☑**




B) ஸ்காட் மோரிஸ்

C) இம்மானுவேல் மக்ரோன்

D) கிறிஸ்டின் லகார்ட்

✓ பல்கேரிய பொருளாதார வல்லுநர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) புதிய மேலாண்மை இயக்குநராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரத்தில் இருந்து சர்வதேச நாணய நிதியத்தை வழிநடத்தும் முதல் நபராக இவர் இருப்பார். கிறிஸ்டின் லகார்ட்டுக்குப் பிறகு இப்பதவிக்கு வரும் ஜார்ஜீவா, வரும் அக்டோபர் முதல் அடுத்துவரும் ஐந்தாண்டு காலத்திற்கு இப்பதவியை வகிப்பார்.

9.முதலாவது இந்தியா–கரீகாம் தலைவர்களின் உச்சிமாநாடு நடைபெற்ற நகரம் எது?

A) புனே




B) புது தில்லி

C) இலண்டன்

**D) நியூயார்க் ☑**

✓ நியூயார்க்கில் ஐ.நா பொது அவைக்கூட்டத்திற்கு இடையே செப்.25 அன்று கரீபிய சமுதாயக்குழுவின் நாடுகளைச்சேர்ந்த 14 தலைவர்களை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார். இந்தியாவுக்கும், கரீபிய நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மட்டுமல்லாமல், பிராந்திய அளவிலும் உறவுகளைத் தொடர்ந்து வலுப்படுத்த இந்தக்கூட்டம் பயன்படுத்தப்பட்டது.

✓ சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி, பேரிடர் தடுப்பு கட்டமைப்பு ஆகியவற்றில் சேருமாறு கரீபிய நாடுகளுக்கு பிரதமர் மோடி அழைப்புவிடுத்தார். பிரதமர் மோடி கரீபிய நாடுகளின் சமுதாய மேம்பாட்டு திட்டங்களுக்கு $14 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி வழங்குவதாக அறிவித்தார். சூரிய ஆற்றல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான திட்டங்களுக்கு மேலும், $150 மில்லியன் டாலர் கடனுதவி வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

10. 2ஆவது சிங்கப்பூர் – இந்தியா ஹேக்கத்தான் நடைபெறுகிற IIT எது?

**A) ஐஐடி மெட்ராஸ் ☑**

B) ஐஐடி இந்தூர்

C) ஐஐடி தில்லி

D) ஐஐடி பம்பாய்

✓ புத்தாக்கங்களை வளர்த்தெடுப்பதற்காக, சிங்கப்பூர் – இந்தியா ஹேக்கத்தானின் 2ஆவது பதிப்பு, வரும் செப்.28 & 29 ஆகிய தேதிகளில் சென்னையில் உள்ள ஐஐடி மெட்ராஸில் நடத்தப்படும். சுற்றுச்சூழல்,

மருத்துவம், கல்வி ஆகிய மூன்று துறைகளில் இந்தியாவுக்கு தேவையான அம்சங்கள், இப்போதைய சிக்கல்களுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து அதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதற்காக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

- ✓ இந்திய IIT'களிலும், சிங்கப்பூர் என்டியூ பல்கலைக்கழகத்திலும் படிக்கும் மாணவர்கள் 120 பேர் பல்வேறு குழுக்களாக பிரிந்து போட்டியில் பங்கேற்பர். அதில் சிறந்த ஆலோசனைகளை வழங்கிய 3 குழுக்கள் தேர்வுசெய்யப்படும். இப்போட்டியில் வெல்பவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி பரிசுகளை வழங்குவார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

1.எந்நகரத்தில், ஐந்தாவது இந்திய சர்வதேச அறிவியல் விழாவை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது?

**A) கொல்கத்தா ☑**

B) சென்னை

C) புது தில்லி

D) கொச்சி

✓ இந்திய சர்வதேச அறிவியல் விழாவின் (ISSF–2019) ஐந்தாவது பதிப்பானது, "RISEN India – Research, Innovation, and Science Empowering the Nation" என்ற கருப்பொருளுடன் நவம்பர் 5 முதல் 8 வரை கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில், இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 12,000 பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், அதிக எண்ணிக்கையிலான தங்க அட்டைகளை வழங்கிய முதல் இந்திய மாநிலம் எது?

A) மணிப்பூர்

**B) ஜம்மு மற்றும் காஷ்மீர் ☑**

C) மிசோரம்

D) நாகாலாந்து




✓ ஆயுஷ்மான் பாரத்–பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவின் (AB–PMJAY) கீழ், அதிக எண்ணிக்கையிலான தங்க அட்டைகளை (golden card) வழங்கிய இந்தியாவின் முதல் மாநிலமாக ஜம்மு – காஷ்மீர் திகழ்கிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட முதல் 90 நாட்களுக்குள் 11 இலட்சத்துக்கும் மேற்பட்ட தங்க அட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. நாட்டிலேயே மிக அதிகமாக அந்த மாநிலத்தில் உள்ள 60% குடும்பங்கள் குறைந்தது ஒரு தங்க அட்டையையாவது வைத்துள்ளன.

3.டோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டுக்கான விசா அணியின் தடகள உறுப்பினராக ஆன இந்திய விளையாட்டு வீரர் யார்?

A) சச்சின் டெண்டுல்கர்

B) மேரி கோம்

**C) P V சிந்து ☑**

D) அபிநவ் பிந்த்ரா




✓ கொடுப்பனவு நிறுவனமான விசா, உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பான PV சிந்துவை, அடுத்த ஈராண்டுகளுக்கு அதன் விளம்பர தூதராக நியமித்துள்ளது. விளம்பரங்கள் மூலம் நிறுவனத்தை பிரபலப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளுக்கான விசா (VISA) அணியின் உறுப்பினராகவும் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

✓ 1986ஆம் ஆண்டு முதல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்கு விசா நிறுவனம் ஆதரவளித்து வருகிறது. 2032 வரை பிரத்தியேக கொடுப்பனவு கூட்டாளராக இருக்கும் ஓர் ஒப்பந்தத்திலும் விசா கையெழுத்திட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடங்களில் பிரத்தியேகமாக கட்டணம் செலுத்துதல் சம்பந்தப்பட்ட வேலைகளைக் கையாள்வது இந்த விசா நிறுவனம் மட்டுந்தான்.

4.துணிச்சல்மிக்க இதழியல் பணிக்காக வழங்கப்படும் பீட்டர் மேக்லர் விருதை நடப்பாண்டில் வென்றுள்ள பாலோ போரோமெட்டி (Paolo Borrometi), எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?

**A) இத்தாலி ☑**

B) டென்மார்க்

C) சுவீடன்

D) நோர்வே



✓ சிசிலியில் உள்ள ஒரு கொள்ளைக்கும்பலின் செயல்பாட்டைப்பற்றி வெளிக்கொணர்ந்து, அதனால் தாக்கப்பட்டு, தற்போது காவல்துறையின் பாதுகாப்பில் வாழ்ந்துவரும் இத்தாலிய இதழாளரான பாலோ போரோமெட்டி, கிரெய்க் நியூமார்க் இதழியல் பட்டதாரி பள்ளியில் துணிச்சல் மற்றும் நேர்மையான இதழியல் பணிக்காக வழங்கப்படும் மதிப்புமிக்க பீட்டர் மேக்லர் விருதை நடப்பாண்டில் வென்றார்.

5. 'Climate Neutral Now' என்னும் பிரிவில் ஐ.நா. சர்வதேச காலநிலை செயல்பாட்டு விருதை வென்ற இந்திய பெருநிறுவனம் எது?

A) ரிலையன்ஸ்

**B) இன்போசிஸ் ☑**

C) டாடா

D) பிர்லா

✓ இன்போசிஸ் நிறுவனமானது ஐ.நாவின் மதிப்புமிக்க சர்வதேச காலநிலை செயல்பாட்டு விருதை 'Climate Neutral Now' என்னும் பிரிவில் வென்றுள்ளது. இதன்மூலம், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளுக்கு அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனமாக இன்போசிஸ் மாறியுள்ளது. இவ்விருது, வரும் டிசம்பரில் சிலியில் உள்ள சாண்டியாகோவில் நடக்கும் ஐ.நா. காலநிலை மாற்றம் குறித்த மாநாட்டில் (COP 25) இன்போசிஸ் நிறுவனத்துக்கு வழங்கப்படும்.

6. IMD உலக டிஜிட்டல் போட்டித்திறன் தரவரிசை 2019இல், இந்தியாவின் தரநிலை என்ன?

A) 45ஆவது

B) 46ஆவது

**C) 44ஆவது ☑**

D) 48ஆவது



- ✓ IMD உலக டிஜிட்டல் போட்டித்திறன் தரவரிசை 2019இல், இந்தியா 44ஆவது இடத்திற்கு இந்தியா முன்னேறியுள்ளது. இந்தியா, அறிவுசார் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்கும் ஆராய்வதற்கும் தயார்நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளது என இத்தரவரிசையில் கூறப்பட்டுள்ளது.
- ✓ டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், சிங்கப்பூர், சுவீடன் ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. IMD உலக போட்டி மையம் தயாரித்துள்ள தரவரிசைகள், 63 உலக நாடுகளின் திறனையும், முன்னேற்றத்தையும் அளவிட உதவுகிறது.

**7.** குழந்தைகளிடையே உள்ள ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக 'டிக்கி மௌசி – Tikki Mausi' என்ற சின்னத்தை வெளியிட்டுள்ள மாநில அரசு எது?

**A) ஒடிசா ☑**

B) ஜார்க்கண்ட்

C) மேற்கு வங்காளம்

D) பீகார்



- ✓ குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக UNICEF உடன் இணைந்து ஒடிசா அரசாங்கத்தால் 'டிக்கி மௌசி' என்ற சின்னத்தை அறிமுகம் செய்துள்ளது. ஒரு குழந்தையின் இரண்டாவது தாயைக் குறிக்கும் வகையில் இந்தச் சின்னம், 'டிக்கி மௌசி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**8.** சமீபத்தில் காலமான வேணு மாதவ், எந்தப்பிராந்திய திரையுலகில் பிரபல நடிகராக இருந்தார்?

A) ஒடியா

B) மலையாளம்

**C) தெலுங்கு ☑**

D) ஹிந்தி



- ✓ பிரபல தெலுங்கு நகைச்சுவை நடிகரான வேணு மாதவ் (51), செப்டம்பர்.25 அன்று செகந்திராபாத்தில் காலமானார். பலகுரல் கலைஞராகக் கவனம் பெற்றதால், திரைப்பட வாய்ப்பைப்பெற்ற இவர், 170க்கும் மேற்பட்ட தெலுங்கு மற்றும் ஒருசில தமிழ்ப்படங்களில் நடித்துள்ளார். கடைசியாக 2016ஆம் ஆண்டில் 'Dr பரமானந்தையா'ஸ் ஸ்டூடன்ஸ் கேங்' என்கிற திரைப்படத்தில் நடித்தார்.

**9.** ஆராய்ச்சி, கல்வி மற்றும் தொழில்நுட்பத்திற்காக எந்த IIT நிறுவனத்துடன் JNU ஒப்பந்தம் செய்துள்ளது?

A) ஐஐடி மெட்ராஸ்

B) ஐஐடி இந்தூர்

**C) ஐஐடி தில்லி ☑**

D) ஐஐடி பம்பாய்

✓ ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகமானது (JNU) அறிவியல் மற்றும் பிற துறைகளில் ஆராய்ச்சி, கல்வி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகளில் ஒத்துழைப்பு வேண்டி IIT தில்லியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. கூட்டு ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் பிற தொடர்புடைய கல்விசார் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த, ஒருவருக்கொருவர் நூலகங்கள் மற்றும் மத்திய ஆராய்ச்சி வசதிகளை அணுகவும் இது உதவும்.

10.எந்தத் தேதியில், சர்வதேச ஒட்டுமொத்த அணுவாயுத ஒழிப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?

**A)** செப்டம்பர் 26 ☑

B) செப்டம்பர் 25

C) செப்டம்பர் 27

D) செப்டம்பர் 28




✓ பொதுமக்களுக்கும் அவர்களை வழிநடத்தும் தலைவர்களுக்கும் இடையே அணுவாயுதங்களை ஒழிப்பதால் கிடைக்கும் உண்மையான பயன்கள் பற்றியும், அவற்றால் ஏற்படும் சமூகம் மற்றும் பொருளாதார செலவினங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு வாய்ப்பாக சர்வதேச ஒட்டுமொத்த அணுவாயுத ஒழிப்பு நாள் (International Day for the Total Elimination of Nuclear Weapons), ஒவ்வோர் ஆண்டும் செப்.26 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ பன்னாட்டளவில் அணுவாயுதங்களைக் குறைப்பது மிகமுக்கியம் என்பதை உலக சமுதாயத்திற்கு மீண்டும் வலியுறுத்துவதற்கு ஒரு வாய்ப்பை வழங்குவதை இந்த நாளின் நோக்கமாகும்.

## நடப்பு நிகழ்வுகள்


**1.மகாத்மா காந்தி குறித்த 30 சுருள் அளவுள்ள தொகுக்கப்படாத காட்சிகளைக் கண்டுபிடித்துள்ள இந்திய அமைப்பு எது?**

A) NITI ஆயோக்

B) NFDC

**C) NFAI ☑**

D) பாக்ஸ் ஸ்டார் ஸ்டூடியோஸ்



- ✓ மகாராஷ்டிர மாநிலம், புனே நகரத்தில் இயங்கிவரும் தேசிய திரைப்பட ஆவணக்காப்பகம், மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றில் நிகழ்ந்த அரிய நிகழ்வுகள் அடங்கிய 6 மணிநேரங்கள் கொண்ட 30 சுருள்கள் அளவிலான ஆவணப்படங்களைச் சேகரித்துள்ளது. இந்த ஆவணப்படத்தில், 1948ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் அஸ்தியை சென்னையிலிருந்து இரயிலில் இராமேசுவரத்திற்குக் கொண்டுசெல்லும்போது தமிழ்நாட்டு மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தும் அரிய காணொளியும் அடங்கும்.
- ✓ மகாத்மா காந்தி மறைந்து எழுபத்தொரு ஆண்டுகள் கழித்து இந்த காணொளிக் காட்சி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தேசிய திரைப்பட ஆவணக்காப்பம் 30 சுருள்கள் அடங்கிய ஆவணப்படங்களை, உலகப்புகழ்பெற்ற படத்தயாரிப்பு நிறுவனங்களான பாரமவுண்ட், வார்னர், யுனிவர்சல், பார்தே, பிரிட்டிஷ் மூவிடோன் மற்றும் பல்வேறு தனிநபர்களிடமிருந்தும் சேகரித்துள்ளது. 1964ஆம் ஆண்டில், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஊடக அலகாக NFAI நிறுவப்பட்டது.

**2.விண்வெளி நிலையத்திற்கு உலகின் மிகப்பெரிய போக்குவரத்து விண்வெளி ஓடத்தைச் செலுத்தியுள்ள நாடு எது?**

A) இஸ்ரேல்

**B) ஜப்பான் ☑**

C) ஜெர்மனி

D) போலந்து



- ✓ விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மின்கலங்கள், இதர உபகரணங்களுடன் Kounotori8 என்ற ஆளில்லா விண்கலத்தை ஜப்பானின் விண்வெளி ஆய்வு நிறுவனமான JAXA விண்ணில் ஏவியது. தென்மேற்கே உள்ள தனேகஷிமா ஏவுதளத்திலிருந்து H–2B ஏவுகணை மூலம், Kounotori8 விண்ணில் ஏவப்பட்டது.
- ✓ 'Kounotori8' என்பது ஜப்பானிய மொழியில் 'வெள்ளை நாரை' என்பதைக் குறிக்கிறது. இது, ISSஇல் உள்ள விண்வெளி வீரர்களுக்கு சுமார் 5.3 டன் எடையுள்ள பொருட்களை வழங்கும்.

**3.**இந்திய இராணுவ பணியாளர் கமிட்டியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



**A) பிபின் ராவத் ☑**

B) B S தனோவா

C) கரம்பீர் சிங்

D) சுனில் லம்பா

✓ இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி பிபின் ராவத், இந்திய இராணுவ பணியாளர் கமிட்டியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். IAF தலைவர் B S தனோவாவுக்குப் பிறகு பிபின் ராவத் இந்தப் பதவிக்கு வந்துள்ளார். இந்திய இராணுவ பணியாளர் கமிட்டி (COSC) என்பது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைத் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. வழக்கமாக அதன் மூத்த உறுப்பினர் அதன் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

✓ COSCஇன் தலைவர் என்பவர் முப்படைகளின் கூட்டாற்றலை உறுதிப்படுத்துகிறார். மேலும், நாடு எதிர்கொள்ளும் பாதுகாப்புச் சவால்களைச் கையாள்வதற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்குகிறார்.

**4.**சுற்றுலா பிரிவில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான 'சிறந்த மாநில விருதை' பெற்ற மாநிலம் எது?




A) தெலுங்கானா

B) கோவா

C) மத்திய பிரதேசம்

**D) ஆந்திர பிரதேசம் ☑**

✓ உலக சுற்றுலா நாளை முன்னிட்டு 2017–18ஆம் ஆண்டுக்கான தேசிய சுற்றுலா விருதுகளை இந்திய குடியரசு துணைத்தலைவர் வெங்கையா சமீபத்தில் வழங்கினார். அதில், 'ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான சிறந்த மாநிலம்', 'ஆங்கிலத்தில் பதிப்பிப்பதற்கான சிறப்பு விருது' மற்றும் 'சுற்றுலாவுக்குகந்த சிறந்த இரயில் நிலையம் (விசாகப்பட்டினம்)' உள்ளிட்ட பிரிவுகளில் ஆந்திர பிரதேச மாநிலம் மூன்று தேசிய சுற்றுலா விருதுகளை பெற்றது.

✓ சாகச சுற்றுலா பிரிவில், கோவாவும், மத்திய பிரதேசமும் இணைந்து விருதினை வென்றன. திரைப்படம் எடுப்பதற்கு உகந்த மாநிலத்திற்கான விருதை உத்தரகாண்ட் மாநிலம் பெற்றது. தகவல் தொழில்நுட்பத்தின் புதுமையான பயன்பாட்டிற்கான விருதை தெலுங்கானா மாநிலம் வென்றது.

**5.**அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற சாரா டெய்லர், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?



A) மேற்கிந்தியத் தீவுகள்

B) நியூசிலாந்து

**C) இங்கிலாந்து ☑**

D) ஆஸ்திரேலியா

✓ உலகின் சிறந்த விக்கெட் கீப்பர்களுள் ஒருவராகக் கருதப்படும் இங்கிலாந்து விக்கெட் கீப்பர் சாரா டெய்லர், சமீபத்தில், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றார். 2006இல் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் அறிமுகமான சாரா, மூன்றுவித கிரிக்கெட் போட்டிகளிலும் சேர்த்து மொத்தம் 6,553 சர்வதேச இரன்கள் எடுத்துள்ளார். விக்கெட் கீப்பரான சாரா, மொத்தம் 232 விக்கெட் வீழ்ச்சிகள் செய்துள்ளார்.

6.நடப்பாண்டின் உலக சுற்றுலா நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Tourism opens doors for women




B) Tourism and the Digital Transformation

**C) Tourism and Jobs ☑**

D) Tourism: Responding to the Challenge of Climate Change

✓ பன்னாட்டுச் சமூகங்களிடையே சுற்றுலாவின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், உலகெங்கிலும் உள்ள சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதார விழுமியங்களை அது எவ்வாறு பாதிக்கிறது என்பதை நிரூபிப்பதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் செப்.27 அன்று உலக சுற்றுலா நாள் அனுசரிக்கப்படுகிறது. "சுற்றுலா மற்றும் வேலைகள்: அனைவருக்குமான சிறந்த எதிர்காலம்" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

7.மகாராஷ்டிர தேர்தலுக்கான நல்லெண்ண தூதராக தேர்வு செய்யப்பட்டுள்ள நடிகர் யார்?

A) அக்ஷய் குமார்



B) சல்மான் கான்

C) பிரியங்கா சோப்ரா

**D) மாதுரி தீட்சித் ☑**

✓ மகாராஷ்டிர சட்டசபைக்கு அக்.21 அன்று தேர்தல் நடத்தப்பட்டு, அக்.24 அன்று முடிவுகள் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தேர்தலில் மக்கள் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தியும், ஜனநாயக கடமையை நிறைவேற்றும் விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் 'தேர்தல் நல்லெண்ண தூதராக' நடிகை மாதூரி தீட்சித்தை மகாராஷ்டிர தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

✓ இது தொடர்பாக நடிகை மாதூரி தீட்சித் நடித்துள்ள 'Let's Vote' என்ற விழிப்புணர்வு காணொளியையும் அம்மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

8.ஈஸ்வர் சந்திர வித்யாசாகரின் வீட்டில் அருங்காட்சியகம் அமைக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?

A) பீகார்



B) ஜார்க்கண்ட்

**C) மேற்கு வங்கம் ☑**

D) ஒடிசா

✓ 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதியான ஈஸ்வர் சந்திர வித்யாசாகரின் வடக்கு கொல்கத்தா வீட்டில் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க மேற்கு வங்க அரசு முடிவுசெய்துள்ளது. அங்கு அவர் தனது வாழ்வின் கடைசி சில ஆண்டுகளை கழித்தார். பாசிம் மேதினிபூர் மாவட்டத்தில் உள்ள பிர்சிங்காபூர் கிராமத்தில் அவர் பிறந்தது முதல் வடக்கு கொல்கத்தாவில் அவர் மறைந்தது வரை இந்த அருங்காட்சியகம் அவரது வாழ்க்கையை விவரிக்கிறது. அவர் வங்காள மறுமலர்ச்சியில் முக்கிய நபராகவும், ஹிந்து விதவை மறுமணத்துக்கான மிக முக்கியமான பரப்புரையாளராகவும் இருந்தார்.

9. "KAZIND–2019" என்பது இந்தியா மற்றும் எந்நாட்டுக்கும் இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?

**A) கஜகஸ்தான் ☑**

B) கிர்கிஸ்தான்

C) தஜிகிஸ்தான்

D) துர்க்மெனிஸ்தான்



✓ இந்தோ–கஜகஸ்தான் கூட்டு ராணுவப்பயிற்சியான "KAZIND–2019"இன் 4ஆவது பதிப்பு பித்தோகரில் வரும் அக்டோபர்.2 முதல் 15 வரை நடத்தப்படும். மலைப்பாங்கான நிலப்பரப்பில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமளித்து, கூட்டுப்பயிற்சியை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

10. இராமன்சாட் 2 என்ற மிகச்சிறிய அளவிலான செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவிய விண்வெளி நிறுவனம் எது?

**A) நாசா ☑**

B) இஸ்ரோ

C) ஜாக்ஸா

D) ரோஸ்கோஸ்மோஸ்

✓ 17 வயதான இந்திய மாணவர் அபாஸ் சிக்கா வடிவமைத்த 'இராமன்சாட் 2' என்னும் மிகச்சிறிய செயற்கைக்கோளை NASA வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. SPACE குழுமத்தின் நிறுவனரும் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருமான சச்சின் பம்பா மற்றும் அந்நிறுவனத்தின் ஆராய்ச்சிக் குழுமத்தின் உதவியோடு SPACE இந்தியாவுடனான உள்ளுறை பயிற்சியின்போது சிக்கா இந்தச் செயற்கைக்கோளை உருவாக்கினார். சூரியன் மற்றும் விண்வெளியிலிருந்து வரும் கதிர்வீச்சை அளவிடுவதற்கான உபகரணங்களை இது எடுத்துச்செல்கிறது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ பழமையான மரங்கள் மற்றும் பலவகை ரோஜா செடிகளை பராமரிப்பதற்காக, தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத்துறைக்கு, மத்திய அரசு மூன்று 'SKOCH' விருதுகளை வழங்கியுள்ளது.